
கல்கி



KALKI 27-10-1957 30 நயா பைசா



அம்புஜம்மாளின்
காரும்
மோபில்காஸும்



அம்புஜம்மாளின் கார் 1925-லிருந்து ஆமை வேகத்தில் ஊர்ந்து முனகிக்கொண்டுதான் ஓடிக்கொண்டிருந்தது. 'நம்ம கார் ஓடக்கூடியதெல்லாம் இவ்வளவுதான், போ' என்று நம்பி வந்தாள் அம்புஜம்மாள். ஆனால் ஒரு நாள் அது தோட்ட யாத்திரையிலேயே இஞ்சின் அம்பைப் போல் பாய்ந்து சென்றது. அம்புஜம்மாளின் ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. அம்புஜம்மாளின் காரைப்பற்றி நன்கு அறிந்திருந்த அந்த வட்டாரத்து டிரைவர்கள் இந்த அதிசயத்தைக் கண்டதும் 'மோபில்காஸின் மகிமையாகத்தான் இருக்க வேண்டும்' என்றார்கள். அவர்கள் ஊகம் சரியாக இருந்தது.

மோபில்காஸ் . . . சுலபமாக ஓடுவதற்கு மோட்டாருக்கு அவசியமான

ஒரு **ஸ்டான்வாக்** தயாரிப்பு

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

(யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது. கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

V. 1707

கல்கி

பொருளடக்கம்

அரசியல்

கதைகள்

கட்டுரைகள்

பாலர் மலர்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 17 இதழ் 13	தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்	ஹேவிளம்பி ஐப்பசி 11

ஹிந்தி

ஆங்கிலமே பாரத நாட்டின் கேந்திர சர்க்காரின் பாஷையாக இருக்க வேண்டும் என்றும், அந்த அந்தப் பிரதேச மொழிகள் அந்த அந்த நிர்வாகங்களின் பாஷையாக இருக்க வேண்டும் என்றும் நான் சொல்லுவது வெறும் ராஜதந்திரம் என்றும் ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் ஹிந்தி மத்திய சர்க்காரின் பாஷையாகித்தான் தீரவேண்டும் என்றும் சிலர் எண்ணுவது தவறு. நான் சொல்லி வருவது தந்திரம் அல்ல, உண்மை.

ஹிந்தியைத் திணித்துத்தான் ஆகவேண்டும் என்று மத்திய சர்க்கார் பிடிவாதம் செய்வது அதிக மடமையா, அல்லது ஹிந்தியை நாம் படிக்கவே மாட்டோம், அது நமக்கு உதவாது என்று சில தென்னவர்கள் பிடிவாதம் செய்வது அதிக மடமையா என்று தீர்ப்பு சொல்லுவது கடினம். இரண்டும் மடமை என்பது மட்டிலும் உண்மை.

மத்திய சர்க்காரின் யோசனை நிறைவேறாது. ஒற்றுமைக்கு ஒரு கருவி என்று ஹிந்தியை அவர்கள் திணிக்கப் பார்க்கிறார்கள். அது ஒற்றுமைக்கு உதவாது. வேற்றுமைக்கே காரணமாகும். அதனால் அந்த யோசனை மடமையாகும்.

ஹிந்தியை நாம் தமிழுக்குப் பதிலாகவாவது ஆங்கிலத்துக்குப் பதிலாகவாவது ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. சர்க்கார் பாஷை இங்கே தமிழாகவும் வெளியே ஆங்கிலமாகவும் இருப்பது சௌகரியம், நியாயம் என்கிறோம்.

அதனால் அந்த உறுதிப்பாட்டை வைத்துக் கொண்டு ஹிந்தியை நாம் படிக்கமாட்டோம் என்பது தவறு ஆகும். நம்முடைய வாணிப முன்னேற்றத்துக்கு ஹிந்திப் படிப்பு அவசியம். சர்க்கார் மொழி ஒரு வரம்புக்குள் நிற்கும். வியாபாரம் பாமரர்களுக்குள் நடைபெற வேண்டிய விஷயம். அகில இந்திய வாணிபத்தில் நாம் பெரும் பங்கு எடுத்தால்தான் பொருள் நிலையில் முன்னேற்றம் அடைவோம். அதற்கு ஓரளவு ஹிந்தி படித்தல் மிகப் பெரும் பயன் தரும்.

சினிமாப் படம் எடுப்பவர்களைக் கேட்டுப் பார்த்தால் விஷயம் தெரியவரும். ஹிந்திப் படம் எடுத்தால்தான் படத்தின் பரவல் பெருகும் என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அதைப் போலவே சர்க்கார் மொழியைப்பற்றிப் பத்திரிகைக்காரர்களைக் கேட்டுப் பார்த்தால் மத்திய சர்க்காருக்கு விஷயம் புரியும்.

ஆங்கிலப் பத்திரிகைகள் இல்லாவிட்டால் பாரத நாட்டில் ஏதாவது அறிவு ஓட்டம் ஓடுமா! அந்த அந்தப் பிரதேசம் அந்த அந்தப் பிரதேசத்தோடு குறுகி நிற்கும். பிரதேச பாஷைகளின் சுவரைத் தாண்டி அறிவு பரவாது. ஹிந்திப்பத்திரிகைகளை மட்டும் வைத்துக் கொண்டு ஆங்கிலப் பத்திரிகைகளை நீக்கிவிட்டால் பாரத சமுதாயத்தின் தற்கால அறிவு நிலை எப்படியாகும்? கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், பிடிவாதக்காரர்களைக் கண்டு பயப்படாமல் யோசித்துப் பார்த்தால், மத்திய சர்க்காருக்கும் ஞானோதயம் உண்டாகும். பத்திரிகை விஷயத்தில் ஆங்கிலம் எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கும் மேலாகவே அவசியமாகும் சர்க்கார் விவகாரத்தில் ஆங்கிலம்.

பாரதத்தின் தற்கால நிலைமையில் ஆங்கிலத்தை வெறுப்பது மடமை என்பதில் சந்தேகமே இல்லை. குறைந்தபட்சம், காமன்வெல்த் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கும் வரையிலாவது மத்தியசர்க்காரின் நிர்வாகமொழி ஆங்கிலமாக வைத்துக் கொள்ளலாமே!

காமன்வெல்த் சங்கிலியில் இல்லாத அவமானம் ஆங்கிலத்தில் என்ன இருக்கிறது? ஹிந்தி வெறியர்கள் இதை யோசிக்க வேண்டும்.

இராஜகோபாலாச்சாரி

ஆக்க வேலைக்கு அணு விஷமா?

உலகில் பெரிய ஆலைகளையும் இயந்திரங்களையும் நிலக்கரி, பெட்ரோல், மின்சாரம் ஆகியவற்றைக் கொண்டே இயக்கி வந்திருக்கிறார்கள்.

ஆனால் அணுகுண்டு செய்ய ஆரம்பித்ததிலிருந்து அணுவைப் பிளந்து உண்டாகும் சக்தியை அழிவு வேலைகளுக்கு மட்டுமின்றி ஆக்க வேலைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லி வருகிறார்கள். கல்லெண்ணெய், மின்சாரம், நிலக்கரி இவற்றுக்குப் பதிலாக இனி அணுசக்தியை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்கிறார்கள். இந்தப் பேச்சு மேல்நாட்டில் வெகுவேகமாகப் பரவியது. நம் நாட்டிலும் பரவி வருகிறது.

ஆயினும், அணுசக்தியை உண்டாக்கிப் பயன்படுத்துவதற்கு அதிகப் பணச் செலவாகும். அதையும் பொருட்படுத்தாமல் முன்னேற்றம் என்கிற படாடோபத்துக்காகவும் ராணுவ உபயோகத்தை ஜனங்கள் ஆட்சேபிக்காமலிருப்பதற்கு ஒரு மூடு திரையாகவும் அணுச்சேத ஆலைகளை நடத்தி வருகிறார்கள்.

ஆக்க வேலைகளுக்கான அணுசக்தியை உற்பத்தி செய்தாலும் அந்த ஆலைகளிலிருந்து நிச்சயம் விஷம் வெளியில் பரவும்; அந்த ஆலைகளிலிருந்து கழிக்கப்படும் கழிவுப் பொருள்கள் விஷமயமானவை. அவற்றைப் பூமியில் புதைத்தும், ஆற்றில் போட்டும், கடலில் குவித்தும் வருகிறார்கள். இவையெல்லாம் நிரந்தர விஷம்; உலக மக்களின் தேக ஆரோக்கியத்துக்கு நிரந்தரமான கேடு விளைவிப்பவைகளாகும்.


இதைத் தவிர இன்னொரு ஆபத்து இருக்கிறது. ஆக்க வேலைக்கு என்று செய்யப்படும் அணுசக்தி ஆலைகளில் யந்திரக் கோளாறினாலோ, அல்லது ஜாக்கிரதைக் குறைவினாலோ விபத்துக்கள் ஏற்பட ஏதுவுண்டு; ரயில் விபத்துக்களும் விமான விபத்துக்களும் ஒரு சிலரைத்தான் கொல்லும். ஆனால் அணு ஆலை விபத்துக்கள், அந்த ஆலையைச் சுற்றி வெகுதூரம் வரையிலுள்ள மக்களுக்கு ஆபத்துக்கள் உண்டாக்கும். அது அவ்வளவோடு நிற்காது; பரவிக்கொண்டேயிருக்கும்.

அடைகாக்கும் பருவம்



பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன், அமெரிக்க ஜனாதிபதியைச் சந்திக்க அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். புது யோசனைகள் உருவாக உதவிசெய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அழகான ஒட்டகம்!



நான்கு கட்சிகளின் உதவி கொண்டு பாகிஸ்தானில் திரு சுந்திரிகர் மந்திரிசபை அமைத்திருக்கிறார்.

இதை ராஜாஜி பல தடவைகள் எழுதியும் பேசியும் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

சமீபத்தில் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலுமுள்ள பல அணு யந்திரசாலைகளில் இத்தகைய விபரீதங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றைப் பற்றிய செய்திகள் வெளியில் பரவாமல் அந்தந்த சர்க்கார்கள் மூடி மறைத்து வந்திருக்கின்றனர். இந்தச் செய்திகள் பரவினால், ''ஆக்க வேலைக்கு அணுசக்தி வேண்டாம்'' என்று மக்கள் எதிர்ப்பார்கள் என்று பயந்து உண்மையை மறைத்து வருகிறார்கள்.

சென்ற வாரம் 'இங்கிலாந்தில் அணு சக்தியை உற்பத்தி செய்யும் ஆலையொன்றில் ஏதோ கோளாறு ஏற்பட்டு, அணுவிஷம் வெகுதூரம் வரை பரவியிருக்கிறது. இதன் காரணமாக, பசுக்கள் நோய்வாய்ப்பட்டிருக்கின்றன. வெகுதூரம் வரை பசும்பால் விஷ மயமாகி விட்டதாகத் தெரிந்தது. அதனால் இருநூறு மைல் சதுர அளவிலுள்ள மக்கள் பாலை உபயோகிக்காமலிருக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். புல்லும் காய்கறிகளும் விஷ மயமாகி விடுமோ என்று பயந்து விஷம் பரவாமல் இருப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து வருகிறார்கள்.

இப்படிச் சில இடங்களில் ஏற்படும் விபத்துக்களாவது பிடிவாதக்காரர்களுக்குப் புத்தி புகட்டும் என்று நம்புகிறோம்.

மத்தியகேந்திரத்தில் யுத்தம்

சர்க்கரையுள்ள இடத்தில் எறும்பு சுற்றிக்கொண்டிருப்பதுபோல், இந்தக் காலத்தில் பெட்ரோல் கிடைக்கக் கூடிய பிரதேசங்களை வல்லரசுகள் சூழ்ந்து கொள்கின்றன!

சென்ற மகா யுத்தத்துக்குப் பிறகு மத்திய கேந்திர நாடுகள் பல மேற்கத்திய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திர ராஜ்யங்களாக இருந்து வருகின்றன. அவற்றில் ஒன்று சிரியா? சிரியா சுதந்திர நாடாயினும் ருஷ்யாவுடன் நட்புறவு கொண்டுள்ள நாடு. ருஷ்யாவிடமிருந்து ராணுவ உதவியும் மற்ற உதவிகளும் பெற்று வருகிறது!

சென்ற வருஷம் பிரிட்டனும், பிரான்சும் எகிப்தின்மீது போர் தொடுத்ததல்லவா? அப்போது பிரிட்டன் ஏராளமான துருப்புக்களைத் துருக்கியில் குவித்து வைத்தது. சிரியாவின் அண்டை நாடான துருக்கியில் ராணுவ முஸ்தீபுகள் பலமானவுடன் சிரியாவும் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கத் தொடங்கியிருக்கிறது.

இன்னொரு விஷயமும் குறிப்பிட வேண்டும். எகிப்தின்மீது பிரிட்டனும், பிரான்சும் தொடுத்த போரில் அமெரிக்கா கலந்து கொள்ளாமல் நின்றதோடு, அந்த யுத்தத்தை நிறுத்துவதற்கும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டது. இதனால் மத்திய கேந்திரத்திலுள்ள அரபு நாடுகளில் நல்ல பெயர் சம்பாதித்திருந்தது. ஆனால் மத்திய கேந்திரத்தில் பிரிட்டனுடைய ஆதிக்கமோ, பிரான்ஸினுடைய செல்வாக்கோ அற்றுப் போனதும், அந்தச் செல்வாக்கைத் தான் பெற முயன்றது. அங்கு ஏற்பட்டுள்ள ராணுவ 'வெற்றிடத்தை நிரப்பும் பொறுப்பு தன்னைச் சேர்ந்தது' என்று அரபு நாடுகள் சிலவற்றுடன் ராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. இது சிரியா போன்ற மத்திய கேந்திரத்திலுள்ள அரபு நாடுகளிடையே மனக்கசப்பை வளர்த்து விட்டிருக்கிறது.

மத்திய கேந்திரத்தில் இருக்கும் பெட்ரோல் எண்ணெயின் காரணமாக அரபு நாடுகளைத் தங்கள் பிடியிலிருந்து விடுபட்டிருக்க மேற்கத்திய நாடுகள் விரும்பவில்லை.

மொத்தத்தில் இப்பொழுது, சிரியாவிலும், துருக்கியிலும் அந்தந்த நாடுகளின் எல்லைகளில் போருக்குத் தயாராகத் துருப்புக்கள் நிற்கின்றன: எந்தச் சமயமும் போர் மூண்டு விடலாம் போன்ற நிலைதான்! இங்கு போர் மூண்டால் அது ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் மூண்ட சண்டை போல்தான்!

ஆனால் துருக்கி ஜனாதிபதி, தங்களுக்கு சிரியாவைத் தாக்க வேண்டும் என்ற எண்ணம் ஒரு சிறிதும் இல்லை என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். இதனால் உலகில் மீண்டும் சண்டை மூளாது என்று நம்பலாம்!

** ** **

மத்திய கேந்திர நாடுகளில் ருஷ்யாவின் பலம் பெருகி விடுமோ என்று அமெரிக்கா என்னவெல்லாமோ முயற்சிகள் எடுத்து வந்திருக்கிறது! அவை யாவற்றிலும் அமெரிக்க ராஜதந்திரம் தோல்வியே அடைந்திருக்கிறது.

அரபு மன்னர் ஸாவுதுடன் அமெரிக்கா எவ்வளவோ நட்புரிமை பாராட்டி வந்திருக்கிறது. ஆனாலும் துருக்கிக்கும் சிரியாவுக்குமிடையே சண்டை மூண்டால் "நாங்கள் சிரியாவின் பக்கம் தான் சேருவோம்" என்று அரபு மன்னர் கூறிவிட்டார். அரபு மக்கள், தங்கள் நலன்களை மேற்கத்திய வல்லரசுகளுக்கோ, ருஷ்யாவுக்கோ அடகு வைக்கத் தயாராயில்லை.

இப்பொழுது பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் அமெரிக்க ஜனாதிபதியுடன் கொள்கைகள் விஷயமாகச் சர்ச்சை செய்யப் போயிருக்கிறார். இவற்றின் விளைவாக, மத்திய கேந்திரத்தில் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையில் முக்கிய மாறுதல் ஏற்படும் என்று சமாதானம் விரும்பும் நாடுகள் எதிர்பார்க்கின்றன.

செயற்கைக் கோள்

ருஷ்யா வான மண்டலத்திலே செயற்கைச் சந்திரனைச் சுற்ற விட்டு, வெற்றியடைந்து விட்டது என்ற செய்தி வெளியானவுடன் பத்திரிகை நிருபர்கள் ராஜாஜியின் இல்லத்தை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்தார்கள்.

எல்லோருக்கும் ராஜாஜி "ஒன்றும் சொல்லத் தயாராயில்லை" என்று பதில் அளித்து விட்டார்.

ருஷ்யா செயற்கைச் சந்திரனை விட்டு வெற்றி கண்டதில் அமெரிக்காவுக்கு ஒரே குலை நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் ருஷ்யா அமெரிக்காவைவிட வெகு தூரம் முன்னேறிவிட்டதே என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளதோர் குறியில் தாக்கி வெடிக்கும் குண்டுகள் எய்வதில் ருஷ்யா வெற்றி கண்டு விட்டது என்றுதான் ருஷ்யச் சந்திரன் நிரூபிக்கிறது. இதனால் அவர்களுக்கு ருஷ்யாவின் வெற்றி பீதியை உண்டாக்கியிருக்கிறது.

"செயற்கைச் சந்திரனைப் பார்த்து விட்டு, அதைச் செய்த வல்லரசின் சக்தியைக் கண்டு மக்கள் நடுங்குகிறார்கள். அதற்குப் பதிலாக உண்மையான சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் முதலியவற்றையெல்லாம் படைத்த அந்த மாபெரும் சக்தியானை நினைத்துப் பயந்தால், அவனை நினைத்து வணங்கினால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று ராஜாஜி 'சுயராஜ்யா' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

இதைப் படித்ததும் முத்தொள்ளாயிரத்தில் வரும் ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது.

"மன்னிய நாள் மீன் மதிகனலி
என்றிவற்றை
முன்னம் படைத்த ஈசனை—"

[நாள் - கிரகம்; மீன் - நட்சத்திரம்; மதி - சந்திரன்; கனலி - சூரியன்]

என்று அந்தக் கவிஞர் பாடிய ஈசனை நினைத்து நடந்துகொண்டால் உலகம் எவ்வளவு நன்றாக இருக்கும்!

ஈசனை நினைக்கும் எண்ணம் மேனாட்டில் வலுப் பெற்றால்தான் உலகில் உள்ள பல தீங்குகள் ஒழிய வழி பிறக்கும்.

அருள் வாக்கு

மனிதன் தவறுகள் செய்து விடுவது சகஜம். அத் தவற்றை உணர்வதே புண்ணியம்.

'இனிமேல் அத்தகைய கெட்ட காரியம் செய்யக் கூடாது' என்று மனத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும். பலர் தவறி நடந்தாலும் ஒருவன் நல்ல வழியில் நடந்து சென்றானால் அதுவே சமூகத்துக்குக் கௌரவம். நாட்டுக்கு நலன்.

ஏதாகிலும் கஷ்டம் வந்தால் தெய்வத்தை நொந்து கொள்ளுகிறார்கள்; அது சரியல்ல. நமக்குச் சாப்பாடு கொடுப்பவன் ஈசுவரன். எவ்வளவோ பாபத்தை ஜனங்கள் செய்தாலும் ஈசுவரன் அவர்களைக் காப்பாற்றுகிறான்.

ஆனால் எது தனக்கு க்ஷேமமானது, எது கெடுதலைச் செய்வது என்பதை மனிதன் அறிந்து கொள்ள முடியாது. அது ஈசுவரனுக்குத்தான் தெரியும். இப்பொழுது ஒரு கஷ்டம் நேர்ந்தாலும் அதுவே பின்னால் ஒரு சுகத்துக்குக் காரணமாகலாம். முன்னால் என்ன நடந்திருக்கிறது, பின்னால் என்ன நடக்கவிருக்கிறது என்பது தெரியாத நிலையில் இடையில் ஏற்பட்டதை நொந்து கொள்வது தவறு. எக்காலத்திலும் பகவான் நமக்குப் பந்துவாக இருக்கிறான். பெற்ற தாய் தந்தையர்கூட நிலையில்லை. ஆண்டவன் நமக்கு உற்றார், உறவினன், அன்பன். அவனை நினைத்தால் நித்தியமான ஆனந்தம் உண்டு.

மாணிக்கவாசகர் மனம் உருகி அனுபவித்திருக்கிறார். அவர் காலத்தில் ஈழ நாட்டு அரசன் புத்த மதத்தைப் பின்பற்றியவனாயினும் சிதம்பரம் வந்து மாணிக்கவாசகரைத் தரிசித்து அவர் அருளைப் பெற்றான். சைவ மதத்தைப் பின்பற்றினான்.

புத்த மதப்படி தத்துவம் சூன்யம். மோக்ஷம் என்பது நிர்வாணம். அதாவது ஒன்றுமில்லாமலிருக்கும் நிலை என்பார்கள்.

புத்த மதப்படி சீலம்தான் முக்கியம். வைதிக மதத்தில் இந்தச் சீலத்தை வற்புறுத்தாமல் இல்லை.

ஆனால் சீலம் எப்படி வரும்? கர்மானுஷ்டானங்களைச் செய்து சீலத்தை வளர்க்க வேண்டும். 'சீலம் போதாதா? அனுஷ்டானமெல்லாம் எதற்கு?' என்று கேட்பதற்கில்லை. பால் போதுமே, பசு எதற்கு என்று சொல்வதற்கில்லை!

அனுஷ்டானத்திலிருந்துதான் சித்த சுத்தி வரும். சித்த சுத்தியிலிருந்துதான் பக்தி உண்டாகும்!

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடிபீடம்.

கலந்தன நெஞ்சம்

அவள் வாய் திறந்து பேசவில்லை ; ஆனால் நீண்ட இமைகளுடைய அவள் இரண்டு கரிய பெரிய விழிகளும் பேசின. உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சி காரணமாக அவள் மெல்லிதழ்கள் மெதுவாகத் துடித்தன.

உள்ளக் கருத்தை மொழிகளால் வெளியிட முயலும் போது அந்தச் செய்கையானது புதிதாக ஒன்றைப் புனைவது போலவும், கலவையில்லாத மொழிபெயர்ப்பு போலவும் அமைந்துவிடுகிறது. சில வேளைகளில் அதன் உணர்ச்சியே மாறி விடுகிறது. உள்ளத்தில் உண்மை ஒளியைச் சொல்லும் திறம் வார்த்தைகளுக்கு இல்லாமையால் தவறுகள் நேர்ந்து விடுகின்றன. ஆனால் அந்தக் கரிய விழிகளுக்கோ எந்த மொழியும் வேண்டியதில்லை. அவற்றிலே இதயத்தின் இயற்கையான ஒளி வீசுகிறது. கற்பனைக்கெட்டாத அந்த அழகு விழிகளில் மனோபாவம் விரிகிறது ; மூடிக் குவிகிறது ; மிக்க ஒளியுடன் சுழலுகிறது; மெதுவாக மறைகிறது. சில வேளைகளில் அஸ்தமிக்கும் சந்திரன் போல வெறித்து நோக்குகிறது ; சில வேளைகளில் வேகம் கொண்ட, அமைதியற்ற மின்னலைப் போல் திசைவெளிகளில் மின்னிச் செல்கிறது.

உண்மையான காதலை எடுத்துக் கூறுவதற்கு விழிகளுக்கென்று தனியான ஒருமொழி உண்டு. அது எல்லையற்றது; கடலைவிட ஆழமுடையது; நிர்மலமான வானவெளியைப் போன்றது. உதயசூரியனின் ஒளியும், மாலைச் சூரியனின் மயக்கமும் கொண்டது.

அந்தக் கரிய விழிகளின் அதிசய சக்தியைப் புரிந்து கொண்டுதானோ என்னவோ அவளுடன் பேசுவதற்கு அவன் பயந்து கொண்டிருந்தான். அவள் நடுப் பகலின் தனிமை போல ஒரு துணையுமின்றி மௌனமாக அங்கு வந்து நின்று கொண்டிருந்தாள்.

இவர்கள் இருவரும் தங்களைச் சுற்றியுள்ள பொருள்களுடன் ஏதாவது ஒரு வகையில் உறவு கொண்டிருந்தார்கள். அவள் நின்று கொண்டிருந்த மரம் நெருங்கிய நிழலை விரித்தது. தெய்வ மங்கையைப் போல அவள் தன்னை மறந்து நின்று கொண்டிருந்தாள்.

ஒருகணம் அவள் இதயத்தில் ஒரு புது உணர்ச்சி பொங்கியது. தூரத்தில் தெரிந்த ஒரு புது உலகத்தைப் பார்த்தாள். பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்தாள். அந்த வெளியில் அவள் எதைத் தேடினாளோ, நிர்மலமான நீலவானம் அவளைப் போலவே தனிமையாக இருப்பதுபோல் தோன்றியது. இளமையின் ரகசியத்தையும், இன்பத்தையும் துக்கத்தையும் கடந்த அந்த வெளியில் ஒரு மௌனம் நிலவியது. அவளுடைய உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு ஒரே ஒரு வார்த்தை கூட சொல்ல முடியாமல் இருந்தது.

ஆசை ததும்பும் அந்தப் பெண் இன்பம் பொங்கும் எழிலுலகம் ஒன்றை எதிர்பார்த்துக்கொண்டு நின்றாள்.

உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க நெற்கதிர் கட்டை அருகில் வைத்துக் கொண்டு அவன் வரப்பில் உட்கார்ந்திருந்தான். உழைத்து உழைத்து உரமேறிய அவன் கைகள் வெண்கல விக்கிரகம்போல் உறுதியாக இருந்தன. இந்த உலகில் ஏக சக்ராதிபதி போல் தலையில் கிரீடம் சூட்டிக்கொண்டிருந்தான். ஆம், நாலு முழத் துண்டைத்தான் அவ்வாறு கட்டிக்கொண்டிருந்தான். பரந்த மார்பில் வீரப் பதக்கம் போல் ஒரு தங்கத் தாயத்து மின்னிக் கொண்டிருந்தது. ஓலை வேய்ந்த அவன் வீடும், மாட்டுத் தொழுவமும், மாவும் பலாவும், வாழையும் கூடிய தோட்டமும், பொன் கொழிக்கும் வயல் வெளியும் அவன் மனத்தைக் கவரவில்லை.

வயல்வெளியின் கலகலப்பும், வண்டுகளின் ரீங்காரமும், பட்சிகளின் பாட்டொலியும், இலைகளின் சலசலப்பும் ஒன்றுகூடிச் சூழ்ந்துள்ள சூழ்நிலையில், இடையில் கூடையுடன் ஒய்யாரமாக நிற்கும் அந்தப் பெண் தெய்வத்தைப் பார்த்தான். பேசும் பொற்சித்திரம் பேசாது நின்று கொண்டிருக்கும் அழகைக் கவனித்தான். பேசாமல் பேசுகின்ற அவள் கரிய விழிகளை நோக்கினான். இந்தச் சமயத்தில் அந்தத் தெய்வ மங்கையும் அவனைப் பார்த்தாள். அவனைப் பார்க்கத்தானே அவள் அங்கு தனிமையில் வந்தாள்; அவர்கள் கண்கள் சந்தித்தன. அவ்வளவுதான்; அவர்களுடைய இதயங்கள் கலந்து விட்டன.

"கண்டன உண் கண்
கலந்தன நன்னெஞ்சம்"

இந்த அருமையான காட்சியைத்தான் இவ்வார அட்டையில் வண்ண ஓவியமாக வரைந்திருக்கிறார் ஓவியர் ரமணி.

சரித்திர முக்கியத்துவ சம்பவம்

ரஜனி

—கொழும்பு, அக்டோபர் 18

இலங்கையின் சமீப கால வரலாற்றில் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வைபவம் தமிழர் வாழும் கிழக்கு மாகாணத்தில் இவ்வாரம் நடைபெற்றது. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கை பெற்ற சுதந்திரத்தைச் சகல அம்சங்களிலும் உண்மையான சுதந்திரமாக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடைசிச் சின்னமும் இவ்வாரம் அகற்றப்பட்டது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழிருந்த உலகப் பிரசித்தி பெற்ற கடற்படைத் தளமாகிய திருகோணமலைத் தளம் உத்தியோக பூர்வமாக இலங்கை அரசாங்கத்தினிடம் கை மாற்றிக் கொடுக்கப்பட்டது. இதையடுத்து, கட்டு நாயகா என்னுமிடத்தில் இருக்கும் விமானப் படைத்தளமும் இலங்கைக்குக் கை மாற இருக்கிறது?

திருகோணமலை இன்று நேற்றல்ல, பல ஆயிரம் ஆண்டுகளாக, இலங்கையின் சரித்திர காலத்திலிருந்து விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமும் சிவஸ்தலமுமாக இருந்து வந்திருக்கிறது. இராவணனும் அவனுடைய தாயாரும் பூஜித்ததாகக் கூறப்படும் கோணேசர் ஆலயம் இருந்தது இந்த நகரத்தில் தான். சென்ற நானூறு ஆண்டுகளாகத் திருகோணமலை டச்சு, போர்ச்சுகீஸ், பிரஞ்சு, பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்துவிட்டு இப்பொழுதுதான் இலங்கை மக்களாட்சிக்குத் திரும்பி வந்து சேர்ந்திருக்கிறது. மூன்று பக்கங்களிலும் இயற்கைப் பாதுகாப்புக்காக மலைப்பாறைகளுடன் கூடிய திருகோணமலைத் துறைமுகத்தில் போர்ச்சுகீசியர்கள் கடற்படைத்தளத்தை முதலில் அமைத்தார்கள். புராதனப் பெருமை வாய்ந்த கோணேசர் ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கி, அந்தக் கற்களைக் கொண்டே பிரடரிக் கோட்டையைக் கட்டினர். ஆனால் நெடுங் காலம் அவர்கள் அங்கு வாழவில்லை. இலங்கையில் பிரிட்டிஷ் ஆதிக்கம் மேலோங்கிய பொழுது, அவர்கள் திருமலைத்தளம் கீழ்த் திசையிலேயே மிக மிக பலம் பொருந்திய கடற்படைத் தளமாக்கினார்கள். சென்ற இரண்டாவது உலக யுத்தத்தில் சிங்கப்பூர் வீழ்ச்சியடைந்த பிறகு திருகோணமலையே நேச நாடுகளுக்கு முக்கிய முன்னணித் தளமாயிருந்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சொட்டு ரத்தமும் சிந்தாமல் இலங்கை சுதந்திரமடைந்தபொழுது பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி திருமலை கடற்படைத்தளமும் கட்டு நாயகா விமானத்தளமும் பரஸ்பர சம்மதத்தின்மீது பிரிட்டன் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இலங்கை விரும்பினால் மறுகணமே இந்தத் தளங்களை பிரிட்டன் காலிசெய்து விடுமென்று இலங்கை அரசாங்கம் பலமுறை கூறியபொழுதிலும் அதை எதிர்க்கட்சியினரும் வெளி உலகமும் நம்புவதாயில்லை. ஏகாதிபத்திய அடிமைச் சின்னங்களாகவே இவை இருந்து வந்தன. தவிர, ஒரு சமயம் இந்தியா படையெடுத்து வந்தால் தங்களைப் பாதுகாக்க பிரிட்டிஷ் நண்பர்கள் வேண்டுமென்றும், இதை உத்தேசித்தே இலங்கைத் தளங்களை பிரிட்டிஷ் பொறுப்பில் வைத்திருப்பதாயும் முன்னாள் பிரதம மந்திரியான ஸர் ஜான் கொத்தலாவலை பொறுப்பில்லாமல் பல சந்தர்ப்பங்களில் பேசியது பொதுஜன சந்தேகங்களைப் பலப்படுத்துவதா யிருந்தது. இத்துடன் இலங்கையில் பிரிட்டிஷ்தளங்கள் இருப்பது இந் நாட்டின் நடுநிலைமைக் கொள்கையைக் கேலிக்கூத்தாக்குவதாகவும் இருந்தது.

இது மாதிரியான சூழ்நிலையில்தான் ஸ்ரீ பண்டாரநாயகா பதவிக்கு வந்தவுடன் இலங்கைத் தளங்களிலிருந்து பிரிட்டிஷ் அதிகாரத்தை வெளியேற்றுவதே தமது முதல் நடவடிக்கையாயிருக்குமென்று அறிவித்தார். இதையொட்டி இலங்கை அரசாங்கத்துக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குமிடையில் நீடித்த பேச்சு வார்த்தைகள் நடந்து சுமுகமாக முடிந்தன. இவ்வாரம் திருமலை கடற்படைத் தளத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கையிடம் ஒப்படைத்துத் தனது அதிகாரத்தைக் கௌரவத்துடன் வாபஸ் பெற்றுக் கொண்டது. நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் சுதந்திர இலங்கையின் கொடி சரித்திரப் பிரசித்திபெற்ற திருமலை கடற்படைத் தளத்தில் கம்பீரமாகப் பறக்கவிடப்பட்டது.

இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வைபவத்தில் பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா பேசினார். சமாதான முறையில் பிரிட்டிஷ் அதிகாரம் வாபஸாகியது. இரு நாடுகளுக்குமுள்ள நட்பை மேலும் பலப்படுத்தி யிருப்பதாகவும் திருகோணமலைத் துறைமுகத்தின் ஒரு பகுதியை வர்த்தகத் துறைமுகமாக்க விரைவில் நடவடிக்கையெடுப்பதாகவும் சொன்னார்.

கொழும்புத் துறைமுகத்தில் நெருக்கடி அதிகமிருப்பதால் திருகோணமலை துறைமுகத்தின் ஒரு பகுதியை வர்த்தகத் துறையாக்குவதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அப்படிச் செய்தால் தமிழர் வாழும் பிரதேசம் வளம்பெறுவதற்குப் பேருதவி செய்வதாயிருக்கும். இதே சமயத்தில் தலைமுறை தத்துவமாக, தமிழ் மக்கள் பெரும்பான்மையோர்களாக வசிக்கும் கிழக்கு மாகாணத்தில் அவர்களைச் சிறுபான்மையோர்களாக்குவதற்காக ஏராளமான சிங்களவர்களை அங்கு கொண்டு போய் அரசாங்கம் குடியேற்றுவது கவலை தருவதாயிருக்கிறது.

இந்த விபரீத நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் இப்பொழுதாவது கைவிடுமென்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

வள்ளுவர்

முனிவர் எழுதிய பாட்டுக்களை இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின் நான் படித்து அவற்றில் நான் கண்ட பொருளை எழுதுகிறேன். குற்றங்கள் பல இருக்கும். பெரியோர்கள் மன்னிப்பார்கள்.

• • •

ஒரு காலத்தில் எழுதியது அநேகமாக மற்றொரு காலத்துக்குப் பொருந்தாது. ஆயினும் சில விஷயங்கள் எக்காலத்துக்கும் உண்மை. அதிலும் சில மேதாவிகளின் கருத்துக்கள் பல்லாண்டுகள் கழிந்தும் உண்மையாகவே நிற்கும் கருத்துக்களாக இருக்கும்.

முனிவர் வள்ளுவரின் வாசகம் இத்தகையது. அவர் பாதங்களை மனத்தால் தொட்டு வணக்கம் செலுத்தி ஆரம்பிக்கிறேன்.

• • •

நாம் சம்பாதித்துச் சேர்த்து வைக்கும் எந்தச் செல்வமும், தர்மத்துக்கு ஈடாகாது. அறநெறியில் நடத்திய வாழ்க்கையினால் நாம் அடையும் நலனுக்கு ஈடாகாது. தர்மமே செல்வத்தில் செல்வம். தர்மத்தை ஒருவன் மறந்து விட்டால் அதனால் அவனுக்கு உண்டாகும் தீமையைப் போல் வேறு எந்தத் துரதிருஷ்டமும் இல்லை.



வாசகம்

அறத்தினூஉங்கு ஆக்கமும்
இல்லை—அதனை
மறத்தலினூஉங்கு இல்லை
கேடு.

அறத்தினை "மறத்தல்" என்றார். புறக்கணித்தல் என்று சொல்லவில்லை. மறந்து விடுவதனால் அல்லவோ நாம் அநீதியெல்லாம் செய்கிறோம். கொஞ்சம் நினைப்பில் வைத்தோமானால் அநீதிக்குள் செல்ல மாட்டோம் என்று முனிவர் எண்ணுகிறார்.

செல்வத்தை இழந்தால் அதனால் வரும் கேட்டைவிட மிகப் பெருங் கேட்டை அடைவோம், அறத்தை மறந்து விட்டால்.

* * *

ஒல்லும் வகையான்
அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம்
செயல்.


'செயல்' என்பது முன்னிலை ஏவல். 'செய்' என்று இந்தக் காலத்தில் சொல்லுவோம்.

"அற வழியினின்று தப்பிச் செல்லாதே; உன்னுடைய பொருளுக்கும் சக்திக்கும் எவ்வளவு முடியுமோ அந்த அளவில் அந்தப் பாதையைப் பிடித்துச் செல்!" என்கிறார் முனிவர். இதற்குமேல் அவர் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை.

தருமம் என்றால் பயப்பட்டுத் தூர நிற்க வேண்டியதில்லை. நம்மால் அந்த மார்க்கத்தில் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் சென்றால் முனிவருக்குத் திருப்தி.

வள்ளுவரின் சிறப்பு என்னவென்றால், குறிக்கோளை விட்டுவிடாமல் அதை இளக்கி, சாதாரண மக்களும் வாழ்க்கையில் கடைப்பிடித்துச் செல்லும் வகையில் உபதேசிப்பார். நம்மால் ஆகாத காரியம் அல்ல என்பதை உணரும்படி உபதேசிப்பார். "ஒல்லும் வகையான்" செய், "செல்லும் வாய் எல்லாம்" செய். 'அதற்கு மேல் நான் கேட்கவில்லை' என்கிறார்.

ராஜாஜி



வட்ட மேஜை

அற்புத விளக்கு

திரு அகிலன் அவர்கள் ஏற்றியிருக்கும் 'பாவை விளக்கு' மிகவும் அழகான அற்புதப் பாவை விளக்காகும். தேவகி, கௌரி, செங்கமலம் ஆகிய பாவைகளிடையே தணிகாசலம் எவ்விதம் தாழ்மை என்னும் பாவத்தினுல் பீடிக்கப்பட்டு, சந்தர்ப்பச் சூழ்நிலையால், வறுமை, துன்பம், இடுக்கான சோதனைகள், அவமானம் ஆகிய இன்னல்கள் ஏற்படுகின்றனவோ, அவ்விதம் வாழ்க்கையின் ஒரு சிறு பகுதியை எடுத்துக் காட்டும் சிறந்த நிகழ்ச்சிகளாகும். அன்பரின் அற்புத விளக்கு மிகவும் அழகான முறையில் அமைந்துள்ளது.

அம்மனூர்
29—9—57 ச. தம்பிராஜ்

சர்க்கார் கவனிக்குமா?

தென்னுற்காடு ஜில்லாவில் உள்ள பஸ் ஸ்டாண்ட்களில் பஸ்ஸில் ஏறிய பிரயாணிகளுக்கு டிக்கெட் கொடுப்பதில்லை. புரோக்கர்கள் தொல்லை அதிகம். அவர்கள் இட்டது சட்டமாக இருக்கிறது. மோட்டார் விதிகளின்படி கண்டக்டர்தான் பஸ்ஸில் ஏறுகிற பிரயாணிகளுக்கு டிக்கட் கொடுக்க வேண்டும். ஆனுல் ஸ்டாண்ட் புரோக்கர் எங்கு எப்போது டிக்கெட் கொடுப்பார் என்பது தெரியாது. பிரயாணிகள் பஸ்ஸில் ஏறிக் கொண்டிருந்தால் டிக்கெட் இல்லாமல் வண்டியிலிருந்து இறக்கிவிடுகிறுர்கள். இத்துடன் பிரயாணிகளைக் கழுத்தைப் பிடித்து இறக்கி விடுகிறுர்கள். புரோக்கர்களால்தான் இந்தத் தொல்லை ஏற்படுகிறது. பஸ்ஸிலே கண்டக்டர்கள்தான் டிக்கெட் கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் உடனே பஸ் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

பாதிரப்புலியூர்
1—10—57 பி. ஆர். எஸ். ராமன்

மலைத்தோட்ட வருமானவரி

மலைத் தோட்ட வருமான வரி விதிக்கும் முறையில் பல ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. உதாரணமாக ஒரு குடும்பத்துத் தலைவனுக்குத் (தந்தை) தமது பெயரில் சுமார் இருபது முப்பது ஏக்கராவுக்குட்பட்ட தோட்டங்கள் இருக்கலாம். ஆனுல் உண்மையில் அந்தச் சொத்தைத் தனிக் குடித்தனம் நடத்தும் அவரது குமாரர்கள் அனுபவித்து வருவார்கள். தந்தை இறந்த பின்புதான் குமாரர்களுக்கு வழக்கமாகச் சிட்டாவில் பட்டா தாக்கல் ஆகும். ஆனுல் அவர்கள் தனித் தனியே குடும்பம் நடத்தினுலும், அனுபவித்து வந்தாலும் விவசாய வருமான வரி அதிகாரிகள், அதை ஒப்புக் கொள்ளாமல் தஸ்தாவேஜிகள் இல்லை என்ற ஒரே காரணத்தைக் காட்டி, அதை ஏக குடும்பம் என்று கருதி அவர்களுக்குத் தங்கள் மனத்துக்கு இசைந்தபடி வரி விதிக்கிறுர்கள். அதுவும் மேற்படியார்கள் கணக்கு கொடுப்பதற்கும் கஷ்டமாயிருக்கிறது. காரணம் அவர்கள் தனித்தனியே வசிப்பதாலும், படிப்பு அதிகம் இல்லாத காரணமாகவும் ஏகமாகக் கணக்கு வைக்க முடியாது.

இந்த முறையை ஒழித்து, நிலவரி வசூல், ஏக்ரா ஒன்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்து, ஏக்கரா வீதம் வரி செலுத்த வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு போட்டால் அவர்களின் சொத்துக்கேற்ப வரி கிடைக்கும். இதில் ஊழலோ, வஞ்சமோ, வஞ்சனையோ ஏற்பட இடம் இல்லை.

நீலகிரி
6-9-57 இ. மாதன்

வெளி வேலைக்கு மனு

பொது ஊழியர்கள் வெளி வேலைக்கு மனு அனுப்ப வேண்டுமாயின், இலாகாத் தலைவர்கள் மூலமாக அனுப்ப வேண்டும்—என்று ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. மனு அனுப்புவது இலாகாத் தலைவர்களின் விருப்பத்துக்கு விடப்பட்டிருக்கிறது. அதே வேலைக்கு மனுப் போட்டால், பொது நலனைக் கருதி நிறுத்தி வைத்தால், அதில் நியாயம் இருக்கிறது. வேறு வேலை—உயர் வேலையாக இருக்கும் பொழுது மனுவை நிறுத்தி வைப்பது நல்லதா என்பதை இலாகாத் தலைவர்கள் மனிதாபிமானத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இது பற்றிப் பொதுப் பணித் துறையினர் கட்டளைகள் பிறப்பிக்க வேண்டும்.

சென்னை
5-10-57 சி. பொன்னுசாமி

முதுகுளத்தூரில் மூண்ட தீ

கல்கியில் 'வெளியான 'முதுகுளத்தூரில் மூண்ட தீ' என்னும் தலையங்கம் மிகத் தெளிவாகவும் நடுநிலைமையுடனும் எழுதப்பட்டிருக்கிறது. கடந்த தேர்தலின் எதிரொலிதான் இப்பயங்கர நிகழ்ச்சிகள். புகைந்து கொண்டிருந்தது, இப்பொழுது பெரு நெருப்பாகப் பற்றி எரிகிறது. ஜாதி இனத்துவேஷங்கள் இருக்கும் வரை, தேர்தல்களினுல் எத்தகைய பயனுமில்லை.

காந்தியடிகள் முன்பு ஒருமுறை தேர்தலைப் பற்றி எழுதும்போது "ஜாதியும் இனமும் நம் மனத்தை விட்டு அகலாமல் நம்முடைய தேர்தல்களை ஆட்கொள்ளும் வரை பெண்கள் அவற்றில் கலந்து கொள்ளாமல் விலகி நின்று அதன் மூலம் தங்கள் கௌரவத்தை வளர்த்து வருவதே நல்ல யோசனை. ஜாதி, இனம் ஆகியவற்றை மனத்தினின்று துரத்தி விட்டால் அவற்றை வைத்து எதையும் செய்ய மாட்டோம். அதற்குச் சிறந்த வழி ஹரிஜனங்களிலும் ஹரிஜனங்களாகத் தோட்டிகளாக ஆவதே ஆகும்" என்று எழுதினர். எனவே பாரத நாட்டுத் தந்தை காந்தி மகானின் கனவு நிறைவேற, நமது ஜாதி, மத, இன வேற்றுமைகளை மறந்து, 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்னும் மகாகவி பாரதியின் வாக்குப்படி மக்கள் வாழ வழிசெய்ய வேண்டும்.

நாச்சியார் கோவில்
30—9—57 கப.கோ. நாராயணசாமி

பலன் கிடைக்குமா?

மயிலாப்பூர் குளத்தங்கரையி லிருந்து 12-ஏ பஸ் லஸ், ஆந்திர மஹிலா, வார்ரெண்ட் ரோட், அபிராமபுரம், தேனும்பேட்டை மார்க்கமாக மாம்பலத்தை அடைகிறது. வார்ரெண்ட் ரோட், அபிராமபுரம் முதலிய பகுதிகளிலுள்ள ஜனங்களின் சௌகர்யத்துக்காக மேற்படி பஸ் இந்த மார்க்கமாகச் செல்லுகிறது. ஆனால் பவர் ஹவுஸ், பாண்டி பஜார், மாம்பலம் செல்லுபவர்களை லஸ்ஸில் ஏராளமாக ஏற்றி விடுவதால் இந்த பஸ் வார்ரெண்ட் ரோட், அபிராமபுரம் முதலிய இடங்களில் அநேக சமயங்களில் நிற்காமல் சென்று விடுகிறது. மேலும் அரைமணி நேரத்துக்கு ஒரு பஸ் வருவதால் அங்குள்ள மக்களுக்கு இடம் கிடைப்பதில்லை. ஒரு பஸ் கிடைக்காவில்லையென்றால் பிரயாணிகள் மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள். ஆகையால் அதிகாரிகள் குறைந்தது இந்த பேர்களின் இடங்களையாவது இந்தப் பகுதி மக்களுக்கு ஒதுக்கி வைத்தால் மிகவும் நன்றாயிருக்கும். இதனால் பவர் ஹவுஸ், பாண்டி பஜார் முதலிய இடங்களுக்குச் செல்பவர்களுக்கு ஒரு குறையும் ஏற்படாது. ஏனெனில் அவர்களுக்கு 12, 12B முதலிய பஸ்கள் அடிக்கடி கிடைக்கும். இந்த அனுபவம் சமீபத்தில் நாங்கள் அபிராமபுரம் சென்றதால் ஏற்பட்டது. மேற்படி வேண்டுகோளுக்குப் பலன் கிடைக்குமா?

பல்லாவரம் — ஸ்ரீஎன். ராமமூர்த்தி
30—9—57 — என். பாலசுப்பிரமணியன்

வழிகாட்டும் உத்தமர்

கல்கி காந்தி ஜயந்தி மலரைப் படித்து மகிழ்ந்த பல்லாயிரக்கணக்கான கல்கி வாசகர்களில் நானும் ஒருவன் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதில் நம் அருந்தலைவர் ராஜாஜியின் தலையங்கக் கட்டுரையாகிய 'வாழ்வு உயர வழி' பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. சாதிப் பூசல்களாலும், கட்சி பேதங்களாலும் நாட்டின் நலன் ஊசலாடும் இன்று, நம் நாட்டின் ஞானக் கண்ணையும் அறிவுச் சுடராயும் விளங்கும் நம் ராஜாஜியின் இந்தக் கட்டுரையை, எப்படிக் காந்திஜியின் கையெழுத்து பல மொழிகளிலும் எழுதியிருப்பதைப் பிரசுரித்திருக்கிறீர்களோ, அப்படியே நம் நாட்டின் எல்லா மொழிகளிலும் பிரசுரிக்க வேண்டும் என்பது என்னுடைய அவா.

தெய்வ பக்தியில்லாத சுச்ச வீடு பாபத்தி னெருக்கியவுடன் நிரம்பிப் போகும் என்று ராஜாஜி எழுதியிருக்கிறார். ஏசுநாதரும் நல்ல அஸ்திவாரம் இல்லாத வீடு வெள்ளத்திலே அழிந்துபோகும் என்றார். பெரியோர்களின் சிந்தனையும் சொல்லும் ஒன்றுபட்டவை என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி.

எரவாடா உபவாசத்தின்போது அண்ணல் காந்திஜியின் உயிர் மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருந்தபோது, ராஜாஜியின் சமயோசித யோசனையால் காக்கப்பட்டதைப் படித்தபோது என் நெஞ்சம் நெகிழ்ந்தது. இன்னும் தாழ்வுற்று இருக்கும் நம் தேச மக்களுக்கு, வாழ்விக்க வழிகாட்டும் உத்தமர் இன்று காந்திஜிக்குப் பின்னர் ராஜாஜி இருக்கின்றார் என்பது நமது பெருமிதத்துக்கு உரியதாகும். அடிமைத் தளையிலிருந்து மீண்டும், இன்னும் வறுமைத்தளையிலிருந்து மீளாத நம்முடைய மக்களுக்கு வழிகாட்டும் ராஜாஜி நீடுழி வாழ இறைவன் அருளை இறைஞ்சுகின்றேன்.

பூண்டி — டாக்டர் மாணிக்கவாசகம்
5—10—57

ஆட்சி மொழி


'மாணவர்களின் எழுச்சி' என்ற தலையங்கத்தின் கீழ் இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஆக்கினால் அதனால் வரும் இன்னல்கள் எவை என்பதையும், அதனால் தென்னாட்டு மக்களின் வாழ்வை எவ்வளவு பாழ்படுத்தும் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளீர்கள். இப்படி எண்ணிறந்த அரசியல் கட்டுரைகள் அளிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

'கலைகண்ட மலேயா' எனும் கட்டுரையைப் படிக்கும்பொழுது நான் அவர்களுடன் சென்று பார்ப்பது போலிருக்கிறது.

வலங்கைமான் — மு. அலாவுதீன்
25—9—57

நற்காலம் பிறக்குமா?

தங்கள் 22-9-57 கல்கி இதழில் கேரளத்தில் உள்ள தனி நிர்வாகப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களது அவல நிலை குறித்து



நன்கு அறியுள்ளீர்கள். எனினும் சென்னை இராஜ்யத்தில் உள்ள தனி நிர்வாகத்தினர் பள்ளிகளும் கேரளத்தில் உள்ள பள்ளிகளைப் போலத்தான் என்று கூறவேண்டியுள்ளது.

குறிப்பிட்ட ஒரு தொகையைப் பிடித்துக் கொண்டு முழுத்தொகைக்கும் கையெழுத்து வாங்குவது என்பது இங்கு எல்லாப் பள்ளிகளிலுமே நிரந்தரமான ஒரு வழக்கமாக உள்ளது. சில பள்ளிகளில் ஒரு முழு மாதச் சம்பளத்தையும் கூடப் பிடித்துவிடும் வழக்கம் இருக்கிறது. ஆசிரியர் சேம நிதி, அதில் நிர்வாகத்தினர் ஒரு பங்கு வழங்குதல் என்பது எல்லாம் சட்டத்தில் மட்டும் உள்ளது. நாங்கள் கனவிலும் காணாதது. பல ஆண்டுகளாகவே ஒரு குறிப்பிட்ட ஆசிரியரைத் தற்காலிகமாக ஆசிரியராகவே வைத்துக் கொண்டு அதன்மூலம் நிரந்தரமான ஆசிரியருக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள் மறுக்கப்படும் கொடுமையும் நடக்கிறது. நம் அரசாங்கமும் இவற்றை யெல்லாம் அறிந்தும் அறியாதது போல்தான் இருக்கிறது.

மதுரை
21—9—57 ஆ. ச. இராயப்பன்

பஸ் பிரயாண அவதி

பலவிதத்திலும் முன்னேறியிருக்கும் மைசூர் ராஜ்யத்தின் சில பகுதிகளில் பஸ் போக்குவரத்து நிலைமையானது மிகவும் பரிதபிக்கத் தக்கதாயிருக்கிறது. குறிப்பாக மைசூரிலிருந்து சாம்ராஜ் நகருக்கும், சாம்ராஜ் நகரிலிருந்து சத்திய மங்கலம் செல்லும் பஸ்கள் சீர்கேடான நிலைமையிலிருக்கின்றன. மேற்படி பிராந்தியங்களில் மோட்டார் வாகனச் சட்டம் அமுலிலிருப்பதாகத் தெரியவில்லை. பஸ் கொள்ளுமளவும், கண்டக்டர் இஷ்டமுள்ளளவும், பிரயாணிகள் ஏற்றப்படுகின்றனர். சிட்டுக்களைக் கையில் அடுக்கிக் கொள்வது போல் பிரயாணிகள் பஸ்களில் ஏற்றப்படுகிறார்கள். பஸ்களும் 1940-வது வருஷத்துக்கு முந்திய மாடல்களாக இருப்பதுடன் பஸ் உயரமில்லாததாக இருப்பதால் ஏறும் பொழுதும், இறங்கும் பொழுதும் தலையில் இடிக்கின்றன.

மழைக் காலத்திலோ கேட்கவேண்டியதேயில்லை. குறிப்பிட்ட நேரத்திலும் பஸ் புறப்படுவதில்லை. தசரா போன்ற காலங்களில் டிக்கட்டுகள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. பஸ் புரோக்கர்கள் வைத்ததே சட்டமாயிருக்கிறது. வேண்டுமென்றால் அதிகத் தொகை வாங்கிக் கொண்டு டிக்கட் கொடுக்கிறார்கள். இல்லாவிட்டால் டிக்கட் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள்.

இது ஒருபுறம் இருக்க, தசரா காலத்தில் கன்னம்பாடி, சாமுண்டீஸ்வரி மலை முதலிய இடங்களுக்குப் போகும் பஸ்களில் ஜனங்களை ஏற்றிக்கொண்டு இன்னும் பிரயாணிகளைச் சேர்ப்பதற்காக மணிக்கணக்காகத் தெருத் தெருவாகச் சுற்றுகிறார்கள். அவர்கள் பஸ் பிரயாணிகளை அழைக்கும் சத்தமே அநாகரிகமாக இருக்கிறது. இங்கும் அங்கும் மைசூர் நகரில் நடமாடும் போலீஸ் அதிகாரிகள் இதைக் கவனிப்பதாகவோ, தடுப்பதற்கு எத்தனிப்பதாகவோ தெரியவில்லை. இதைப் பற்றி மைசூர் அரசாங்கம் கவனிக்குமா?

திருப்பூர் டி. எஸ். ராமமூர்த்தி
6—10—57 (அட்வகேட்)

மேனன் மறைந்தார்

சென்ற வாரம் புது டில்லியில் காலமான சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ பி. கோவிந்த மேனன் உழைப்பும், நேர்மையும், தூய்மையும், திறமையும் ஒருங்கே வாய்ந்த சிறந்த நீதிபதியாகத் திகழ்ந்து வந்தார். அவர் சில நாட்களாக நோயுற்றிருந்தும் கூட ஓய்வு



எடுத்துக் கொள்ள அவரது மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. அத்தகைய கடமை உணர்ச்சியும் நீதியில் கண்ணும் கருத்தும் உள்ள ஸ்ரீ மேனனின் மரணம் நீதி இலாகாவுக்குப் பெரிய நஷ்டமாகும். சென்னை ஹைகோர்ட் நீதிபதியாகவும் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவும் அவர் செய்த அரும் தொண்டு மறக்க முடியாதது. சென்ற மகா யுத்தக் காலத்தில் ஜப்பான் தேசத்தின் பிரதம மந்திரியாக இருந்த ஜெனரல் டோஜோ முதலிய ஜப்பானியப் பிரமுகர்கள் மீது சர்வதேச ராணுவ நீதிச் சபை முன்னிலையில் நடந்த வழக்கில் இந்தியாவின் சார்பில் ஆஜராகி வாதிக்கும் வாய்ப்பும் ஸ்ரீ மேனனுக்குக் கிடைத்தது. அதில் ஸ்ரீ மேனன் கூறிய கருத்துக்கள் உலக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கின. இதனால் பாரதத்தின் புகழும் உயர்ந்தது. ஸ்ரீ மேனன் சட்ட சம்பந்தமான பல முக்கிய நூல்களுக்கும் ஆசிரியராக இருந்து புகழ் பெற்றார். இவ்வளவு புகழ் பெற்றவராயிருந்தும் அடக்கத்தின் சிகரமாகத் திகழ்ந்தார். அதன் காரணமாக, பாரத நாடெங்கும் பல சிறந்த நண்பர்களைப் பெற்றிருந்தார். அத்தகைய உத்தம புருஷர் மறைந்ததைக் குறித்து மிக்க துயருறுகிறோம். அவருடைய குடும்பத்தினருக்கும் எண்ணற்ற நண்பர்களுக்கும் நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


உங்கள் குழந்தைக்கு
அழகான ஆடைகள்
வாங்க உங்களால் முடியும்!
மிகக் குறைந்த விலையில் காட்டன் துணிகளில் அழகிய டிசைன்களும் வசீகரிக்கும் கலர்களும் கிடைக்கின்றன என்பது உங்களுக்கே ஆச்சரியமாயிருக்கும். ஆனால் 'ரெஸிஸ்ட் பிரிண்ட்' வாங்கினால் நம்பகம் உண்டாகும். இந்தத்துணியில் உங்கள் சேலைகளுக்கும், ஃபிராக்ட்டுகளுக்கும், குழந்தைகள் ஆடைகளுக்கும், நீங்கள் எதிர்பார்க்கும் நீடித்த உழைப்பு, பட்டுப்போன்ற மிருதுவான தோவு, குறைந்த விலை முதலிய அம்சங்கள் பொருந்தியுள்ளன.
Resist Print
உயர்தர புடவைகள் வேஷ்டிகள் பிரிண்ட் துணிகள் முதலியவைகளுக்கு கீழே கண்ட இடத்திற்கு எழுதுங்கள்.
ஜஹாங்கீர்
வக்கீல் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
ஆமதாபாத்.
கீழே குறிப்பிட்டுள்ள நபர்களை விசாரிக்கவும் :-
(1) கனிலால் சந்தன்லால் (2) திலீப்குமார் ரமண்லால்
(3) மின்சீலால் அசோக்குமார் (4) கேசவலால் ஸ்ரீதரலால்
(5) காந்திலால் லல்பாய், மஸ்கட்டி மார்க்கெட் ஆமதாபாத்

விருப்பும் வெறுப்பும்

எங்கே சென்றாலும் தங்கும் வீடும் சாப்பாடும் வசதியாக அமைந்து விட்டால் பயணத்தின் முதல் கவலை தீர்ந்து போய்விட்டது என்றுதானே பொருள்?

சிங்கப்பூர் 'பிராங்கல் எஸ்டேட்' பகுதியில் எங்களுக்காக அமர்த்தப்பட்டிருந்த வீடு வசதியானதுதான். ஆனால் சுமார் ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய கலைக்குடும்பத்துக்குத்தான் அந்த வீடு தாராளமான இடவசதி பெற்றிருந்தது. ஐம்பத்தொரு உறுப்பினர்கள் அடங்கிய கலைக் குடும்பத்துக்கு அந்த வீடு மிக மிகச் சிறியது என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவ்வளவு பெரிய துறைமுக நகரில் அந்தத் தனி வீடு அமைந்ததே ஒரு பெரிய காரியம் என்று உள்ளூர் நண்பர்கள் மெச்சினார்கள். கலைக் குழுவினரில் காட்சியமைப்பு, ஒளி அமைப்பு, ஒலி அமைப்பு முதலிய ஏற்பாடுகளைக் கவனிக்கும் அன்பர்கள் பதினாறு பேர்களும் நாடகக் கொட்டகையிலே தங்கிக் கொண்டனர். ஏனைய முப்பத்தைந்து பேர்களும் எதையும் சமாளிக்கும் இதயத்தோடு அந்த வீட்டிலேயே இங்கிதமாகத் தங்கிக் கொண்டோம். "மனம் உண்டானால் இடம் உண்டு" என்ற பழமொழியின் உண்மையை எங்கள் அனுபவத்திலே கண்டு உணர்ந்தோம்.

தங்குவதற்கு மட்டும் அல்லாமல் அந்த வீட்டிலேயே எங்களுக்கு உகந்த முறையில் தென்னாட்டு உணவை ஆக்கிப் படைப்பதற்காகச் சில சமையல்காரர்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

"இருக்கும் இடந்தேடி
எம்பசிக்கே அன்னம்
உருக்கமொடு கொண்டு வந்து..."

வழங்கும் இந்த ஏற்பாடு எங்கள் அனைவருக்கும் மிகவும் பிடித்திருந்தது.

நாள்தோறும் இன்னின்ன உணவு வகைகளை ஆக்க வேண்டுமென்று திட்டமிடும் கௌரவ சமையல் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார் திரு சிவதாணு.

வீட்டிலேயே சமையல்காரர்கள் இருந்தும் காலை உணவுக்கு இட்டிலி கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் ஓரிரு நாட்கள் எங்கள் உள்ளத்திலே எழுந்தது. பெரிய இட்டிலிக் கொப்பரையும் ஆட்டுக் கல்லும் கிடைக்காததனால் தான் இட்டிலி போட முடியவில்லை என்று சமையல்காரர் தெரிவித்தார். சிங்கப்பூரில் நூறு ரூபாய் கொடுத்தாலும் நல்ல ஆட்டுக்கல் கிடைக்காதாம்!

"பெரிய ஆட்டுக்கல் கிடைக்கா விட்டாலும் பரவாயில்லை! இயந்திரத்திலே மாவை அரைத்துச் சமாளித்துக் கொள்ளலாம்! ஆனால் பெரிய இட்டிலிக் கொப்பரை ஒன்று அவசியம் வேண்டும்" என்று சமையல்காரர் வற்புறுத்திச் சொன்னார்.

"இட்டிலிக் கொப்பரை எப்படி இருக்க வேண்டும்? விவரம் சொல்லுங்கள். நான் தகரத்தினாலேயே ஒரு பெரிய கொப்பரை செய்து தருகிறேன்!" என்றார் ஒரு சீனத் தொழிலாளி.

இட்டிலிக் கொப்பரை இருக்கும் முறையை எங்களுக்குத் தெரிந்த அரைகுறையான மலாய் மொழியிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும், அபிநய மொழியிலுமாய் அந்தச் சீனத்துக்காரனிடம் வருணித்தோம்.

"ஓ! அருமையாகச் செய்து தருகிறேன்" என்று தமது சம்மதத்தை மலாய் மொழியில் கூறிச் சென்றார் அந்தச் சீனர்.

மறுநாள் அவர் புதிதாகச் செய்த தகரக் கொப்பரை வந்து சேர்ந்தது. அதைப் பார்த்ததும் எங்களுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை! சீனத் தொழிலாளி செய்த இட்டிலித் தட்டிலே ஒவ்வொரு குழியும் ஓமப்பொடி உழக்குப் போல் ஆழமாக இருந்தது!

அந்தத் தட்டுக்களைப் பயன்படுத்தி இட்டிலி தயாரித்துத்தான் பார்ப்போமே என்று துணிந்து விட்டார் சமையல்காரர். அடாடா! ஒவ்வொரு இட்டிலியும் என்னமாக இருந்தது தெரியுமா? உயரமான காரைக் கட்டிகளைப் போல அத்தனை வலுவாக இருந்தது!

"இப்படி இட்டிலி தயாரித்தால் உடம்புக்கு ஒத்து வராது! தென்னிந்திய முறையில் இயங்கும் உணவு விடுதிகளிலிருந்து தேவையான சமயம் இட்டிலியை வரவழைக்க வேண்டியதுதான்!" என்று முடிவுசெய்தோம்.

இந்தச் செய்தியை ஜோகூர் சமஸ்தானத்தில் உள்ள மூவார் ஜெயங்கொண்டார் ரப்பர்த் தோட்ட அதிபரான திரு சித. நாராயணன் செட்டியார் கேள்விப்பட்டார். மூவார் தண்டபாணி கோவிலிலிருந்து ஒரு பெரிய இட்டிலிக் கொப்பரையைக் கொண்டுவந்து கொடுத்தார். ஒரு நல்ல ஆட்டுக்கல்லும் கிடைத்தது. அன்று முதல் எங்கள் இட்டிலிப் பிரச்னை ஒருவாறு தீர்ந்தது.

சிங்கப்பூரில் சௌகரியப் பொருள்கள் பெரும்பாலும் விலை மலிவாகக் கிடைக்கின்றன. ஆனால் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத உணவுப் பொருள்களும், பிற சாதனங்களும் விலை அதிகம்.

நம் நாட்டில் ஐந்தணாவுக்குக் கிடைக்கக் கூடிய ஒரு மண் பானை சிங்கையில் ஐந்து ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது. ஆனால் ஐந்து ரூபாய் விலையில் ஒரு 'காமிரா' வாங்கி விட முடியும்!

கண்ணைப் பறிக்கும் பகட்டான காய்கறிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றில் சுவை ததும்பி நிற்பதில்லை!

மாலை நேரங்களில் கடைத் தெருப்பக்கம் போய் விட்டால் கண்ணை உறுத்தும் காட்சி

களும் மூக்கைத் துளைக்கும் முட்டை நாற்றமும் ஒரு மாதிரியான அருவருப்பு உணர்ச்சியை உண்டாக்கும்.

பன்றி, வாத்து, கோழி, மீன் முதலானவற்றை முழுமையாக அவித்து அப்படியே தொங்க விட்டிருக்கும்.

உலர்ந்த பொடி மீன்களைப் பருப்பு வகைகளைப் போலவே மரத்தொட்டிகளில் நிரப்பிப் படிக்கணக்கில் அளந்து விற்கும் பலசரக்குக் கடைகளும் ஏராளம்!

முதன்முதலாக இதுபோன்ற ஒரு பலசரக்குக் கடையை நாங்கள் கண்டபோது எங்களுக்கு ஒரே வியப்பா யிருந்தது.

* * *

நமது சென்னை மாநகரிலே எழும்பூரில் மேம்பாலத்துக்கு அருகில், "தானே இயங்கும் கைகாட்டி விளக்குத் தூண்" ஒன்று அமைந்திருப்பதை அன்பர்கள் பலர் பார்த்திருக்கக் கூடும். சென்னையில் அந்த ஒரே இடத்தில் மட்டுந்தான் கைகாட்டி விளக்கு உள்ளது. ஆனால் சிங்கப்பூர்ச் சாலைகளிலோ அநேகமாக ஒவ்வொரு சந்திப்பிலும் தானே இயங்கும் கைகாட்டி விளக்குகள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்றன. எனவே, கார்களில் செல்லும்போது அடிக்கடி அந்தக் கைகாட்டி விளக்குகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நிற்க வேண்டியதாக இருக்கிறது:

இரவு நேரங்களில் கைகாட்டி விளக்குகளின் பச்சை, ஆரஞ்சு, சிவப்பு நிறங்களும், சாலைகளிலே பளிச்சிட்டுக் கொண்டிருக்கும் பாதரச ஒளி விளக்குகளும் நமது ஆலயங்களில் ஆண்டுக்கொருமுறை நடக்கும் 'லட்ச தீப' விழாவைப்போன்று ஒவ்வொரு தினமும் ஒரே ஒளி மயமாக விளங்குகின்றன.

* * *

இந்தப் பரந்த உலகத்திலே சிங்கப்பூர் நகரமும் அடங்கியுள்ளது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் சிங்கப்பூரிலே பல உலகங்கள் அடங்கியுள்ளன என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

'ஹாப்பி ஓர்ல்டு' என்ற உவகை உலகமும், 'கிரேட் ஓர்ல்டு' என்ற பெரிய உலகமும், 'நியூ ஓர்ல்டு' என்ற புது உலகமும் சிங்கைமா நகரில் உள்ள பற்பல உலகங்களில் மிகவும் முக்கியமானவைகளாகும்.

இந்த உலகங்கள் ஒவ்வொன்றும் நிரந்தரப் பொருட்காட்சி போலவே இயங்குகின்றது. நாள்தோறும் இரவு எட்டு மணிக்குத்தான் இந்த உலகங்களின் கோலாகலங்கள் ஆரம்பமாகும். ஒவ்வொரு உலகத்திலும் நுழைவதற்கு இருபது காசுகள் — அதாவது நமது இந்திய நாணயக் கணக்கில் முப்பத்தொரு காசு—செலுத்த வேண்டும். ஒவ்வொரு உலகத்திலும் நுழைந்து பார்த்தால்,

" வேடிக்கை கேளிக்கை மீதே—மது
வெறிமோகிப் புரியாத மேல்நாட்டுப்பாதை
தேடியே பின்பற்றும் வேகம்—இன்னும்
தீராத மக்களோ ஏராளமாகும்"

என்ற உண்மை புலனாகும்.

சூதாட்டமும் மதுபானமும் மிகப் பெரிய ஆதிக்கம் செலுத்தும் இந்த உலகங்களில் சிங்காரக் கடைகள் உண்டு; சினிமா நாடகத் தியேட்டர்கள் உண்டு; சீனர்களின் கோயில்கள் உண்டு; செவிகளைத் துளைக்கும் "ராக் அண்ட் ரோல்" என்னும் சங்கீதமும், நடனப் பெண்களின் ஆட்டமும் ஏராளமாக உண்டு!

சிங்கப்பூர் — மலேயாவுக்கே உரித்தான 'ரோங்கின்' என்ற நடனங்களை மேலே குறிப்பிட்ட உலகங்களில் தினமும் காணலாம். நடன மாதர்கள் மேடைமீது வரிசையாக நாற்காலிகளில் அமர்ந்திருப்பார்கள். சாயம் பூசிய உதடுகளும், சாயம் பூசியதுபோல் பவுடர் தேய்த்த முகமும், துணிப் பஞ்சத்தினால் துவளுவது போன்ற உடலும் அமைந்த அந்த நடனப் பெண்மணிகளைக் கண்டாலே நம்முடைய கண்கள் கூசுகின்றன. பெண்களுக்குப் பின்னால் வாத்திய இசை உச்சஸ்தாயியில் முழங்குவதற்குத் தயாரான நிலையிலே காத்திருக்கும்!

நடனப் பெண்களோடு ஆட விரும்புவோர் யாராய் இருந்தாலும், பத்துக் காசுகள் கொடுத்து அநுமதிச் சீட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். அந்தச் சீட்டை எடுத்துக் கொண்டு நடன மேடையில் ஏறி, எந்தப் பெண்ணுடன் ஆட விருப்பமோ அந்தப் பெண்ணின் கையிலே சீட்டைக் கொடுக்க வேண்டும். உடனே அவள் எழுந்து சீட்டுக்கு உரிய ஆடவனோடு நடனமாட வந்து , விடுகிறாள்! இந்த "ரோங்கின்" நடனத்தில் ஒரு முக்கியமான நிபந்தனை உண்டு. அதாவது ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சற்றும் தொடாமலே விலகி நின்று, பின்னணி இசைக்கு ஏற்ப ஆட்டம் போட வேண்டும். ஒவ்வொரு டிக்கட்டுக்கும் மூன்று நிமிஷங்கள்தான் ஆட முடியும். மீண்டும் ஆட வேண்டுமென்று விரும்பினால் இன்னொரு டிக்கட் வாங்கி வரவேண்டும். கொஞ்சங்கூடச் சிரமம் இல்லாமல், உடம்பை



வணிக்காமல், தாளத்துக்கு ஏற்றபடி மட்டும் ஆடும் இந்த நடனத்திலே சொக்கிப் போய் மேடையேறி ஆட முற்படும் ஆடவர்களில் ஒரு சில இந்தியர்களையும் கண்டபோது எங்கள் இதயம் நோகத்தான் செய்தது!

கேளிக்கை உலகங்களில் ஆடை களைந்தாடும் நடன அலங்கோலமும் உண்டு. 'கலை' என்ற சொல்லுக்கு ஆடை என்ற ஒரு பொருள் உண்டு. அந்தக் 'கலை'யைக் களைந்து ஆடுவதும் ஒரு கலையா? என்றெல்லாம் ஆடை களைந்தாடும் நடனமுறையைப் பல கூட்டங்களில் வன்மையாகக் கண்டித்துப் பேசும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. இதன் பயனாகவோ என்னவோ இந்த அலங்கோல நடனத்தின் தலைவியாக விளங்கிய திருமதி ரோஸ் சான் அம்மையாரே நடனத்திலிருந்து விலகி, நாங்கள் மலேயாவிலிருந்து புறப்படுவதற்குள்ளாகவே தன் மனத்துக்குப் பிடித்த ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு இல் வாழ்க்கையில் ஈடுபடத் துணிந்து விட்டாராம்! வாழ்க மணமக்கள்! வீழ்க அலங்கோல நடனம்!!

(தொடரும்)

கி. ரா. கோபாலன் குடும்ப உதவி நிதி

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தமிழ் எழுத்தாளர் சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கங்களுக்குள் திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ் எழுத்தாளருக்கும் சிறந்த முறையில் தொண்டாற்றி வருவதைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருப்பார்கள். திரு கி. ரா. கோபாலன் திடீர் என்று மறைந்தார் என்று கேட்டவுடன் திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்க நிர்வாகிகள் எல்லோருமே திடுக்கிட்டுப் போனார்கள். அவசரம் அவசரமாக ஒரு கூட்டம் போட்டு அவர் குடும்பத்தினருக்குத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். அவர் குடும்பத்துக்கு யாராவது உதவிசெய்தால் தம்மாலான உதவியைச் செய்யலாம் என்று நமக்கு எழுதியிருந்தார்கள். சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வேண்டுகோளை யொட்டி நாம் ஆரம்பித்துள்ள கி. ரா. கோபாலன் குடும்ப உதவி நிதிக்குத் திருச்சி எழுத்தாளர் சங்கம் தம் காணிக்கையாக நூற்றியொரு ரூபாயை இப்பொழுது அனுப்பிவைத்திருக்கிறது. இன்னும் திரட்டித் தருவதாக உறுதியளித்திருக்கிறது.

ஒரு எழுத்தாளர், பேராசிரியர் திரு அ. சீநிவாசராகவன் அவர்கள் இந்தக் குடும்ப நிதிக்கு ஐம்பது ரூபாய் அனுப்பிவைத்திருக்கிறார். இந்த எழுத்தாளர் காட்டிய கருணையை மற்ற எழுத்தாளர்களும் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு தமிழ் எழுத்தாளரும் ஆளுக்குப் பத்து ரூபாய் அனுப்பிவைத்தாலே இந்த நிதிக்குத் தேவையான தொகை சேர்ந்துவிடும். ஒரு ஏழைத் தமிழ் எழுத்தாளர் குடும்பத்துக்கு உதவுவதில் தமிழ் எழுத்தாளர்களும், எழுத்தாளர் சங்கங்களும் பரிபூரணமாக ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறோம். தூத்துக்குடி பேராசிரியரையும், திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கத்தையும் மிஞ்சக்கூடிய வேறு தமிழ் எழுத்தாளர்களும் தமிழ் எழுத்தாளர் சங்கமும் தமிழ் நாட்டில் இல்லையா என்று பார்க்க வேண்டும்.

இந்த நிதிக்குப் பொருள் அனுப்பவேண்டிய விலாசம்: திரு எம். பி. கல்யாணசுந்தரம், கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம் சென்னை.

திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம், தென்னூர், திருச்சி	101	00
விட்டில் பிளவர் கம்பெனி	51	00
பேராசிரியர் அ. சீநிவாசராகவன் பிரின்ஸ்பால், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி	50	00
திரு டி. எஸ். பஞ்சாபகேசன், பிரேசில் நாட்டுத் தூதராலயம், கல்கத்தா	10	00
திரு எஸ். பத்மநாபன், ஜெனரல் மார்ச்செண்ட், திருவனந்தபுரம்	10	00
திரு லால்குடி கிருஷ்ணமூர்த்தி, விழுப்புரம்	10	00
திரு ஆர். கங்காதரன், புதுதில்லி	10	00
திரு சாமா, ஓவியர், கல்கி	10	00
திரு வி. எம். சங்கரன், கடலூர்	6	00
திரு ஆலங்குடி ராமச்சந்திரன், கடம் வித்வான், சென்னை	5	00
திரு ஜவாஹருருதீன், தங்கச்சி மடம், ராமநாதபுரம்	5	00
திரு கே. கோவிந்தராஜன், காரியதரிசி, எழுத்தாளர் சங்கம், கரூர்	6	00
திரு ஏ. கே. தேவன், இலங்கை	5	00
திரு பி. ராஜகோபாலன், ஹைதராபாத்	5	00
திருமதி வி. கே. தங்கம், சென்னை	5	00
திரு கே. நாகராஜன், கல்கி	5	00
திருமதி ஞானம் கோபாலன், நுங்கம்பாக்கம், சென்னை	5	00
திருமதி பத்மாவதி, செங்கல்பட்டு	4	00
திரு எஸ். நரசிம்மன், உபாத்தியாயர், ஆதெக்கூர்	3	00
திரு ஜி. முத்து, சென்னை-5	3	00
திரு வீராசாமி, வைகை அணை	2	20
திரு கே. மயில்சாமிக் கவுண்டர், பூசாரிப்பட்டி, பொள்ளாச்சி	1	00
திரு வி. கே. கிருஷ்ணன், சேத்துப்பட்டு, சென்னை	1	00
திருமதி விஜயலக்ஷ்மி ராகவன், திருச்சி—2.	1	00
திரு சீனிவாசன், தேரழுந்தூர்	1	00
குமாரி வி. ராஜம், மதுரை	1	00
திரு பி. சுப்பராயலு, திண்டுக்கல்	0	99
முன் வசூல் ரூ.	461	00
ஆக ரூ.	777	19

[ராஜாஜி அவர்கள் வாரந்தோறும் கல்கியில் எழுதி வந்த சின்னஞ் சிறு கதைகளைப் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அந்தக் கதைகள் 'கற்பனைக் காடு'* என்ற தலைப்பில் புத்தகமாக வெளியாகி யிருக்கிறது. அதைப்பற்றிப் பேராசிரியர் செய்துள்ள அரிய விமரிசனத்தைப் படித்துப் பாருங்கள். — ஆசிரியர்]

கற்பனைக் காடு

பேராசிரியர் அ. சீநிவாசராகவன்

"ராஜாஜி எழுதிய 'கற்பனைக் காடு' என்ற புத்தகத்தைப் படித்தீர்களா? இல்லையா? இதைக் கேளுங்கள்."

"படித்து விட்டேன், ஸார்."

"அப்படியானால் இன்னும் நல்லது. இதையும் படியுங்கள்; இலக்கியச் செல்வம் பழங்காலத்தில் மட்டுமில்லை. இன்றும் கண்முன்னே சிருஷ்டியாகிறது என்பது தெரியும்."

'ஒரே ஒரு ஊரிலே...' என்று தொடங்குகிறது கதை. இம் மந்திரச் சொற்கள் காதில் விழுந்தவுடன், மற்றதையெல்லாம் மறந்து, அந்த ஊரிலே என்ன நடந்தது என்பதை அறிய ஆசைப்படாதவர் உண்டா? சிறுவர்கள் விளையாட்டை விட்டு ஓடி வருகிறார்கள்; இருமலையும், கைத்தடியையும் மறந்து, தத்தித் தத்தி வருகிறார் 'பாட்டையா'; காலை நீட்டிக் கொண்டு உட்காருகிறாள் கிழவி; கடையையும் கணக்கையும் கட்டி வைத்து விட்டு, காதைத் தீட்டிக் கொண்டு வருகிறார் வியாபாரி; உழவன் வயலை மறக்கிறான்; உள்ளவன் பணத்தை மறக்கிறான்; இல்லாதவன் இன்மையை மறக்கிறான். கட்டிலில் அமர்ந்து ராஜாரீகமாகக் கேட்கிறாள் மாமியார்; கதவின் பின்புறம் நின்று கேட்கிறாள் புது மணப் பெண். 'சே, கதையா, வெறும் கற்பனை. யாருக்கு வேண்டும்?' என்று சொல்லிக் கொண்டு, ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாகக் காது கொடுக்கிறார் பேராசிரியர் தத்துவராயர். கதையில் மயங்காதவர் உண்டா?

ஒரே ஒரு ஊரிலே...ஒரே ஒரு ஊரிலே... அப்படி அந்த ஊரிலே என்னதான் அதிசயம் நடக்கிறது? இந்த உலகத்துக் காதலும், கவலையும், ஆசையும், ஏமாற்றமும், பணமும், வறுமையும், உயர்வும், தாழ்வும், பிறப்பும், பீடும், சாவும் இவை தாம் அங்கேயும் வருகின்றன. 'மண்ணுலகத்து நல் ஓசைகளே' கதை உலகத்திலும் நிரம்பி நிற்கின்றன. ஆனால் ஒன்று. நடிகன் ஒருவன், தான் நடிக்கும் நாடகத்தைப் பார்க்க முடிகிறதா, இல்லையே? அதுபோலவே நம்முடைய வாழ்க்கையை, அதில் பங்கு கொள்ளும் நாம், தெளிவாகக் காண முடிவதில்லை. ஆனால், காண்பதற்கு ஆசைப்படுகிறோம், ஆத்திரங்கூடப் படுகிறோம். ஏன்? ஏன், எப்படி, என்ற கேள்விகள் எப்போதும் தோன்றி மனத்தை உறுத்துகின்ற மனித இயல்பு படைத்திருக்கிறோமே, அதுதான் காரணம். ஆகவே கதை உலகத்துக்குப் போகிறோம். இங்கே, நம்முடைய தினசரி உலகில், ஒரே சிக்கலாய், ஒரே குழப்பமாய், சந்தைக் கடையாய், முடியா நெடும் புதிராய் உள்ள வாழ்க்கை. அங்கே கதை உலகில், காரண காரிய அமைதி பெற்றுத் தெளிவான, பொருள் உள்ள காட்சியாக அமைகிறது. நம்முடைய முகத்தை நாமே பார்த்துக் கொள்ள, கண்ணாடியின்முன் நிற்பதுபோல, நம்முடைய வாழ்க்கையை நாமே பார்க்க, கதையின் உதவியை நாடுகிறோம்.

கதைக்குக் கால் உண்டா? உண்டு. வாழ்க்கையைப் பார்க்கிறோம்; பங்கு கொள்ளுகிறோம் என்ற உணர்ச்சியை நம்முடைய மனத்தில் கதை உண்டாக்குகிறதே, அந்தத் தத்ரூப பாவந்தான் கதையின் கால். இந்தக் காலைக் கொண்டு தான் கதை நடக்கிறது.

சில கதைகள் நடப்பதில்லை, பறக்கின்றன. சூரியனுக்குக் கிழக்கே, சந்திரனுக்கு மேற்கே, காலமும் இடமும் கடந்த கற்பனை நாட்டுக்கு, இக்கதைகள் நம்மை அழைத்துச் செல்கின்றன. அங்கே, எத்தனையோ அதிசயங்களைக் காண்கிறோம். வேதாளம் முருங்கை மரத்தில் தலைகீழாகத் தொங்குகிறது. குரங்கும், முதலையும், காக்கையும், மனிதர்களைப் போல், பேச்சு என்ற வரப் பிரசாதத்தை (அல்லது சாபக் கேட்டை)ப் பெற்று வாதப் பிரதிவாதங்கள் புரிகின்றன. குதிரை சிவ்வென்று தரையை உதறித் தள்ளிவிட்டு ஆகாயத்தில் உலவுகிறது. கணப் பொழுதில், மண்மேடு மாயமாளிகை ஆகிறது; பஞ்சணை பாம்பாகச் சீறுகிறது. பேய்களும், பூதங்களும் அங்கும் இங்கும் தோன்றி, பற்பல அற்புதங்களையோ, பயங்கரங்களையோ விளைக்கின்றன. வேம்பிலே மாங்கனி பழுக்கிறது. நெருஞ்சியில் தாமரை மலர்கிறது, செந்நெல் தலைசாய்த்து முத்தை உதிர்க்கிறது. ஒரே வார்த்தையில், கண்

---

* பிரசுரம்: பாரி நிலையம், பிராட்வே, சென்னை - 1. விலை ரூ. 1-50.

முன்னே கற்பனைக்காடு விரிகிறது. ஆனால் இந்தக் கற்பனையும் மனிதனுடைய மன நிழல்தான். மண்ணுலக வாழ்க்கையின் வடிவந்தான், நீண்டோ சுருங்கியோ, இப்படிப்பட்ட கதைகளிலும் பொருளாக நிற்கிறது.

கதையில் இன்னொரு வகை உண்டு, அது காற்றாடியைப்போல. காற்றாடி எவ்வளவு உயரத்தில் பறந்தாலும், மெல்லிய கயிறு ஒன்றினால் தரையோடு பிணைக்கப் பட்டிருக்கிறது. அதுபோல, கதையிலே வரும் செய்திகள், மேலெழுந்தவாறாகப் பார்க்கும்போது, விநோதமாகவோ, அசாதாரணமாகவோ தோன்றியபோதிலும், கருத்து என்ற கயிற்றால் மனித வாழ்க்கையோடு பிணைக்கப் பட்டிருக்கின்றன. கருத்தின் போக்கு, அதன் நீளம், அதன் அழுத்தம், இவற்றுக்கு ஏற்ப, கதை அசைகிறது. வேறுவிதமாகச் சொன்னால், கதையின் அசையிலே, அந்த அசைவுக்குக் காரணமான கருத்தின் தன்மை, இடையறாது வடிவாகிக் கொண்டே இருக்கிறது.

இத்தகைய கதையைத்தான் உருவகக் கதை என்று சொல்கிறோம். கருத்து ஒன்றை ஆதாரமாகக் கொண்டு மலர்கின்ற கற்பனை, கற்பனையினுள்ளே எங்கும் பரந்து நிற்கின்ற கருத்து - இவையே உருவகக்கதையின் அம்சங்கள். அற்புதமான உருவகக் கதைகள் அறுபத்திரண்டு கொண்ட கதைக் கோவையே, ராஜாஜி எழுதிய 'கற்பனைக்காடு' என்ற புத்தகம்.

ஒவ்வொரு கதையும், வாழ்க்கையைப் பற்றிய கருத்து ஒன்றின் அடிப்படையிலே எழுந்தது. அப்படிச் சொல்வது கூடத் தவறு. ஒவ்வொரு கதையும், கருத்து என்ற விதையிலிருந்து முளைத்த அழகிய கற்பனைச் செடி. செடி முழுவதிலும், விதையின் வேகமும் மணமும் பரந்து நிற்பதைக் காண முடிகிறது.

ஒரு கதையைப் பார்ப்போம்.

சில நாடுகள் ஒன்று சேர்ந்துகொண்டு, பயத்தினாலோ, தன்னலத்தினாலோ, வேறு ஒரு நாட்டை ஒடுக்கி அழிக்க முற்பட்டால், அந்த முயற்சியில் தாமே சீர்குலைந்து போகின்றன. இது உலக சரித்திரம் பேசுகின்ற உண்மை. பயத்திலோ ஆசையிலோ முளைக்கிறது ஏகாதிபத்திய வெறி. இந்த வெறிக்கு ஆளான எந்த நாடும், மற்றைய மனித இனங்களை ஒடுக்குவதன் மூலமாக, கடைசியில் தானே வலியிழந்து குன்றி விடுகிறது. கிரேக்க சாம்ராஜ்யம், ரோம சாம்ராஜ்யம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், எது தான் கடைசி வரையில் மற்ற நாடுகளை எப்போதும் ஒடுக்கி வைத்திருப்பதில் வெற்றி கண்டது? எந்த ஏகாதிபத்தியம் தான் இழைத்த கொடுமைக்குத் தானே பலியாகவில்லை?

இது கருத்து. இந்தக் கருத்து 'பாம்பைப் பிடித்த பூனை' என்ற உருவகமாக வடிவாகிறது. கதையில், பூனை பாம்பைப் பிடிக்கிறது. பூனைக்கு உதவியாகக் குரங்கு வருகிறது. கடைசியில் பூனையும் குரங்கும் அழிகின்றன. குரங்கு பாம்பால் சாகிறது. பூனை தன் துணைவனை குரங்கால் சாகிறது! பாம்பு மட்டும் சாகாமல் தப்புகிறது. நாற்காற் பிராணியால் சாவில்லை என்பது அதற்கு முனிவர் ஒருவர் தந்த வரம். அது சரிதானே. எந்த மனித இனத்தைக்

குமாரி ஜயலக்ஷ்மி



ஆண்டுதோறும் அகில இந்திய ரேடியோ நிலையத்தார் ஒரு சங்கீதப் போட்டி நடத்துகிறார்கள். அதில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டி அவர்களுக்கு ஊக்கமூட்டி வருகிறார்கள். இந்த ஆண்டு நடைபெற்ற அகில இந்திய ரேடியோ போட்டியில் குமாரி இ. ஜி. ஜயலக்ஷ்மி முதற் பரிசு பெற்றிருக்கிறார். குமாரி ஜயலக்ஷ்மி கோவை மத்திய சிறைச்சாலை உதவி ஜெயிலர் திரு இ. எம். கங்காதரன் அவர்கள் புதல்வி. சங்கீதத்தில் இளமையிலிருந்தே ஆர்வம் கொண்ட ஜயலக்ஷ்மி பல சங்கீதப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றுள்ளார். குமாரி ஜயலக்ஷ்மியின் சங்கீத ஞானத்தைப் பாராட்டிச் சேலம் தமிழிசைச் சங்கத்தார் "கானவேணி" என்ற பட்டத்தையும் அளித்திருக்கின்றனர். குமாரி ஜயலக்ஷ்மி மேலும் மேலும் உழைத்துச் சங்கீத உலகில் ஒரு நல்ல நட்சத்திரமாக விளங்குவார் என்று எதிர்பார்க்கிறோம்.

கொடுமையால் அழித்து விட முடியும்? எகிப்து நாட்டு பாரோவா காலத்திலிருந்து, இன்று வரை எத்தனையோ கொடுமைகளுக்கு ஆளான யூத இனம் அழிந்ததா? அதற்கு மாருக, எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கும் உரனையல்லவா, மூவாயிரம் ஆண்டுக்கொடுமையின் மூலமாக அது பெற்று விட்டது!

இன்ஞென்று. கதையிலே, பாம்பை விட்டு விட்டு எலியை நோக்கி ஓடுகிறது பூனை. எந்தப் பேராசையும் சுயநலமும், பாம்பைப் பிடிக்கப் பூனையைத் தூண்டினவோ, அதே உணர்ச்சிகளே பாம்பை விட்டு, எலியை நோக்கிப் பூனையைப் பாய வைக்கின்றன. உடனே பாம்பு குரங்கைக் கடிக்க, குரங்கு வெகுண்டு, பூனையைக் கொன்று விடுகிறது. குரங்குக்கு மாத்திரம் சுயநலம் இராதா? ஏகாதிபத்திய வெறியாட்டத்தில் இப்படித்தான் ஒன்று கூடி மற்ற நாடுகளைச் சூறையாடும் வல்லரசுகள் ஒன்றை ஒன்று மாய்த்துக் கொள்ளுகின்றன!

மூலக் கருத்து ஒன்று. அதைக் கதையிலே தொடர்ந்து செல்லும்போது, இடையிலே பல நுட்பமானகருத்துக்கள், இப்படி மின்னல் போலப் பளிச்சிடுவதைப் பார்க்கிரேம்.

ஆனல் கருத்து ஒன்றையும் நேரடியாக ஆசிரியர் சொல்வதில்லை. சொன்னல் உருவகத்தின் அழகும், கலைப் பாங்கும் குன்றி விடுமே! கதையைக் கதையாகவே படிக்கலாம். குரங்கும், பூனையும், பாம்பும், எலியும் பேசுகின்றன என்ற ஒன்றைத் தவிர, இயற்கைக்கு மாருக ஒன்றும் செய்யவில்லை. எளிய தமிழில், கவிதை ஒளி நிரம்பிய பழகு தமிழில் கதை நடந்து செல்கிறது. கண்முன்னே பாம்பைப் பிடித்துப் பரிபவத்தில் ஆழும் பூனையையும் குரங்கையும் பார்க்கிரேம். கதை இப்படித்தான் நடந்திருக்கும் என்று எண்ணுகிரேம். கதையின் பால் போன்ற சுவையிலே தோய்ந்து விடுகிரேம். அந்தப் பாலுக்குள்ளே, நெய் போல நிறைந்து நிற்கும் சிந்தனை ஆழத்தை, மெல்ல மெல்ல உணர்கிரேம். கதையின் சுவை கருத்துலகத்துக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. கருத்தின் நுட்பம் கதையின் சுவைப் பந்தலில் தேன் மாரி பெய்கிறது.

கதையின் முடிவிலே, ராஜாஜி சொல்கிருர்: "இந்தக் கதை குழந்தைகளுக்கு எளிதில் விளங்கும். பெரியோர்கள் சிறிது கஷ்டப்படுவார்கள். இது ஜெர்மனி பிரச்னையா என்று கேட்பார்கள்."

கேட்டால் என்ன? கேட்க வைப்பது தானே உருவகக் கதையின் நோக்கம்? அதை இவ்வளவு அருமையாக நிறைவேற்றிய பிறகு, நம்மைப் பார்த்து, புன்முறுவலுடன், 'உங்களுக்கு விளங்குமா, குழந்தை உள்ளம் படைத்தால் அல்லவா, குறுகிய தன்னலத்தால் கண்ணைக் குருடாக்கிக் கொள்ளாமல் இருந்தால் அல்லவா, இந்தக் கதையின் பொருள் விளங்கும்?' என்று கேட்கிருர்.

'குழந்தைகளுக்குப் புரியும்' என்றே ஓர் அழகிய கதை இந்நூலில் இருக்கிறது. தத்தம் பாஷையே உயர்ந்தது என்று ஒவ்வொருவரும் பேசுகிருர்கள். அதுவே தெய்வ பாஷை என்றும் சொல்லுகிருர்கள். அதுவும் தெய்வ பாஷை என்று சொன்னல் குற்றமில்லை. 'அதுவே' என்று சாதிக்கும் பொழுதுதான், மனிதன் தன் சிறுமைக்குள்ளே எப்படித் தெய்வத்தை அடைக்க முற்படுகிருன் என்பது தோன்றுகிறது. தோன்றுகிறதா? இல்லை. நமக்குத் தோன்றவில்லை. நான், என்னுடையது என்ற களங்கங்களை நீத்த குழந்தை உள்ளத்துக்குத் தோன்றுகிறது. நமக்கு என்ன தோன்றுகிறது. தெரியுமா? ராஜாஜி சொல்கிருர், கேட்போம்:

> நிரைக்குப் பின் பகவான் பேசினன்.
>
> மேழ இறங்கும்போது ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டே இறங்கினர்கள்.
>
> "பார்த்தாயா தம்பி! கடவுள் பேசியது தமிழ்" என்கிருர்கள் தமிழர்......
>
> "பார்த்தாயா! பகவான் பேசிய பாஷை நம்முடைய ஹிந்தி. இந்த மூடர்களுக்கு இநிமேலாவது அறிவு உண்டாகுமா?" என்று பேசிக் கொண்டார்கள் வடக்கத்தியார்கள்.
>
> "ஆஹா! ஈசுவரன் வாயிலிருந்து வந்த மராட்டியைக் கேட்டாயா?"
>
> "வங்காளம் அல்லவா ஆண்டவன் பேசியது? அதுதான் தேவபாஷை" என்று வங்காளியர் சொன்னர்.

கொஞ்சம் இருங்கள். இப்படித்தானே நாம் பேசுகிரேம்! நம்முடைய ஆணவம் இந்த வகையிலே நம்மைக் குறுக்கும் போது, மனிதர் பேசும் பாஷைகள் மட்டுமல்ல, கிளியும், யானையும் பேசுவதும், உலகில் உள்ள எல்லா உயிர்களின் அசைவும், இறைவன் பேசுகின்ற பாஷை என்று எப்படி நமக்குத் தெரியப் போகிறது? குழந்தைகளுக்குத்தான், குழந்தை உள்ளம் படைத்தவருக்குத் தான் இது தெரியும்.

ஆகவேதான் ராஜாஜி நம்மைக் கேட்கிருர்: "இக் கதைகள் உங்களுக்குப் புரியுமா?" என்று.

கேட்கட்டும். அத்தனை கதைகளையும் முழுவதும் படித்துவிட்டு, பலதடவைகள் படித்துவிட்டு, அவரை நாம் கேட்கலாம்: 'விளங்காதுதான். ஆனல் விளங்கும்படி உங்கள் கற்பனை சக்தி செய்துவிட்டதே! அந்தக் குற்றத்தை ஏன் செய்தீர்கள்?'

இதற்குப் பதிலாக, அவர் இன்னொரு உருவகக் கதையை, இன்னும் பலப்பல உருவகக் கதைகளை, நமக்குத் தந்தால், தந்துவிட்டுப் போகட்டும். அதைத் தானே நாம் வேண்டுகிரேம்!



சென்னை...
கெயிட்டி · பாரத்
ராக்ஸி மற்றும்
தென்னாடெங்கும்
நந்தி பிக்சர்ஸ்
சௌபாக்கியவதி
வசனம்...
A.L. நாராயணன்
டைரக்ஷன்...
ஜம்பணு
M.A., B.Ed
நந்தி பிக்சர்ஸ்..... பெங்களூர்-9.



பாவை விளக்கு

அத்தியாயம் 21

கதையும் கடிதமும்

தணிகாசலம் 'மலர்க் கொத்'தையும் செங்கமலத்தின் கடிதத்தையும் படித்துத் தனக்குள் சிரித்துக் கொண்டான். அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும்போது அவனால் இப்படிச் சிரிக்க முடியுமென்று தோன்றவில்லை. நாகநாதன் அவன் எழுதிய எழுத்துக்களைக் கிழித்து முகத்தில் வீசிய காட்சி அவனுக்குக் கசப்பைத் தந்தது. குற்றம் செய்திருந்து தண்டனை கிடைத்தால் பொறுத்துக் கொள்ளலாம். குற்றம் செய்யாததற்காகத் தண்டனை கொடுத்தாரே!


செங்கமலம் அவனுடைய கசப்பை மாற்றிச் சிரிக்க வைத்தாள். சந்தோஷச் சிரிப்பு அல்ல. வேதனை கலந்த சிரிப்புத்தான் அது.

அவள் எழுதி யிருந்தாள் :—

தங்களுக்கு நான் கொடுத்த ஏமாற்றத்துக்கு என்னை நன்றாய்ப் பழி வாங்கிக் கொண்டீர்கள். உங்கள் கதையை நான் படித்து விட்டு ஆத்திரம் தீர அழுதேன். உங்களைத் தவிர வேறு யார் இப்படி எழுதுவார்கள்? உங்களுக்குக் கதை எழுதத் தெரியுமென்று என்னிடம் சொல்லவில்லையே. நீங்கள் புதுப்பட்டியில் இருப்பீர்கள் என்று நினைத்து இதை எழுதுகிறேன்.

நீங்கள் எழுதிய கதையை என்னால் புகழ முடியாது; பாராட்ட முடியாது. கொஞ்சங்கூட ஈவு இரக்கமில்லாமல் என்னை அதில் சின்னா

அகிலன்



பின்னப் படுத்தி விட்டீர்கள். நான் உங்களுக்குச் செய்த கொடுமைக்கு இவ்வளவு கடுமையான தண்டனையா? என் உயிருள்ள வரையில் நான் இதை மறக்க மாட்டேன். இனிமேல் இப்படி ஒரு தவற்றை என் வாழ்க்கையில் ஒருநாளும் செய்ய மாட்டேன்.

என் தவற்றை உங்களால் மன்னிக்க முடியாது. நீங்கள் மன்னிக்கவும் இல்லை. ஆனால் உங்களிடம் திரும்பத் திரும்ப மன்னிப்பு கேட்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. நான் இப்போது நேரில் வர முடியுமானால் உங்களை அந்தத் தாமரைக் குளத்துக்கு அழைத்துக் கொண்டு போய், முன்பு ஒருநாள் 'என்னை அமிழ்த்திக் கொன்று விடுங்கள்' என்று சொன்னேனே, அப்படிச் சொல்வேன். நீங்கள் கொல்லாவிட்டால் உங்கள் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்பேன். தயவுசெய்து என்னை மறந்து விடச் சொல்லி மன்றாடுவேன்.


என்னைப் பெற்றெடுத்த தாயார் நாம் கட்டியிருந்த கோட்டைகளையெல்லாம் ஒரே நாளில் தகர்த்தெறிந்து விட்டாள். நான் நினைத்திருந்த வழிகளையெல்லாம் ஒரே இரவுக்குள் அடைத்து விட்டாள். அவளுடைய எண்ணத்துக்கு நான் கைப்பொம்மையாகி, இப்போது அவள் விருப்பத்தையே என் விருப்பமாகவும் ஆக்கிக் கொண்டு விட்டேன்.

சிறுபிள்ளைத்தனமாக நான் உங்களிடம் நடந்து கொண்டேன். உங்களை என்னிடம் அன்பு கொள்ளத் தூண்டினேன். உங்கள் நம்பிக்கையை வளர்த்தேன். நானும் வளர்த்துக் கொண்

டேன். ஆனால் மனமறிந்து நான் வேண்டுமென்று எதையும் செய்யவில்லை. பின்னால் நடக்கப் போகிறதை தாண்டி விடலாம் என்று மிகவும் எனக்குத் தோன்றியது.

என் தாயார் உலகம் அறிந்தவள். மிகவும் கெட்டிக்காரி. எனக்குத் தெரியாமலே என்னிடம் சொல்லாமலே, எனக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்து விட்டாள்....என்னுடைய எதிர்கால நன்மையில் அவளுக்கு இருந்த அக்கறை மிகவும் அதிகம். நான் அவளுக்கு ஒரே பெண்.

இப்படியெல்லாம் நடக்குமென்று அவள் எதிர்பார்க்கவில்லையாம். நானும் அவள் செய்





எதையும் மறைக்கவில்லை. அவளுக்கு அதைக் கேட்டவுடன் வெறியே பிடித்து விட்டது. உங்களைப் பற்றிக் குற்றம் குறையே சொல்லவில்லை. என்னையும் அவள் துன்புறுத்தவில்லை.


தன்னைத்தானே போட்டுச் சித்திர வதைப் படுத்திக் கொண்டாள். அழுது புலம்பி, தலை மயிரைப் பிய்த்துக் கொண்டு, முட்டி மோதினாள். அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. உங்களை நான் மறக்காவிட்டால், நாம் சந்தித்த அதே படித்துறையில் இறங்கி, குளத்தில் பிணமாய் மிதப்பதாகச் சத்தியம் செய்தாள். பைத்தியக்காரி போல் கொல்லை வழியாகச் சுவரேறிக் குதிக்கப் போனவளை நான் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தேன். தாய்ப் பாசத்தைத் தவிர நான் உங்களைச் சந்திக்கும் வரையில் வேறு எந்தவிதமான பாசத்தையும் அறியாதவள்.

பாசமும் உண்டு; எனக்கு அவளிடம் பயமும்உண்டு. என்னைப் பெற்று வளர்த்துப் பாலூட்டிச் சீராட்டியவளை என்னால் மறக்க முடியவில்லை. என்னைப் படிக்க வைத்து, பாட வைத்து, ஆட வைத்தவளை மீற முடியவில்லை. உங்களையும் அவளையும் நான் ஒப்பிட்டுப் பார்த்தேன். உங்களுடைய அன்பு மாசு மறுவற்ற அன்பு. அவளுடைய பாசமோ பயங்கரமான அளவுக்கு வளர்ந்து விட்டது. நான் பாசத்துக்குப் பயந்தேன்; பணிந்து விட்டேன்.

பணிந்த மறு விநாடியிலிருந்து என்னைப் பெட்டிப் பாம்பாக மாற்றி விட்டாள். கண்ணபுரத்துக்கு நீங்கள் புறப்படும் போது உங்களை நான் எட்டிப் பார்க்கப் பட்ட பாடு!

நான் இருந்த நிலையில் எனக்கு இருந்த முன்னேற்பாடுகளைப் பற்றி அறியவில்லை.

அன்றைக்குஇரவு நம்மை ஒன்றாகப் பார்த்த பிறகு, அவள் என்னை அழைத்து வந்து, எல்லாவற்றையும் கேட்டாள். எனக்கு உங்கள் கடிதம் தெம்பு தந்தது. நான் ஒன்றையும் ஒளிக்கவில்லை. பயப்பட்டு



உங்களிடம் விவரம் சொல்லமுடியவில்லை. நீங்கள் கண்ணபுரத்துக்குப் போயிருப்பது என் தாய்க்குத் தெரியும். திரும்புவதற்குள் என்னை அழைத்துக் கொண்டு கிளம்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவசரமாய்ச் செய்து விட்டாள். நல்ல வேளை; புறப்படும் சமயத்திலாவது உங்கள் முகத்தைக் காண முடிந்தது. சைக்கிளுடன் நீங்கள் நின்ற கோலத்தை நினைத்தால் என்னால் அழாமல் இருக்க முடியவில்லை. கடிதம் எழுத முடியாதபடி எனக்கு எந்த நேரமும் காவல். 'என்னை மறந்து விடுங்கள்' என்று ஒரு வரி எழுதுவதற்காக நான் பத்து நாட்கள் முயற்சி செய்தேன். பிறகு நானாக அதை விட்டு விட்டேன். மனம் தனக்குத்தானே போராடிக் களைத்துப் போய் விட்டது.



நீங்கள் என்னை மறந்து விடுங்கள்.

இப்போது நான் ஒரு இளம் மிராசுதாரின் தாலி கட்டிக் கொள்ளாத மனைவி. அவர் என்னைப் பிரியத்துடன் நடத்துகிறார். என்னுடைய கலையை ரசித்துப் போற்றுகிறார். அன்பாகப் பேசி என் பழைய கவலைகளை மறக்கச் செய்து விட்டார். நான் இனி அவருக்கு என் கனவிலும் துரோகம் செய்ய மாட்டேன். சமூகத்தில் மற்றப் பெண்களுக்குள்ள மதிப்பு எனக்கு இல்லை. அதற்காகவே இரண்டு மடங்கு பொறுப்புடன் என் பெண்மையைக் காப்பாற்றுவேன். மதிப்புக்காக வாழாமல் மனத்துக்காக வாழ ஆசை. நீங்கள் என்னை மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும்.

சமஸ்தானத்தில் புதுச் சட்டம் கொண்டு வரப் போகிறார்களாம். நாங்கள் இனி முன்போல் கோவிலுக்கு அடிமையாக இருக்க வேண்டியதில்லை. புதுப்பட்டிக்கு இனிமேல் வரவும் மாட்டேன். இந்தக் கடிதத்தில் ஏன் நான் விலாசம் எழுதவில்லை, தெரியுமா? எனக்கு நீங்கள் பதில் எழுதவேண்டாம். என்னைப் பார்க்கவும் முயற்சி செய்ய வேண்டாம். எனக்கு அது மிகவும் தொல்லை தரும்.

எப்போதாவது எங்கேயாவது நாம் சந்தித்தால் பழைய உறவை அடியோடு மறந்து விட்டுப் பேசுவோம். மகிழ்ச்சியுடன் சிரித்துப் பேசுவோம்.

விஷப்பாம்பு என்றோ, வேண்டுமென்றே உங்களை ஏமாற்றி விட்டேன் என்றோ, இனியும் நினைக்காதீர்கள். நான் எப்படிப்பட்டவள் என்பது கடவுளுக்குத் தெரியும். நீங்கள் கடவுளை நம்புகிறவராயிற்றே? என்னையும் நம்புங்கள். நான் பிறந்த சமூகத்தில் பெண்ணாய்ப் பிறந்தால் அவள் தனக்கென்று வாழ முடியாது.

இனி நீங்கள் கதை எழுதினால் இப்படி உணர்ச்சியைக் கொட்டி என்னை அழ வைக்காதீர்கள். 'அதிக உணர்ச்சி படைத்தவர்கள் வாழ்க்கையில் கஷ்டப்படுவார்கள்' என்று அம்மா அடிக்கடி சொல்வாள். உங்களுடைய கதையில் இனி ஏமாற்றம் இருக்க வேண்டாம்; நம்பிக்கை இருக்க வேண்டும். அதை முதன் முதலில் படிப்பதற்கு உங்களுக்கு அன்புத் தங்கை ஒருத்தி இங்கே ஆவலுடன் காத்திருக்கிறேன்.

நான் அழுது தீர்த்து விட்டேன்; நீங்கள் இப்போது சிரியுங்கள்; நன்றாகச் சிரியுங்கள். சிரித்துக் கொண்டே இனிமேல் பல கதைகளை எழுதுகிறீர்களா?

தங்கள் அன்புள்ள,
செங்கமலம்

இரவில் சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போன தணிகாசலத்தின் மார்பில் கதை வெளிவந்த பத்திரிகை பிரித்துக் கிடந்தது. தன்னுடைய சின்னஞ்சிறு வாழ்க்கையில் அழகான சலனங்களை ஏற்படுத்தி விட்டுச் சென்ற செங்கமலத்தை எண்ணிப் பெருமூச்சு விட்டான். இளமைப் பருவத்தில் குறுக்கிட்ட இரண்டாவது பெண்ணின் அத்தியாயம் இத்துடன் முடிந்து விட்டதா? தன்னுடைய நெஞ்சில் ஓர் சோக முத்திரையை விட்டுச் செல்வதற்காக அவள் மின்னலைப் போல் தோன்றி மறைந்தாளா? செங்கமலத்

தையும் மறக்க முடியாது; அவள் கொடுத்த முதல் கதையையும் இனி மறக்க முடியாது.

செங்கமலத்தையும் தேவகியையும் ஒப்பிட்டுப் பார்த்தான் தணிகாசலம். தேவகியை அவன் மறுத்தான்; இப்போது செங்கமலம் அவனை மறுக்கிறாள். இரண்டு பேர்களில் யாரையுமே அவனால் திரும்பவும் அடைய முடியாது. தேவகி சூடிக் கொள்ளக்கூடிய மலர் இல்லை; பூசை செய்யப்பட வேண்டிய மலர். செங்கமலமோ சட்டைப் பட்டியிலே செருகிக் கொள்ளக் கூடிய நந்தவனத்து ரோஜா; ஆனால் அதுதான் அவனிடமிருந்து பறி போய்விட்டதே!

பறி போனதைப் பற்றி அவன் மிகுதியாகக் கவலைப்படவும் இல்லை. அந்த மலர் தன்னுடைய புத்தம்புது மணத்தை அவனிடம் விட்டுச் சென்றிருக்கிறது. மற்றொரு சமயமாக இருந்தால் செங்கமலத்தினிடம் அவனுக்கு இரக்கமோ, பரிவோ, மன்னிப்பு உணர்ச்சியோ ஏற்பட்டிருக்காது. அவளுடைய கடிதத்தில் அவளுடைய கதையும் இருந்தது. கதையையும் கடிதத்தையும் சேர்த்துப் படித்தவுடன் அவன் அவளை முழு மனத்துடன் மன்னித்து விட்டான். பெண்ணின் அன்பு காதல் உணர்ச்சியாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லையே? செங்கமலம் எங்கே, எப்படி இருந்தாலும் நன்றாக வாழட்டும். அவளைத் துணைவியாகப் பெற்றவன் அதிர்ஷ்டக்காரன்தான். தன்னைப் போன்ற ஏழையின் நிழலில் அந்தக் கொடி வாடி வதங்காமல் செல்வக் கதிரில் குலுங்கி மலரட்டும்.

காதலைக் கொடுக்காத அவள் கற்பனையைக் கொடுத்தாள்; கதையைக் கொடுத்தாள்; முதல் ரசிகையாகவும் ஆகிவிட்டாள். வாழ்க்கையின் தோல்விதான் லட்சியத்தின் வெற்றியா? இதுதான் எதிர்கால லட்சியமா? தேவகி அன்றொரு நாள் சுட்டிக் காட்டிய தாழம்பூ மணம் இந்தக் கற்பனைதானா? அவன் சுட்டிக் காட்டிய ஒன்றைச் செங்கமலம் தனக்குத் தெரியாமலே தூண்டி விட்டிருக்கிறாளா?

தோல்வி தந்த வெற்றி அவன் போர்வையை இழுத்து விட்டுக் கொண்டு உறங்கப் போனபோது அவன் உதட்டில் புன்னகையை நெளியச் செய்தது.

மறுநாள் காலையில் அவன் மராமத்து இலாகா குமாஸ்தாவாகப் படுக்கையை விட்டு எழுந்தான். காதல், கலை இந்த விவகாரங்கள் மாலை அல்லது இரவு நேரத்துக் குரியவை. பட்டப் பகலில் மனிதன் உழைக்க வேண்டும்; வயிற்றுச் சோற்றுக்கு வழிதேட வேண்டும். முப்பத்தைந்து ரூபாய்த் தாற்காலிகக் குமாஸ்தாவாக அவன் தன்னை அலுவலகத்துக்குத் தயார் செய்து கொண்டான். ஆபீசுக்குப் போவதற்கு முன்னால் அவன் தலைமைக் குமாஸ்தா ரங்கராஜனை வீட்டில் சென்று பார்க்க விரும்பினான். அவரைப் பற்றி மற்றவர்கள் கூறியது உண்மையா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

தன்னை விட வயது, அநுபவம், பதவி இவற்றில் உயர்ந்தவரிடம் இது போன்ற சிக்கலான விஷயங்களைக் கேட்கலாமா என்று அவனுக்குத் தோன்றவில்லை. மனத்தில் பட்டதை அவனுக்கு மறைக்கத் தெரியாது. மேலும் ரங்கராஜன் மிகப் பெரிய மனிதராக அவனுக்குக் காட்சி கொடுத்தார். கடவுள், கலை, அரசியல் பல விஷயங்களை அவர் ஆழ்ந்த



அறிவுடன் அவனிடம் பேசியிருக்கிறார். அவரா இப்படி நடந்து கொள்வார்? அறிவாளிகள் தவறு செய்வார்களா? கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் தவறு செய்வார்களா?

அறிவாளிகளும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களும் மனிதர்கள் தாமே என்று ஏனோ தணிகாசலத்துக்குத் தோன்றவில்லை. இந்த விஷயத்தில் அவன் முட்டைக்குள்ளே இருந்து வெளி உலகத்தை வேடிக்கை பார்க்கும் கோழிக் குஞ்சாக இருந்தான். சிறகு முளைக்காத சிறு பறவை.

ரங்கராஜன் அவனை அன்புடன் வரவேற்றார். அலுவலகம் புறப்படுவதற்கு இரண்டு மணி நேரம் இருந்ததால் அவனிடம் நிதானமாகப் பேசினார். அவன் கூறிய விவரங்களுக்காக அவன்மீது

அவர் கோபப்படவில்லை. இரண்டு மடங்கு பரிவு காட்டினார்.

காப்பி வரவழைத்துக் கொடுத்தார்.

"இந்தக் காப்பியைக் குடிப்பதற்கு முன்னால் நீங்கள் எனக்குப் பதில் சொல்ல வேண்டும்" என்றான் தணிகாசலம். "நேற்று நீங்கள் அங்கே வந்திருந்தால் அந்த வைரக் கடுக்கன் பேர்வழி கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டிருப்பீர்களா?"

"தாராளமாய் வாங்கிக் கொண்டிருப்பேன்" என்று அவர் அமைதியாகப் பதிலளித்தார்.

"இதற்காகத்தானா என் வேலைகளையும் நீங்கள் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறீர்கள்? என்னிடம் பிரியமாக இருப்பதும் இதற்குத்தானா?"



ரங்கராஜன் மெல்லச் சிரித்தார். "வேலையைப் பற்றி ஒரு வகையில் நீ சொல்வது சரிதான். ஆனால் பிரியமாக இருப்பதற்கு அது காரணமில்லை. உன்னைக் கண்டவுடன் எனக்கு எப்படியோ பிடித்து விட்டது. உன்னைப் போலத்தான் நானும் அந்தக் காலத்தில் வெகுளித்தனமாக நடந்து கொண்டேன். உன்னிடம் பிரியமாக இல்லாமல் கூட நான் என் இஷ்டப்படி நடக்க முடியும். ஏன், நாகநாதனைப் போல் உன்னிடம் எனக்கு எரிந்து விழத் தெரியாதா? எனக்குக் கீழ்தானே நீ வேலை செய்கிறாய்?" என்றார் அவர்.

"எழுத்தைக் கிழித்து முகத்தில் வீசி விட்டார்" என்று கூறிக் கண் கலங்கினான் தணிகாசலம். குரல் தழுதழுத்தது. ஏழைப் பிள்ளையாக வளர்ந்தாலும் செல்லப்பிள்ளையாக வளர்ந்தவன். பிறகு, "நீங்களும் என்னை ஏமாற்றி விட்டீர்கள்" என்றான்.

ரங்கசாமி கால்மணி நேரம் யோசனை செய்து விட்டு அவனிடம் பேசினார். "நான் மாத்திரம் உன்னை ஏமாற்றவில்லை. இன்ஜினீயர் நாகநாதன் என்னை ஏமாற்றுகிறார். அவரைப் பெரிய பணக்காரர்கள் ஏமாற்றுகிறார்கள். இப்படி எளியவரை வலியவர் ஏமாற்றுகிற வித்தை எங்குமே நடந்து கொண்டு வருகிறது. ஏமாற்றாமல் வாழமுடியாது என்னும் நம்பிக்கை வளரும் காலமிது."

தணிகாசலத்துக்குள்ளிருந்த மிகப் பெரிய மனிதன் விழித்துக் கொண்டு, ஒரு துரும்பைப் பார்ப்பது போல் ரங்கராஜனைப் பார்த்தான். தலைமைக் குமாஸ்தாவிடம் அடங்கி நடக்கும் குட்டிக் குமாஸ்தாவாக அவன் இல்லை.

"நான் செய்வது தப்புத்தான்" என்று ஒப்புக் கொண்டார் ரங்கராஜன்.

"ஆனால் அந்தத் தப்பை மறுபடியும் என்னால் செய்யாமல் இருக்க முடியாது. தெரிந்துதான் செய்கிறேன். எண்பது ரூபாய் சம்பளத்தில் ஏழு பேர்கள் வாழ வேண்டும். மூன்று பெண் குழந்தைகள் கல்யாணத்துக்கு நிற்கிறார்கள். என்னை நீ என்ன செய்யச் சொல்கிறாய்?"

தணிகாசலத்துக்கு இது நியாயமென்று படவில்லை. என்றாலும் அவர் மீது அநுதாபம் மிகுந்தது; இரக்கம் உண்டாயிற்று. இத்தனை பெரிய மனிதர் தன்னிடம் பணிந்து பேச வேண்டிய அவசியம் ஏன் வந்தது?

"தணிகாசலம்! ஏமாற்ற வேண்டும், பொய் சொல்ல வேண்டும், அகப்பட்டுக் கொள்ளாமல் திருட வேண்டும், இப்படியெல்லாம் செய்தாலே வாழ முடியும் என்ற அளவுக்கு எங்குமே மனப்பான்மை வளர்ந்து விட்டது. கிராமத்து உழவன் நெல் மூட்டையில் பதரைச் சேர்த்து அளந்து விடுகிறான். பட்டணத்து வியாபாரி அரிசியில் தண்ணீர் தெளித்து நிறை காட்டுகிறான். கலப்படம் இல்லாத சாமான்களுக்குக் கடைகளில் பஞ்சம் வந்து விட்டது. பஞ்சாலைத் துணியில் பத்து முறை கட்டினால் தாங்கக் கூடிய துணி இருக்கிறதா? வியாபாரிகளைக் கேட்டால் வரி போடுகிறவர்களைச் சொல்கிறார்கள்; வரி போடுகிறவர்களைக் கேட்டால் நாட்டு நன்மைக்கென்று சொல்கிறார்கள்; வரிப் பணம் செலவாகிற லட்சணம்தான் நமக்குத் தெரிகிறதே! பாலம் கட்டுவது பாதியென்றால் பாழாய்ப் போவது பாதி."

"ஒன்றுமே செய்ய முடியாதா?" என்று கேட்டான் தணிகாசலம்.

"என்ன செய்ய முடியும்? நான் உன்னிடம் சாக்குப் போக்கு சொல்வது போல், இந்த நாட்டில் உள்ள ஒவ்வொருவனும் குற்றத்தை அடுத்தவன் மேல் சுமத்தப் பார்க்கிறான். தீமை இங்கே ஒரு நச்சுச் சக்கரமாய்ச் சுழன்று கொண்டிருக்கிறது. சமுதாய உணர்ச்சி, நேர்மை, நாணயம் எல்லாம் இங்கு குற்றுயிர் குலை உயிராய்க் கிடக்கின்றன. இதற்கெல்லாம் தண்டனை கொடுக்க வேண்டுமென்றால் என்னையும் சேர்த்துக் கொண்டு வந்து சவுக்கடி கொடுக்க வேண்டியதுதான். உலகம் இப்போது அயோக்கியத்தனத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறது. இப்போது நடந்து கொண்டிருக்கிறதே இரண்டாவது உலக மகா யுத்தம், இதன் செல்லப் பிள்ளைகளே கள்ள வியாபாரமும் லஞ்சமும். உலகத்தில் போர் மூண்டால் மனிதன் மட்டுமா சாகிறான்? ஒழுக்கமும் கூடவே செத்துப் போய் விடுகிறது."

தனி மனிதனில் தொடங்கி உலகம் வரையில் வந்து விட்டார் ரங்கராஜன். கடைசியாகத் தணிகாசலத்துக்குப் புத்திமதி சொன்னார். "நீ உணர்ச்சியுள்ள பிள்ளை; அனாவசியமாகத் தீமையுடன் முட்டி மோதிக் கொள்ளாதே. உன்னுடைய தலையில் ரத்தம் கொட்டி வீணாகச் சிரமப்படுவாய்."

தணிகாசலம் அலட்சியமாய்ச் சிரித்தான். "அது மாத்திரம் என்னால் முடியாது" என்றான்.

"புத்தகத்தைப் படித்து விட்டு நீ உலகத்தைப் பார்க்கிறாய். மனிதனுடைய வாழ்க்கையில் உயர்ந்த பருவம் இதுதான். உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டுமென்று துடிக்கும் பருவம். ஆனால் கவனமாக இரு; சமூகம் உன் காலைப் பிடித்துக் கீழே இழுத்து விடும்."

"இழுக்கட்டுமே! விழுந்து விட்டுப் போகிறேன்" என்றான் தணிகாசலம்.

"முட்டாள்தனம்" என்று சொல்லி நாற்காலியை விட்டு எழுந்தார்.

இருவரும் அலுவலகத்துக்குச் சென்றார்கள். அன்றிலிருந்து ரங்கராஜன் அவனுக்கு அன்றாட வேலைகளை ஒழுங்காகக் கற்றுக் கொடுத்தார். தணிகாசலமும் அவற்றைச் சுறுசுறுப்பாகக் கற்றுக் கொண்டான்.

அத்தியாயம் 22

பணம்! பணம்! பணம்!

தணிகாசலம் எழுதிய முதல் கதைக்குப் பத்திரிகையிலிருந்து ஐந்து ரூபாய் பணம் வந்திருந்தது. அத்துடன் ஆசிரியர் ஒரு கடிதமும் எழுதியிருந்தார். "உங்கள் கதை நன்றாயிருந்ததால் வெளியிட்டோம். வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குங்கள். மனத்தில் பட்டதைத் துணிந்து எழுதுங்கள். ஏற்ற கதையானால் வெளியிடுகிறோம். இல்லாவிட்டால் திருப்பி அனுப்புகிறோம்."

ஆசிரியர் எழுதிய அந்தக் கடிதம் அவனுக்கு உற்சாகம் தந்தது. வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கச் சொல்லியிருக்கிறார்; மனத்தில் பட்டதைத் துணிந்து எழுதச் சொல்லியிருக்கிறார். அவர் அவனுக்கு வழி காட்டுவது போல் தோன்றியது. அன்றைக்கு ஒருநாள் அலுவலகத்தில் நடந்ததை அப்படியே கதையாக எழுதினால் என்ன?

'இருபது ரூபாய்' என்று தலைப்பைப் போட்டுக் கொண்டு, குறிப்பு நோட்டை எடுத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டு நடந்ததை நடந்தபடியே எழுதினான். பெயர்களை மட்டும் மாற்றி விட்டான். இரண்டு மூன்று நாட்கள் ஓய்வு நேரத்தின் உழைப்பு ஒரு சிறு கதையாக உருவெடுத்தது. அதை எழுத உட்கார்ந்த போதெல்லாம் அவன் புது மனிதனாக மாறினான். தனக்குள்ளே இன்னொரு மனிதன் புகுந்துகொண்டு எழுதுவதைப் போல் உணர்ந்தான். குமாஸ்தா தணிகாசலத்தைவிட, கதை எழுதுகிற தணிகாசலம் மாறுபட்டவன். தான் எழுதுகிற கதையால் அவன் உலகத்தின் நாணயத்தையே காப்பாற்றுவது போல் கனவு கண்டான்.

கதையைத் தபாலில் அனுப்பி விட்டு அலுவலகத்துக்குச் சென்றான் தணிகாசலம். அங்கே அவனைப் பார்ப்பதற்காகப் புதுப்பட்டியிலிருந்து கண்ணுச்சாமி வந்து காத்துக் கொண்டிருந்தார். இந்த இரண்டு மாதங்களிலும் அவர் மூன்று நான்கு தடவைகள் வந்து விட்டார். வந்தபோதெல்லாம் கல்யாணப் பேச்சும் கடன் பேச்சுமே பேசினார். 'இளவட்டங்களிடம் கல்யாணப் பேச்சு பேசுவது அவர்களுடைய முதுகில் தட்டிக் கொடுப்பது போலாகும்' என்ற ரகசியத்தை அவர் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார். இந்த முறையும் தணிகாசலத்திடம் அவர் பழைய பாடத்தையே திருப்பிப் படித்தார்.

''நம்ம ஊர்ப் பையன் நீ; வேலை செய்கிற இடமும் நமக்குச் சம்பந்த முள்ள இடம். இந்த ஆபீசிலே ஐந்நூறு முதல் ஐம்பதினாயிரம் வரையில் நான் கண்டிராக்ட் எடுத்து வேலை செய்திருக்கிறேன். உன் அதிகாரி நாகநாதனை எனக்குத் தெரியும். நீ நம்ப ஊர்ப் பிள்ளைன்னு அவர்கிட்டே சொல்லட்டு'மா?''

''இல்லை; வேண்டாம்'' என்றான் தணிகாசலம்.

''அது கிடக்கட்டும்: நீ எனக்கு எப்போது கல்யாண விருந்து வைக்கப் போகிறாய்? ஓட்டல் கடலெண்ணெய் உடம்புக்கு ஆகாது. கல்யாணத்தேதியை நிச்சயம் பண்ணிவிட்டு எனக்குக் கடுதாசி போடு. தேவையான பணத்தை மடியில் கட்டிக்கிட்டு வந்து நிற்கிறேன்.''

கண்டிராக்டரின் தாராளம் தணிகாசலத்துக்குப் பெருமை தந்தது. அரைக் காசு சம்பளம் என்றாலும் அரண்மனைச் சம்பளம் அல்லவா? அதனால்தான் அவர் அடிக்கடி தன்னிடம் வந்து பேசுகிறார் என்று நினைத்துக் கொண்டான்.

கண்டிராக்டர் புறப்படும் சமயத்தில் மெதுவாக அவன் காதருகில் குனிந்தார். ''கிடைச்சிருக்கிற இடம் அருமையான இடம். பக்கத்திலே நடக்கிறதைப் பார்த்துப் பிழைக்கத் தெரிஞ்சுக்க. கல்யாணக் கடனையும் கட்டலாம்; நாலு காணி நஞ்சை நிலத்தையும் நம்ப ஊரிலே வாங்கிப் போடலாம்.''

கண்ணுச்சாமி போய்விட்டார்.

அன்றைக்கு மாலை அவன் விடுதிக்குச் சென்றபோது, பொன்வயலிலிருந்து அவன் தாயார் எழுதிய அவசரக் கடிதம் அறைக்குள் கிடந்தது. தங்கை லட்சுமிக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதென்றும் உடனடியாகப் புறப்பட்டு வரும்படியும் கல்யாணி எழுதியிருந்தாள். அடுத்த இரண்டு நாட்களும் விடுமுறையாதலால் கடிதம் கிடைத்த அன்றே புறப்படச் சொல்லி யிருந்தாள். தணிகாசலத்துக்கு அந்தக் கடிதம் தன் தங்கையைத் திருமணக் கோலத்தில் காண்பது போலிருந்தது. இரவு ரயிலில் பொன் வயலுக்குப் புறப்பட்டான். பொழுது விடிந்தால் சனிக்கிழமை. ஞாயிற்றுக்கிழமை இரவில் அங்கிருந்து திரும்பித் திங்கட்கிழமை அலுவலகத்துக்குச் செல்ல நினைத்தான்.

திரும்பத் திரும்ப அவன் மனம் தன் தங்கையின் கல்யாணத்தை நினைத்து ஆனந்தம் கொண்டது. தங்கைக்குத் திருமணம் முடிந்து விட்டால் பிறகு தாயாரைக் கண்ணபுரத்துக்கு அழைத்துக் கொண்டு வந்துவிடலாம். நான்கு ஆண்டுகள் கழித்துக் கௌரியைப் பற்றி நினைத்தால் போதும். அதற்குள் வேலையும் நிலைத்து விடும்.

ஆனால் பொன்வயலுக்குப் போய் இறங்கியவுடன் அங்கு நடைபெற்ற ஏற்பாடுகளைக் கண்டு அவன் திடுக்கிட்டான். லட்சுமியின் திருமணத்துக்கான எல்லா வேலைகளும் முன்பே முடிந்து விட்டன. துணிமணிகள், சாமான்கள் கூட வீட்டுக்கு வந்து விட்டன. இனி அதைப் பற்றி அவன் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. தங்கையைத் தனியாகக் கூப்பிட்டு,''உனக்கு மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டான். லட்சுமி பதில் சொல்லவில்லை; நாணத்தால் அவளுடைய முகம் சிவந்தது. ''சரி. உனக்குப் பிடித்து விட்டது! நான் தெரிந்து கொள்ள நினைத்தது இது ஒன்றுதான்'' என்று கூறிச் சிரித்தான்.

உண்மையில் தங்கையின் கல்யாணத்துக்காக அவனைக் கல்யாணியம்மாள்





எல்லாக் குழந்தைகளும்
விரும்புவது மிக எளிதில்
ஜீரணமாகும் கௌ & கேட்
டாக்டர்களும் தங்களது
சொந்தக் குழந்தைகளுக்கு
தேர்ந்தெடுக்கும் உணவும்
அதுவே இன்றைய உலகில்
கௌ & கேட்டே தலைசிறந்த
உணவாகத் திகழ்கிறது என்
பதற்கு இதுவே தக்க சான்
றாகும். உங்கள் குழந்தைக்கு
கௌ & கேட்டை வற்புறுத்
திக் கேளுங்கள்.

5465

COW & GATE MILK FOOD

The FOOD of ROYAL BABIES

அங்கு அழைக்கவில்லை. அதே தேதியில் அவனுக்கும் கௌரிக்கும் கல்யாணம் செய்து வைக்க வேண்டிய நெருக்கடி அவளுக்கு ஏற்பட்டு விட்டது. அப்படி அது நடக்காவிட்டால் சங்கரலிங்கத்துக்கும் கௌரிக்கும் திருமணம் முடிந்து விடும்போல் தெரிந்தது.

மங்களத்துப் பாட்டிக்குத் தணிகாசலத்தைக் கண்டவுடன்தான் உயிர் வந்தது. பேரனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்டது போல் மூச்சு விடாமல் பேசிக் கொண்டே போனாள். அவளுக்கு இருந்த பரபரப்பில் கௌரியைக் கொண்டு வந்து முன்னால் நிறுத்தி, "கட்டு தாலியை!" என்று அப்போதே வற்புறுத்துவாள் போலிருந்தது.

பாட்டிக்குப் பக்கத் துணையாகத் தாயார் கல்யாணியும் தங்கை லட்சுமியும் நின்றார்கள். கௌரி தணிகாசலத்தின் மனக்கண்ணுக்கு மாத்திரம் தெரியும்படியாக அவர்களுக்குப் பின்னால் நின்றாள். தணிகாசலம் இவர்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு செய்வதறியாமல் விழித்தான்.

தாயார் வீடும் மாமா வீடும் இரண்டு போர்முனைகளாக மாறி விட்டன. தாயார் வீட்டுப் போர்முனைக்கு மங்களத்துப் பாட்டி தலைமை தாங்கினாள். மாமா வீட்டுப் போர்முனைக்கு வீரம்மாள் பாட்டி வீராங்கனையாக விளங்கினாள். மாமா தங்கசாமி இந்தப் பக்கமும் இல்லை; அந்தப் பக்கமும் இல்லை. சந்தர்ப்பம் தெரிந்த அரசியல்வாதியைப் போல் காற்று எந்தப் பக்கம் பலமாக வீசியதோ, அந்தப் பக்கம் சாய்வார்.

தணிகாசலத்தின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மங்களத்துப்பாட்டி தன் மகனிடம் சென்றாள். தங்கசாமி அப்போது ஒரு செம்பு நிறையத் தளும்பிக் கொண்டிருந்த காப்பியை முக்கால் பகுதி குடித்துக் கொண்டிருந்தார். முழுவதும் குடித்து விட்டுத் தணிகாசலத்தைப் பார்த்து, "வா, எப்போ வந்தாய்?" என்று கேட்டார்.

மங்களம் நேரடியாகக் காரியத்தில் இறங்கி விட்டாள்.

"உன் மருமகன் உன்னிடம் பெண் கேட்க வந்திருக்கிறான்" என்றாள்பாட்டி.

'நான் அதற்கு வரவில்லை' என்று சொல்ல வேண்டும் போல் தோன்றியது தணிகாசலத்துக்கு. 'என் தங்கைக்குக் கல்யாணம் செய்து வைக்க வந்தேன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

"பெண்ணா?" என்று உதட்டைத் துடைத்துக் கொண்டார் மாமா.

"ஆமாம்; உன் பெண்ணை நீ ஒருவனுக்குத்தான் கட்டிக் கொடுக்க முடியும். தெரிந்ததா? இனிமேல் இப்படி இரண்டு பேருக்கும் தலையாட்டிக் கொண்டிருக்காதே. இவனுக்குப் பதில் சொல். பின்னை இதற்காகவே கன்னபுரத்திலிருந்து வந்திருக்கிறான்."

"என்னை ஏனம்மா கேட்கிறீர்கள்? உங்களுக்குள் எப்படியாவது ஒத்துப் போங்களேன். ராத்திரிப் பகலாய் உன் மருமகள் என்னிடம் நச்சரிக்கிறாள். நீ வேறு என்னை வாட்டி எடுக்கிறாய். நான் யாருக்கென்று பேசுவது?"

"நான் உன்னைப் பெற்றெடுத்த தாயில்லையா?" என்றாள் மங்களம்.

"பெற்றாய்; வளர்த்தாய்; எல்லாம் செய்தாய். ஆனால் பெண்ணைப் பெற்றவள் உன் மருமகள்தானே?"

மங்களத்துப் பாட்டி கொதிப்படைந்தாள். "உனக்கென்று ஒரு சொந்த எண்ணம் கிடையாதா?"

"கிடையாது, அம்மா!"

"தணிகாசலம் படித்த பிள்ளை; அரண்மனைச் சம்பளம் வாங்குகிறான். உன் பெண்ணும்ஒற்றைக்காலில் நிற்கிறாள்."

பெண் கௌரி அப்போது இரட்டைக் கால்களில் நின்றுகொண்டு சன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்!

"உனக்குச் சம்மதந்தானே?" என்று இரைந்து கத்தினாள் மங்களம்.

"சம்மதந்தான்" என்றார் தங்கசாமி.

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டாள் மங்களம். அவர் மேற்கொண்டு மெல்ல இழுத்தார்:

"சம்மதந்தான்; எதற்கும் உன்னுடைய மருமகளை ஒரு வார்த்தை கேட்டுக் கொள்; அவள் தன் தாயாரைக் கேட்டுச் சொல்வாள்."

"உன்னைப் பெற்றதற்கு அடிவயிற்றில் பிரண்டையைக் கட்டிக் கொண்டிருக்கலாம்" என்ற மங்களம் வாயில் வந்தபடி தன் மகனைத் திட்டினாள்.

இதற்குமேல் இரண்டு கிழங்களும் நேருக்கு நேர் மோதிக் கொள்ளத் தொடங்கின. மங்களத்துப் பாட்டி உருவத்தில் மலை; வீரம்மாள் பாட்டி எலி. ஆனால் வெறும் வாய்ச் சண்டையாதலால் குரல் வேகத்தில்தான் அவர்களுடைய வெற்றி தோல்வியை அளக்க முடிந்தது. பணக்காரியின் குரலுக்கு எப்போதுமே வேகம் அதிகம்.

தங்கசாமி மாமா வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக் கொண்டு வேடிக்கை பார்த்தார். கௌரி அழாக்குறையாகச் சன்னலுக்குப் பின் நின்று கொண்டிருந்தாள். அத்தை ரங்கநாயகி அடுக்களைக்குள் பாத்திரங்களைப் போட்டு உருட்டினாள். தணிகாசலம், 'இந்தக் காட்சியை வைத்து ஒரு கதை எழுதலாம் போலிருக்கிறதே!' என்று வியந்தான்.

வீரம்மாள் பாட்டி புத்திசாலி. சொந்தம் பாராட்டி, உரிமை பேசித் தன்னுடைய பேரனுக்குக் கௌரியைக் கேட்க முடியாதென்று அவளுக்குத் தெரியும். அதைவிட உரிமையும் சொந்தமும் தணிகாசலத்துக்கு இருந்தன. ஆனால் அவனிடம் பணமில்லை. இந்த ஒரு காரணத்தை விடாமல் இறுக்கிப் பிடித்தாள் வீரம்மாள்.

''நாங்கள் இரண்டாயிரம் ரூபாய்க்கு நகை செய்து போடுகிறோம். மேலே இரண்டாயிரம் செலவு செய்து கல்யாணத்தைப் பண்ணுகிறோம். நாளைக்கு எங்கள் வீட்டுக்கு இவள் வந்தால் மாதச் சம்பளத்தைப் பார்த்து அடுப்பில் உலை வைக்க வேண்டியதில்லை. இப்படி யாரா



வது வந்தால் தாராளமாய்ச் செய்து கொண்டு போங்கள். நான் குறுக்கே நிற்கவில்லை.''

'நாலாயிரம்!' என்று பெருமூச்சு விட்டான் தணிகாசலம்.

மங்களத்துப் பாட்டிக்கு இதற்குமேல் வீரம்மாளிடம் வீரம் பேசுவதற்கு வாயில்லை. இடித்த புளிமாதிரி உட்கார்ந்திருந்த தன் மகனிடம் திரும்பினாள். ''ஏண்டாப்பா, தங்கம்! நாலாயிரம் ரூபாய் வேணுமாமே? உனக்குப் பணந்தான் பெரிதா? அந்தப் பாழும் பட்டிக்காட்டில், பிடிக்காத பிள்ளையின் கழுத்தில் உன் பெண்ணைக் கட்டப் போகிறாயா?'' என்று கேட்டாள்.

''பணம் வேண்டாம்; பட்டணத்துப் பிச்சைக்காரனுக்கே உங்கள் பெண்ணைக் கொடுத்துக் கொள்ளுங்கள்!'' என்று வீரம்மாள் தன் மருமகன் மீது பாய்ந்தாள்.

கல்லுப் பிள்ளையார் அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.

தணிகாசலத்துக்குத் தன்னை இவ்வளவு கேவலமாக அந்தக் கிழவி பேசியது என்னவோ போல் இருந்தது. தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மெதுவாக அந்த இடத்தைவிட்டு எழுந்தான். இதற்குள் சன்னலுக்குப் பின்னால் நின்ற கௌரி கண்ணீரும் கம்பலையுமாய் வெளியே ஓடி வந்தாள்.

''அப்பா! இப்படி இவர்கள் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்த்துக் கொண்டு நீங்கள் சும்மா இருக்கிறீர்களே? உங்களுக்கு என்னைப் பற்றிக் கவலை இல்லையா?''

மற்ற மூன்று பேர்களுக்குமே அவளுடைய செய்கை தூக்கிவாரிப் போட்டது. தன்னையும் அவள் இடித்துக் காட்டுகிறாள் என்பதைத் தணிகாசலம் தெரிந்து கொண்டான்.

ஆண்பிள்ளைச் சிங்கத்துக்கு ரோஷம் வந்து விட்டது. பிடரியைச் சிலிர்த்துக் கைகளை உதறிக் கொண்டு பாட்டிகளுக்குக் குறுக்கே போய் நின்றான். பாட்டிகள் மூச்சு விடாமல் அடங்கி விட்டார்கள். தன் மாமாவைப் பார்த்து, ''கௌரியை எனக்குக்கொடுப்பதற்கு உங்களுக்கு இஷ்டமா? இல்லையா? இரண்டிலொன்று சொல்லுங்கள்'' என்று கேட்டான்.

மாமா தம் மாமியாரைப் பார்த்தார்; மாமியார் கௌரியைக் கொன்று விடுவதுபோல் பார்த்தாள். — சும்மா கிடந்தவனைத் தூண்டிவிட்டு எழுப்பி விட்டதே இந்தச் சண்டெளி!

''பதில் சொல்லுங்கள்; உங்களைத் தான் கேட்கிறேன்.''

''இஷ்டந்தான்'' என்று மெல்ல இழுத்தார் தணிகாசலத்தின் மாமா.

''சரி, உங்களுக்குச் சம்மதம்; இனி அத்தையைக் கேட்க வேண்டியதுதான் பாக்கி'' என்றான் தணிகாசலம். அவன் குரலின் அழுத்தத்தைக் கேட்டு அத்தையே வெளியில் வந்து விட்டாள்.

''சரி, அத்தை! நீங்கள் இதற்கு என்ன சொல்கிறீர்கள்?''

தன்னுடைய முகத்துக்கு எதிரில் நின்று பிள்ளையாண்டான் பேசியதை அவள் இதுவரை கண்டதில்லை. வெலவெலத்துப் போனாள்.

வீரம்மாள் குறுக்கிட்டுத் தன் மகளுக்கு யோசனை சொன்னாள். ''நாலாயிரம் ரூபாய் இருந்தால் செய்து கொள்ளலாம் என்று சொல்லேன்! இவ்வளவு தூரத்துக்கு வந்த பிறகு மரியாதை மட்டு எதற்கு? நாளைக்குக் கண்ணைக் கசக்கிக் கொண்டு உன் பெண் வீட்டுக்கு வந்தால் நீதானே அவதிப்படுவாய்?''

''நாலாயிரம் இல்லாவிட்டால்?...''

''இப்படிப் பேசினால் நடக்குமா?'' என்றாள் வீரம்மாள். ''பையனுக்குப் பணம் கொடுத்துக் கன்னிகாதானம் செய்யும் வழக்கம் நம்மில் கிடையாது.

அப்படிச் செய்ய இங்கே வசதியும் இல்லை'' என்றான்.

''நகையை மெதுவாய்ச் செய்து போட்டுக் கொள்ளலாம். கல்யாணச் செலவு மட்டும் எவ்வளவாகும்?''

வீரம்மாள் யோசனை செய்தாள். அவளுடைய தங்கையின் கல்யாணத்துக்காக அரும் பாடுபட்டுச் சேர்த்த பணத்தைத் தவிர அவர்களிடம் அரைக்காசு மீதமில்லை. ஆயிரம் காசுகூட இப்போதைக்கு அவர்களால் புரட்ட முடியாது. இந்த எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு. ''இரண்டாயிரமாவது வேண்டும்'' என்றாள்.

''இரண்டாயிரந்தானே?'' இன்னும் இரண்டு வருஷத்தில் பணம் சேர்த்து விடுகிறேன். பிறகு கல்யாணம் வைத்துக் கொள்ளலாம்.''

''அதுதான் முடியாது'' என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறினாள் வீரம்மாள் பாட்டி. ''இந்த மாதக் கடைசியில் உங்கள் லட்சுமிக்குக் கல்யாணம் நடப்பதற்குள் இவளுக்கும் நடக்க வேண்டும். கௌரியின் ஜாதகத்தில் இப்போது கல்யாணமென்று போட்டிருக்கிறது. நாங்கள் சங்கரலிங்கத்துக்கும் ஜாதகம் பார்த்து விட்டோம். இன்னும் இருபது நாட்களில் பணம் வராவிட்டால் எங்களைக் குற்றம் சொல்ல வேண்டாம்.''

தணிகாசலத்துக்குத் தான் படித்த வெனிஸ் வர்த்தகன் ஷைலக்கின் கதை நினைவுக்கு வந்தது. குறிப்பிட்ட நாளில் பணத்தைக் கொடுக்கா விட்டால் ஒரு பவுண்டு சதைத் துண்டை அறுத்துக் கொடுக்க வேண்டுமென்று அவன் பிடிவாதம் பிடித்தான். ஷேக்ஸ்பியர் எழுதிய அந்த ஷைலக்கின் வழி வந்தவள் போலும் வீரம்மாள்!

''பணத்துக்கு நான் எங்கே போவது? எங்களுக்கும் அப்படி என்ன வயதாகி விட்டது? நாலைந்து வருஷங்கள் வேண்டாம்; இரண்டே வருஷங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள்.''

''அது முடியாது'' என்றாள்வீரம்மாள்.

தன் அத்தை ரங்கநாயகியின் பக்கம் திரும்பினான் தணிகாசலம்.

''அம்மா சொல்கிறபடி கல்யாணம் கூடி வருகிற காலத்தில் செய்துவிட வேண்டும்'' என்றாள் அத்தை.

தணிகாசலம் வேதனையுடன் சிரித்தான். ''நாங்கள் தங்கையின் கல்யாண நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்துதானே இப்படிப் பிடிவாதம் செய்கிறீர்கள்? உண்மையில் உங்களுக்கு இதில் விருப்பமில்லை. என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லை. இதை நேரடியாக என்னிடமே சொல்லி விடுங்கள். எதற்காகச் சுற்றி வளைக்கிறீர்கள்?''

''பெரிய ஆண்பிள்ளைச் சிங்கம் மாதிரி, எங்களை அதட்டினாய்; பணப் பேச்சு வந்தவுடன் பதுங்குகிறாயே?'' என்றாள் வீரம்மாள். ''நாளைக்கு எப்படி நீ ஒருத்தியை வைத்துக் காப்பாற்றப் போகிறாய்?'' என்றாள்.

தணிகாசலத்தின் கண்கள் சிவந்தன; பயங்கரமாய்ச் சிரித்தான். ''நீங்கள் ஆசைப்படுகிற இடத்தில் கல்யாணம் செய்து வையுங்கள். உங்களுடைய பேரனுக்குச் செய்துகொள்ள வேண்டுமென்பதுதானே உங்கள் ஆசை? தாராளமாய் நாளைக்கு வேண்டுமானாலும் செய்து வையுங்கள். எனக்கு உங்கள் பெண் வேண்டாம்! எனக்குக் கல்யாணமே வேண்டாம்!''

கௌரி அடிபட்டவள்போல் கூச்சல் போட்டாள். அவளிடம் திரும்பிக் கூறினான்: ''கௌரி! இந்த ஏழையை நீ நினைத்துக் கவலைப்படாதே. நீ சிறு பெண். பணக்கார இடத்தில் சந்தோஷமாய் வாழ்க்கை நடத்து. பெரியவளாகி விவரம் தெரிந்தால் உனக்குப் பணத்தின் மதிப்பு தெரியும்.''

மின்னலைப் போல் திரும்பித் தன் தாய் வீட்டுக்கு ஓடி வந்தான். கண்கள் ஆற்றுப் பெருக்காய் வழிந்தன. திண்ணையில் குப்புறப் படுத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதான். அவனுடைய தாயாரும் தங்கையும் அவன் அருகில் நெருங்குவதற்கே பயந்தார்கள்.

அதற்குள் அடுத்த வீட்டிலிருந்து இடி இடிப்பதுபோல் சத்தம் கேட்டது. பெண்கள் ஒரே சமயத்தில் கூக்குரலிட்டுக் கத்தினார்கள். அத்தனை குழப்பத்திலும் மங்களத்துப் பாட்டியின் குரல் தனியே கேட்டது. ''அடி, பாவிகளா! பெண்ணைக் கொன்று விட்டீர்களே?'' என்று அடித் தொண்டையில் கத்தினாள். கல்யாணியம்மாளும் லட்சுமியும் அடுத்த வீட்டை நோக்கிப் பரபரப்புடன் வேகமாக ஓடினார்கள்.


தணிகாசலம் அழுவதை நிறுத்திக் கொண்டு உற்றுக் கவனித்தான். அங்கே என்ன நடக்கிறது? ஏன் இந்தக் குழப்பம்? கௌரிக்கு என்ன நேர்ந்துவிட்டது? அவளை அடித்துக் கொன்று விட்டார்களா? கைகளும் கால்களும் அவனை எழுந்து ஓடச் சொல்லி வற்புறுத்தின. ஆனால் அவன் எழுந்திருக்கவில்லை. என்ன நடந்தாலும் நடக்கட்டும்; மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.

ஏற்கெனவே எழுந்த அழுகுரலுடன் தங்கை லட்சுமியின் குரலும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒலித்தது. ''கௌரீ! கௌரீ!'' என்று பதறினாள்.

(தொடரும்)



சென்னை நகருக்கு டிஸ்ட்ரிபூட்டர்கள்: கராசு ஏஜன்ஸிஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு ◯ கோயமுத்தூர் பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜன்டு: B. பாலபட்டாபி (ஸ்தாபிதம் 1932) வைசியாள் தெரு, கோயமுத்தூர் மதுரை ஏஜன்டு: மெஸர்ஸ் மீனாக்ஷி என்டர்பிரைஸஸ், 4. கூட்ஸ் ஷெட் தெரு, மதுரை



35. "ப்ரூட்ஸலாத்"

"இதெல்லாம் ஒன்றும் எனக்குப் பிடிக்கவே யில்லை......"

"விட்டு விடு......"

"என்ன விட்டுவிடுவது...? வீட்டில் ஒரு வழியா......வாய்க்காலா......?"

"நீ என்ன சொல்கிறாய்?"

"அதுதான் சொன்னேனே! இந்தக்கடிதங்களைப் படிக்க ஆரம்பிச்சுட்டால்.... அன்னம் வேண்டாம்....ஆகாரம் வேண்டாம். உங்கள் வரையில் சரிதான்......"

"நியாயமான பேச்சு. நேயர்கள் கடிதம் ஒன்றைவிட ஒன்று எவ்வளவு நன்றாய் இருக்கிறது. ஆகாரமாம்! அன்னமாம்! அன்னாகாரங்களில் ஷட்ரஸம் இருக்க முடியும். இக்கடிதங்களிலோ நாடகங்களில் சொன்ன நவரஸம்......இன்னும் அலங்கார சாஸ்திரங்களிலும்......"

"அது என்ன ரஸமோ! எனக்கென்ன தெரியும்? எனக்குத் தெரிந்தது பருப்பு ரஸம், கொட்டு ரஸம், வேப்பம்பூரஸம், பொரிச்ச ரஸம், மைசூர் ரஸம்...... எலுமிச்சம் பழ......"

"பேஷ்! பேஷ்! போடு சக்கை! என் வீட்டுப் பரதேவதையே! உன் நகைச் சுவை அபாரம்......அபாரம்......"

"வீட்டில் சாப்பாட்டுக் கடை இன்னும் முடியவில்லையே என்று சொல்ல வந்தால்......இந்த அகட விகடம்......"

உடனே ஒரு புயற் காற்று. சில நிமிஷம் ஒன்றுமே புரியவில்லை. பிறகு பார்த்தால் அவ்விடத்தில் நான் மாத்திரம் இருந்தது தெரிய வந்தது.

இந்த ஜடத்துக்கென்ன தெரியும்! நேயர்களின் கடிதங்களைப் படிக்குங்கால் என்னென்ன அனுபவங்கள் ஏற்படுகின்றன, தெரியுமா?

"ப்ரூட்ஸலாத்" என்று ஒரு பதார்த்தம். சாப்பிட்டால்—ஒரு தன்மை. ஆனால் அதிலுள்ள மாம்பழமும் அன்னாசியும் ஒன்றாகுமா? ஆகாதுதான். ஒரு இனிப்புச் சுவை; இடையில் அந்தத் திராக்ஷையின் புளிப்பு — ஆச்சரியமான பதார்த்தம். கொடுத்ததை, அல்லது கிடைத்ததை ஒரே வாயில் சாப்பிட்டு விட்டுத்தான் தலையை நிமிர்வது என்று முனையும்போது — ஒரு "ஹோல்டான்" செய்ய வேண்டி வருகிறது. ஏன்? ஏதோ ஒரு கொட்டையைத் துப்ப வேணும்! சின்ன விஷயத்தில் இத்தனை விசேஷங்கள் சேர்ந்து அதைப் பெரிய விஷயமாக்கி விடுகின்றன.

போகட்டும். மற்றவற்றையெல்லாம் வேண்டாமென்று வைத்து விட்டு- இந்த 'ப்ரூட் ஸலா'த்தையே ஆரம்பம் முதல் கடைசி வரையில் ஒரு கை பார்க்கலாமா, வயிறுமுட்டும் வரையில்? அதுவும் முடியாது. நாக்குக்கு வேணும்போதும்- வயிற்றுக்கு வேண்டாம் போதும் ஆகிறது.

வயிற்றை நிரப்ப ஏற்றதல்ல. ஆனால் சாப்பாட்டின் 'பில்'லை உயர்த்துவதில்..? நேயர்களின் கடிதங்களும் அதேபோல் தான். சுகத்தைப் பற்றியும்-சுகவீனத்தைப் பற்றியும் சந்தோஷத்துடனும் துக்கத்துடனும் எழுதுகிறார்கள். ஆவல் நிரம்பியவை சில. அடியேனுக்குப் புகழுரைகள் சில. 'கல்கி'க்கு நன்றி செலுத்துபவை சில. இப்படியான ஒரு 'ப்ரூட் ஸலாத்' நேயரின் கடிதக் குவியல். இவை யாவற்றிலும் பொதுவாகக் காணப்படும் மனத்துக்கு இன்பமான ஒரு விஷயம் என்னவென்றால் நேயர் பொழியும் அன்பு - அன்பு - அன்பு முடிவற்ற அன்பு.

இப்படி அன்பைச் சொரியும் கடிதங்களைப் படிக்கத் தொடங்கி விட்டால்... தன்னை மறந்த [தவ?] நிலைபேற்படுவது சர்வ சாதாரணம். இதைப் புரிந்து கொள்ள முடியாத ஒரு ஜடம்...இந்த வீட்டில்...[இது அவள் காதில் எங்கேயாவது விழுந்து வைக்கப் போகிறது!]

7-9-57ல் கிடைத்த கடிதங்கள் முதல் 21-9-57ல் கிடைத்தவை வரையில் ஒரு தவணையாகப் படிக்கப்பட்டு, பதிலளித்த விஷயத்தில் ஒரு மிக ரஸமான அனுபவம் ஏற்பட்டது. வாசகர்கள் ஊகிப்பது சாத்தியமாகாது. நான் சொல்லட்டுமா? சொல்லியே விடட்டுமா? இக்கடிதங்களில் 80 சதவிகிதத்துக்கு அதிகப்படி தபால் கூலி செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கடிதங்களுக்கு அவ்வப்போது பதில் எழுதி யிருந்தால் இந்த அனுபவம் ஏற்பட்டிராதுதான். இடையில் 18-9-57 முதல் தபால் கூலி அதிகரிக்கப்பட்டதல்லவா? ஆகவேதான் இந்த அனுபவம் ஏற்பட்டது. உடனுக்குடன் பதில் எழுதாக் குற்றத்துக்கு— [தவிர்க்க முடியாத காரணத்தால்தானாயினும் குற்றம் குற்றந்தானே!] இந்த அகஸ்மாத்தான அபராதம் ஒரு தெய்வ நியதி இருக்கிறதென்பதை நினைவூட்டுவதாகத் தோன்றுகிறது!

கடிதங்களில் கணிசமானவை 'முகப் பருவுக்கு என்ன செய்யலாம்? முடி வளர வேணும். முடி உதிர்வது நிற்கவேணும்; என்ன செய்யலாம்? அகால நரை, இது போக என்ன செய்யவேணும்?' என்பது போன்றவை.

" பெண்களுக்குத்தான், முடி வளர வேண்டும். இள நரை போக வேணும். அம்மி பொளிந்தாற்போல் முகம் இருக்கக் கூடாதென்று ஆசை உண்டாகும்..." என்று பின்கட்டு 'ஸோ அண்டு ஸோ' தனது உயர்ந்த அபிப்பிராயத்தை வலிய வந்து உதவினர்.

"ஏன் ஆண்களுக்கு இந்த உரிமை கூடவா இல்லை?" என்றேன்.

உடனே ஹாலில் 'ஷ்.ஷ்.ஷ்..ஷ்' என்ற ஒரு புயல்......என் தனிமை எனக்கு நிலைத்தது.

அவரவருக்கும்-கேட்ட விஷயத்துக்குப் பதிலளிக்கப் பட்டது. ஆனால் கடிதத்துக்கு எழுதும் பதில், ஒரு அல்லது சில கட்டுரைகளாக வேணுமென்று நண்பர்கள் எதிர்பார்க்கின்றனர். இது சாத்தியமாகுமா? தற்காலம், அவரவருக்கு என்ன வேணுமோ, அம்மட்டும் தனித் தனி எழுதிவிடலாம்; விரும்பிய விஷயங்களைப் பற்றியோ...? ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் கட்டுரைகள் வரத்தான் போகின்றன. அவ்வப்போது பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். ஒருவர் கடிதத்திலுள்ளதை, பிறரும் அறிய வாய்ப்பு இருப்பது நல்லதல்லவா? என்று கேட்கலாம். அவ்வகைப்பட்ட விஷயமானல் கட்டாயம் நேயர்களுக்கு அறிவிப்பேன்.

உதாரணமாக, திருச்சிராப்பள்ளி சகோதரர் ஒருவர் கடிதம் 331-ல் எழுதுவதைப் பாருங்கள்.

" எனக்கு 'எமீபியாஸிஸ்'க்கு ... ... தொடர்ச்சியாக மூன்று மாதம் கருவக் காய்த் தூள் சாப்பிட்டு நல்ல பயன்..."

இதுவிஷயம் நேயர்களுக்குப் புதிய தல்ல. ஆனல் இத்திருச்சி அன்பர் வேறு ஒரு அரிய—புதிய விஷயத்தையும் தெரிவிக்கிறர்.

"...பிறகு தங்கள் 18-5-57 தேதி 119 என் கடிதப்படி பத்து நாட்கள் விட்டு விட்டுச் சாப்பிட்டு வருகிறேன்......"

ரொம்ப நல்லது. மேலும் என்ன...?

" 'டையாபிட்டீஸ்' எனக்கு உண்டு என்று 6-6-57 தேதி கடிதத்தில் எழுதியிருக்கிறேன்............கருவக்காய் மூன்று மாதங்கள் சாப்பிட்டதில் முழுதும் சர்க்கரை நின்றுவிட்டது. பிறகு [விட்டு விட்டுச் சாப்பிட ஆரம்பித்த பின்]மறுபடியும் சர்க்கரை காணப்படுகிறது. இதிலிருந்து கருவக்காய் "டையாபிட்டீஸ்"க்கு நல்லது என்று நினைக்கிறேன்........." என்று இப்படி எழுதுகிறர்.

திருச்சி அன்பருக்கு வைத்திய லோகத்தின் சார்பில் என் நன்றிகள். இந்த விஷயம் எனக்கே இதுவரையில் தெரியாதது. ஆகவே இனி இதை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்கிறேன்.

ஆராய்ச்சித் துறையில் பணியாற்றி வரும் அன்பர்கள் அனைவரும் இவ்விஷயத்தில் தமது கவனம், ஊக்கம், உழைப்பு ஆகியவற்றைச் செலுத்தி—செலவிட்டு ஒத்துழைத்து உதவிபுரியும்படியும் வேண்டிக் கொள்கிறேன்.

பெரிய பெரிய விஷயங்களெல்லாம்—ஆராய்ச்சியாளருக்கு அகஸ்மாத்தாகத்தான் கிடைத்துள்ளன. ஒருகால் இதுவும் அவ்விதமாகலாமே. (தொடரும்)

"கல்கி" நவம்பர் மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானலும் அனுப்பலாம். கதைகள் "கல்கி"யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டு பக்கத்துக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாத மூன்ருவது வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி"யில் பிரசுரமாகும். கதைகள் அந்தந்த மாதம் 20-ம் தேதிக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்துவிட வேண்டும்.


கதைகளைத் திரும்பப்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கதைகளுடன் போதிய தபால்தலைகள் வைத்து அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேம்.

தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும், குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

சிறு பிரச்னைகள் நாளடைவில் பெரியதாக வளருகின்றன...

இன்றையச் சின்னஞ் சிறுவனே நாளை சம்பாத்தியம் பண்ணுபவன். போட்டி அதிகரித்து வரும் உலகில், தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள உதவியாயிருக்கும் கல்வியை அவனுக்கு அளித்திருக்கிறீர்களா ? உங்கள் பெண்ணோ? அவளுடைய கல்வி, கலியாணம் மற்றும் இதரச் செலவுகளை ஏற்று நடத்துவதும் ஒரு பிரச்னைதான்!

உண்மையில், ஒவ்வொரு தகப்பனின் வாழ்நாளிலும், அதிகப்படியான பணப் பொறுப்புகள் அவனை சூழ்ந்துகொள்ளுகின்றன. அதை ஏற்று நடத்துவது எப்படி? சிறுகச் சிறுகச் சேமித்து வந்தால், குறிப்பிட்ட காலம் வரும்பொழுது, கொஞ்சமும் சிரமமின்றி, இந்த பண நெருக்கடிகளை சமாளிக்கலாம். நீங்களில்லாவிட்டாலும், உங்கள் பொறுப்புகள் எப்பொழுதும் போல் நன்கு வகிக்கப்படும் என்ற உணர்வில் உங்களுக்கு மனநிம்மதி ஏற்படும். பாலிஸிதாரர் இருந்தாலும், அல்லது இறந்தாலும், நிலையற்ற வருங்காலத்திற்கான பாதுகாப்பு—இதுவே ஆயுள் இன்ஷ்யூரன்ஸின் அடிப்படைத் தத்துவம்.



ஒவ்வொரு தகப்பனும் முக்கியமாகக் கவனித்து அறியவேண்டிய 3 இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகள் உள்ளன. எஜுகேஷனல் அன்யுட்டி பாலிஸி, மாரியேஜ் என்டௌமெண்ட் பாலிஸி மற்றும் சில்டிரன்ஸ் டெபர்ட் அஷ்யூரன்ஸ் பாலிஸி.

முதலிரண்டும் கல்வி, மற்றும் கலியாணத்திற்குத் தேவையான நிதியை வழங்க வாக்குறுதி அளிக்கின்றன. மூன்றாவதான சில்டிரன்ஸ் டெபர்ட் அஷ்யூரன்ஸ் பாலிஸி, ஒவ்வொரு தகப்பனும் தன் குழந்தைக்காக எடுக்கப்படுவதாகும். ஆனால், ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகே, மரணம் சம்பவிக்குமாயின், பாலிஸி தொகை வழங்கப்படும். இதன் அனுகூலமென்ன? மிகக் குறைந்த பிரீமியம் கட்டணத்தில், பெரியத் தொகைக்குக் குழந்தை பேரில் இன்ஷ்யூர் செய்யலாம். இத்துடன் மட்டுமின்றி, குழந்தைக்கு வயது வந்ததும், தன்னுடைய பாலிஸியை அமுலில் வைக்க, பணம் சேமிக்கும் பழக்கம் சிறு வயதிலேயே பிடிபடும். இது உங்கள் குழந்தைக்கு அளிக்கும் மதிப்புயர்ந்த அன்பளிப்பாகும்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ASP/LIC 21



தாழ்வும் உயர்வும்

கிருஷ்ணா

அம்புஜம்மாள், பத்மநாபனின் மேஜைமீது தாறுமாறாகக் கிடந்த புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைக்கலானாள்.

"இன்னும் குழந்தையாகவே இருக்கிறான். வயசுதான் ஆயிற்று. கல்லூரியில் ஆசிரியராக இருக்கிறான். கை நிறையச் சம்பாதிக்கிறான் என்று சொல்லிக்கொள்ளப் பெருமையாகத்தான் இருக்கிறது. ஆனால் தன் சொந்தச் சாமான்களைக் கூட ஒழுங்காக வைத்துக் கொள்ளத் தெரியவில்லை..!" என்று தனக்குள் சற்றுப் பெருமையாகவே நினைத்து மகிழ்ந்தாள் அம்புஜம்மாள்.

தடித்த அளவில் பௌதிக நூல் ஒன்றை எடுத்து அவள் அருகிலிருந்த புத்தக அலமாரியில் வைக்கும்போது அது கைதவறிக் கீழே விழுந்துவிட்டது. விழுந்த வேகத்தில் அதனுள் இருந்து ஒரு புகைப் படம் வெளியே நழுவியது. அம்புஜம்மாள் அதை எடுத்துப் பார்த்தாள். அதைப் பார்த்ததும் அவள் உள்ளத்தில் பரபரப்பும் வியப்பும் ஏற்பட்டன. மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் குமிழியிட, அந்தப் புகைப்படத்தை அப்படியே முன்போல் இருந்த இடத்தில் வைத்துவிட்டு, பாக்கியுள்ள புத்தகங்களையும் ஒழுங்காக அடுக்கலானாள். புகைப்பட விஷயம் அவள் இதயத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது.



★

இரவு எட்டு மணிக்கு வந்தான் பத்மநாபன். மகனைக் கண்டதும் அம்புஜம்மாள் எழுந்து தட்டை எடுத்து வைத்து, வெள்ளி டம்ளரில் தீர்த்தத்தையும் எடுத்து வைத்தாள். அதற்குள் பத்மநாபனும், மாற்றுடை தரித்து, கை கால்களைக் கழுவிக் கொண்டு வந்து, சாப்பிட உட்கார்ந்தான்.

மௌனமாகவே பரிமாறினாள் அம்புஜம்மாள். அவனும் மௌனமாகவே சாப்பிட்டான். அவன் பசி அடங்கி, நிதானமாக மோர் சாதம் சாப்பிட ஆரம்பிக்கும்பொழுது, அம்புஜம்மாளும் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

"பத்து!" என்று கூப்பிட்ட தாயாரை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தான் பத்மநாபன்.

"இன்று மாலையில் ராமசுவாமி வந்துவிட்டுப் போனார். உன் ஜாதகம் ஒன்று வேண்டுமாம்...."

"எதற்கு?" என்று கேட்டான் வியப்புடன்.

'' ஜாதகம் எதற்குக் கேட்பார்கள்? கல்யாணத்துக்குத்தான்....''

'' நீ கொடுத்து விட்டாயா, அம்மா?'' என்று படபடப்புடன் கேட்டான் பத்மநாபன். கையில் எடுத்த சாதம் அப்படியே இருந்தது.

'' உன்னைக் கேட்டுக் கொண்டு கொடுப்பதாகப் பதில் சொல்லி அனுப்பியிருக்கிறேன். நீதான் என்னமோ கல்யாணமே வேண்டாம் என்கிறாயே, பீஷ்மப் பிரதிக்ஞை மாதிரி...''

பத்மநாபன் மெல்ல நகைத்தான். அவன் நகைத்ததைக் கண்டதும் அம்புஜம்மாளுக்குச் சற்று ஆத்திரம் ஏற்பட்டது.

''இப்படிச் சிரித்துக்கொண்டே இருந்தாயானால் என்ன அர்த்தம்! பத்மநாபா, எனக்கும் வயதாகிக் கொண்டே போகிறது... நீ கல்யாணம் வேண்டாம், வேண்டாம் என்று சொல்லி மூடி மறைக்க வேண்டாம். உனக்குப் பிடித்தமான பெண்ணைத் தேர்ந்தெடுத்திருந்தாயானால் சொல்லு. அதையே முடித்து வைக்கிறேன். எதையாவது மனத்தில் நினைத்துக் கொண்டு வீணாகக் காலம் தாழ்த்தாதே...... !''

அம்புஜம்மாள் சொன்ன மாதிரியிலிருந்தே, அவள் தன் அந்தரங்கத்தைப் புரிந்துகொண்டு விட்டாள் என்பது பத்மநாபனுக்குத் தெரிந்து விட்டது. '' எப்படிப் புரிந்து கொண்டிருப்பாள்! ஒரு வேளை அந்தப் புகைப்படத்தைப் பார்த்திருப்பாளோ?......''

'' நீ எதைச் சொல்லுகிறாய், அம்மா?'' என்று கேட்டான்.

தனக்கு எதுவும் தெரியாது என்ற பாவனையை முகத்தில் வரவழைத்துக் கொள்ள முயன்றான். ஆனால் தோல்வி அடைந்தான்.

அவன் முக பாவத்தைப் பார்த்ததும் அம்புஜம்மாளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''அப்பனே! அர்ஜுன சன்னியாசி! எனக்கு எல்லாம் தெரியும். அந்த வசந்தாவின் தாய் தகப்பனார் யார் என்று சொல். நானே விசாரித்து முடித்து வைக்கிறேன். எனக்குச் சீக்கிரமே ஒரு மருமகள் வரவேண்டும். அவ்வளவுதான்......'' என்றாள் உரிமையுடன் மகனைக் கேலி செய்தபடியே.

பத்மநாபன், தலை குனிந்தபடி தனக்குள் சிரித்துக் கொண்டான் மகிழ்ச்சியோடு. எவ்வளவு சுலபமாகத் தீர்ந்து விட்டது?......

அம்புஜம்மாள்மேலும் அவன் வாயைக் கிண்டி விவரங்களைப் புரிந்து கொண்டாள்.

கல்லூரியில் பௌதிக சாஸ்திரம் போதிக்கும் ஆசிரியனாகப் பணியாற்றி வந்தான் பத்மநாபன். வஸந்தா அந்தக் கல்லூரியில் புதிதாக வந்து சேர்ந்த ஆசிரியை.

நீண்ட விழிகளும், கூர்ந்த நாசியும், செம்பவளத் துண்டுகள் போல் ஒன்றின்மீது ஒன்றாகப் பொருந்தி நிற்கும் அதரங்களும், அவைகள் சற்று விலகினால், பளீரென்று ஒளி வீசும் முத்துப் பற்களும், யானைத் தந்தம் போல உருண்டு திரண்ட கை கால்களும், அழகிய பூரிப்பான மேனியும், இவ்வளவு அழகுக்கும் ஏற்ற அறிவுடையவளாகவும் திகழும் வசந்தா, தன் வாழ்நாள் முழுவதும் கூடவே துணையாக நிற்க மாட்டாளா என்ற ஒரு எண்ணம் அவனை இன்பம் அடையச் செய்தது. அவளது நடையுடை பாவனைகள், பேச்சு, பாடங்களை மிக எளிதாகப் போதிக்கும் ஆற்றல், அவளுடைய குணம் ஆக எல்லாமே அவனுக்குப் பிடித்து விட்டன.

தன்னையறியாமலேயே தன்னிடம் உதித்துக் கிளைவிட்டு வரும் காதல் உணர்வை அவன் சிறைப்படுத்தியே வைத்திருந்தான்.

சென்ற ஆண்டு கல்லூரி வருடாந்திர விழாவின்போது ஆசிரியர்கள் எல்லோரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன்றிலிருந்து வஸந்தாவின் உருவை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்து, தானே, மறு பிரதியெடுத்துப் பெரிய புகைப்படமாகச் செய்து, அதன் அடியில் 'அன்பு வசந்தா' என்று எழுதி, அதை வெகு பத்திரமாக வைத்திருந்தான். வேண்டும் பொழுதெல்லாம் தன் கனவுக் கன்னியை அதில் பார்த்து மகிழ்வான்.

அந்த ரகசியம் எப்படியோ வெளியாகி விட்டதே! இன்னும் மறைத்து வைப்பதற்கு என்ன இருக்கிறது......?

'' பெண்ணின் தகப்பனார் பெயர் சுப்பராமன். போஸ்டல் சூப்பரின்டென்டாக உத்தியோகம் பார்க்கிறார்'' என்று பத்மநாபன் சொன்னவுடனேயே அம்புஜம்மாள் ஏதோ நினைவுக்கு வந்தவளாய், '' தாயார் பெயர் என்ன?'' என்றுகேட்டான்.





ஜோஸ்யர்: உங்க ஜாதகத்தில் சந்திரன் பார்ப்பது அவ்வளவு கெடுதல் இல்லே, ஆனால் அந்தச் சந்திரனையே ரஷ்யா பார்த்துக் கொண்டிருப்பது சந்திரனுக்கே ஆபத்து வரும் போலே இருக்கே, சார்!

"காமாட்சி அம்மாள் போலத் தெரிகிறது. ஏனென்றால் காமாட்சி சுப்பராமன் என்று விலாசமிட்ட கவர் ஒன்று வசந்தாவின் டைரி ஒன்றில் இருந்தது. அதிலிருந்து அவர்கள் விலாசத்தைத் தெரிந்து கொண்டேன்" என்று சொல்லிவிட்டுப் பத்மநாபன் இலையை விட்டு எழுந்துவிட்டான்.

★

அன்று இரவு அம்புஜம்மாளுக்குத் தூக்கமே வரவில்லை. அவளது நினைவு, 'காமாட்சி' என்ற பெயரைக் கேட்டதும் பல வருஷங்கள் பின்னோக்கி ஓடியது.

ஸ்ரீரங்கம் மேற்கு அடையவளைந்தான் வீதியில் ஒரு பெரிய வீடு. அதில் ஒரு போர்ஷனில் தான் வெகு காலமாகக் குடியிருந்து வந்தாள் அம்புஜம். அந்த வீடு வேறு யாருடையதுமல்ல; காமாட்சியினுடையதுதான்.

காமாட்சிக்கும் அம்புஜத்துக்கும் சம வயதுதான். ஆனால் சம அந்தஸ்துதான் இல்லை. காமாட்சியின் பரம்பரையே பெரிய பரம்பரை. அவளைச் சேர்ந்த உறவினர்கள் எல்லோருமே பிரபல உத்தியோகஸ்தர்கள்; பெருந்தோரணையான குடும்பம். செல்வம் அங்கே கொழித்து விளையாடியது.

அம்புஜம் சர்வ சாதாரணமானவள். அவள் கணவனுக்கு ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் மாதம் அறுபது ரூபாய் சம்பளம். கடன், நோய், அரைப்பட்டினி, சண்டை சச்சரவுகள் எல்லாம் அவள் குடும்பத்தின் உரிமையான சொத்துக்கள். அம்புஜம் காமாட்சியுடன் கலகலப்பாகப் பழகுவதில்லை. ஒருவித கூச்சத்துடனும் பயத்துடனுமே பழகி வந்தாள். காமாட்சியும் அம்புஜத்தோடு சரியாகப் பேசுவது கிடையாது. மனத்துக்குள் என்ன நினைத்திருந்தார்களோ இருவரும்! அது அவர்கள் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளாத விஷயம். இந்த நிலையில்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

குழந்தை பத்மநாபனுக்கு அப்பொழுது மூன்று வயது இருக்கும். அவன் பிறந்த வேளை கண்டிப்பாக மிகமிகப் பொல்லாத வேளையாகத்தான் இருக்க வேண்டும். அவன் பிறந்ததிலிருந்தே சோதனை ஆரம்பமாகி விட்டது. அதுவும் அந்த ஒரு நாள்......

அதை இப்பொழுது நினைத்தால்கூட அம்புஜ அம்மாளுக்குக் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து வந்து விடும்.

அம்புஜத்தின் கணவர் ஒன்றரை மாதமாகப் படுத்த படுக்கையாகக்கிடந்தார்; அதேபோல் குழந்தை பத்மநாபனும் படுக்கையில் இருந்தான். அவனுக்கு இரண்டு மாதமாகத் தொடர்ந்து வயிற்றுப்போக்கு. எந்த ஆஸ்பத்திரி மருந்துக்கும் பிடிபடாமல் அந்த வியாதி குழந்தையை உருக்குலைத்துவிட்டது. அம்புஜம், குழந்தையைக் கவனிப்பதைவிடக் கணவனைக் கவனிப்பதிலேயே அதிகம் அக்கறை காட்டினாள். ஆகவே குழந்தையின் நிலை மிகவும் மோசமாகி விட்டது.


குழந்தை பத்மநாபன், போட்டது போட்டபடி விழித்த தாராகப் படுத்துக் கிடந்தான். உடம்பில் போதுமான சூடே இல்லை. மூச்சுமட்டும் லேசாக இழையோடிக் கொண்டிருந்தது. வழக்கமாகப் பார்த்துவந்த வைத்தியன், தன் அபிப்பிராயத்தை வெட்ட வெளிச்சமாகச் சொல்லி விட்டான், இனி குழந்தை பிழைக்காது என்று.

அவன் அதைச் சொன்னவுடன், அந்தப் பயங்கரம் பெரிதாகி விட்டதாகத் தோன்றியது அம்புஜத்துக்கு. குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு ஒரு பிரபல ஆங்கில டாக்டரிடம் சென்றாள்.

அவர் குழந்தையின் நிலையை நன்கு பரிசோதித்தார். அவரது முகம் தெம்பைக் காண்பிக்கவில்லை. இவ்வளவு தூரம் நோய் முற்றுவது வரையிலும் குழந்தையைக் கவனிக்காமல் வைத்திருந்ததற்காக, அம்புஜத்தை ஒரு மூச்சு சண்டை பிடித்துவிட்டு, பதினைந்து ரூபாய்க்கு ஒரு ஊசிமருந்தும், ஆறு ரூபாய்க்கு வேறு ஒரு மருந்தும், எழுதிக் கொடுத்து, "முதலில் இவைகளை வாங்கி வாருங்கள். முயற்சி செய்து பார்ப்போம். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் குழந்தை பிழைத்துக் கொள்வான்" என்று கடைசியில் அவன் அதிர்ஷ்டத்தின்மீது பழியைப் போட்டு விட்டார். அவள் அதிர்ஷ்டம்தான் தெரிந்து கிடக்கிறதே!

இருபத்தொரு ரூபாய்களுக்கு அவள் எங்கே போவாள்? கோரப்புயல் வீசியபின், ஊர் எப்படிக் காட்சியளிக்குமோ, அப்படி இருந்தது வீடு. எதையாவது விற்றுத் தொலைப்போம் என்றாலும் அங்கே, பெறுமானமுள்ள பண்டம் ஒன்றுகூடக் கிடையாது. வறுமைப் புயல் எல்லாவற்றையும் வாரியடித்துக் கொண்டு போய் விட்டது.

அன்று மணி ஒன்பதுக்குள், ஊசி போட்டாக வேண்டும். தாய்ப்பாசம் அவளை உந்தித் தள்ளியது. நோயுற்றிருந்த கணவன் அருகிலேயே குழந்தையையும், கிடத்தி விட்டுத்




தொன்றுதொட்டே
புகழ் பெற்றது
புராதன காலத்திலிருந்தே கிருமிகளை அடியோடு கொன்று வதுஆட்டுவதற்கு மிகச் சிறந்தது நீம் (வேம்பு) என இந்தியாவெங்கும் ஒப்புக்கொள்ளப் பட்டது.
வேம்பின் இயல்பான இக் குணங்கள் நீம் டூத் பேஸ்டில் அபரிமிதமாக இருப்பதே அதன் சிறப்புக்கு முக்கிய காரணம். பற்கள், ஈறுகள் நன்கு பாதுகாக்கப்பட, இன்றைய பல் வைத்தியத்தில் கையாளப்படும் பொருள்கள் யாவும் இதிலிருக்கின்றன.
நீம் டூத் பேஸ்டுடன் வேறு எந்த பற் பசையையும் ஒப்பிட முடியாது.
நீம் டூத் பேஸ்ட்
கல்கத்தா கெமிகல் கோ., லிட்., கல்கத்தா-29. தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1



உபத்திரவிக்கும் இருமலை
'ZEPHROL' Brand
Trade Mark
'ஸைப்ரால்' காப் ஸிரப்பால்
போக்குங்கள்
M&B
Manufactured by: MAY & BAKER LTD
Distributed by: MAY & BAKER (INDIA) PRIVATE LTD
Bombay • Calcutta • Gauhati • Madras • New Delhi
D. 62

சக்தி மற்றும் திறம்பட்ட வேலை
அளிப்பதற்கென்றே அமைக்கப்பெற்றது



மோட்டார் சைக்கிள் டிசைன் செய்பவர்கள், ஒரு தேர்ச்சி பெற்ற மோட்டார் சைக்கிள் ஓட்டிக்கு, எவ்வாறு சக்தி மற்றும் வேகம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதை அறிவார்களோ, அதேபோல் கால்டெக்ஸ் தயாரிப்புகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால்டெக்ஸ் தயாரிப்பின் சிறந்த கலவை முறை மற்றும் தொழில் நுட்ப அனுபவம் இவைகளே இது அளிக்கும் அதிகப்படியான சக்தி வேகம், நம்பகத்தன்மை, சுகமான ஓட்டம் மற்றும் சிக்கனம் இவைகளுக்கு உத்திரவாதம்.

உங்கள் காருக்குக்
கால்டெக்ஸ் 1 2 3 வழங்கி


1 சக்தி மற்றும் வேகத்திற்கு
கால்டெக்ஸ் ஐஸி-ப்ளஸ் பெட்ரோல்




2 சிக்கனத்திற்கும், நம்பகத்தன்மைக்கும்
கால்டெக்ஸ் ஆர்பீஎம்
மோட்டார் ஆயில்



3 சுகமான சவாரிக்கு
கால்டெக்ஸ் மார்பக்
சாஸிஸ் லூப்ரிகேஷன்





உங்கள் நண்பரான கால்டெக்ஸ் வியாபாரியிடம்
ஓட்டிச் செல்லுங்கள்

L-4 (B)

தெரிந்த இடங்களுக்குப் பணம் கேட்கலாம் என்று தோன்றிய இரண்டொரு உறவினர் வீட்டுக்குச் சென்றாள், பதைபதைப்புடன். பெற்ற வயிற்றுக்கல்லவா தெரியும் அந்தப் பதைபதைப்பு.

பெரிய பெண்ணையும் சிறிய பெண்ணையும் வேறு சில இடங்களுக்கு அனுப்பினாள். எல்லா இடங்களிலும் பலன் பூஜ்யம். குழந்தைகளும் கையை விரித்துக் கொண்டுவந்து சேர்ந்தனர்.

சோகத்தின் எல்லையில் ஒருவிதமான வெறுப்பும் நம்பிக்கையின்மையும் உண்டாகுமல்லவா? அந்த நிலையை அடைந்து விட்டாள் அம்புஜம். குழந்தையை முருகன் படத்தின் எதிரில் கிடத்திவிட்டுப் பேசாமல் கீழே உட்கார்ந்து விட்டாள். கண்ணீர்கூட வரவில்லை அவளுக்கு. நெஞ்சம் உறைந்து விட்டது. அவளைச் சுற்றிலும் அவளுடைய மற்றக் குழந்தைகள், 'என்ன நடக்குமோ?' என்று நெஞ்சம் 'படக், படக்' என்று அடித்துக் கொள்ள உட்கார்ந்திருந்தனர்.

எதிர்ச் சாரியில் உள்ள பள்ளிக்கூடத்தின் கடிகாரம் ஒன்பது முறை அடித்து ஓய்ந்தது.

அதே சமயம் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதே டாக்டர் அதனின்றும், கையில் மருந்துகளுடனும் நாடிக் குழாயுடனும் இறங்கி வந்தார். மௌனமாகக் குழந்தைக்கு ஊசி போட்டார். மருந்தும் கொடுத்தார்.

அடுத்தபடி மருந்து கொடுக்க வேண்டிய முறையையும், ஆகார நியதிகளையும் சொல்லி விட்டு, மறுபடியும் காலையில் வந்து பார்ப்பதாகவும் கூறிவிட்டுப் போய் விட்டார்.

முருகனே நேரில் வந்து அருள் செய்தது போல ஆகிவிட்டது. தொடர்ந்து சில தினங்கள் டாக்டர் வந்து சிகிச்சை செய்தார். நல்ல வேளை! குழந்தையும் பிழைத்துக் கொண்டான்.

இவ்வளவும் எப்படி நடந்தது என்றே அம்புஜத்துக்கு முதலில் தெரியாது. கடைசியில் தெரிந்தது, காமாட்சிதான் இவ்வளவுக்கும் ஏற்பாடு செய்தாள் என்பது.

மரண பயத்திலிருந்து, தான் பெற்ற செல்வத்தைக் காப்பாற்றியவள் என்ற நன்றி ஒரு புறம் பொங்கியது. காமாட்சியிடம் மனப்பூர்வமாகத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்அம்புஜம். ஆனாலும் 'ஒரு பணக்காரியிடம் கடன்பட்டு விட்டோமே, நமக்காக அவள் அறுபது எழுபது ரூபாய் வரையிலும் செலவு செய்து விட்டாளே!' என்று ஒரு வெட்கம்; வருத்தம், எல்லாம் ஏற்பட்டன அம்புஜத்துக்கு. அந்த எண்ணத்தை உள்ளுக்குள்ளேயே வைத்திருந்தாள். என்ன பாடுபட்டாவது அந்தரூபாய்களைத் திருப்பிக்கொடுத்து விட வேண்டும் என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் வளர்ந்துகொண்டே போயிற்று.

காமாட்சி-அம்புஜம் சிநேகிதம் வலுத்ததே தவிர ரூபாய்களைத் திருப்பித் தர அம்புஜத்தால் முடியவேயில்லை. சந்தர்ப்பம் வாய்க்கவேயில்லை......காலம் ஓடிவிட்டது. இப்பொழுது அவள்மகன் காமுவின் மகளைக் காதலிக்கிறான்.

★

மறுதினம் மாலை அம்புஜம்மாள் தன் மகன் குறித்த விலாசத்துக்குச் சென்றாள். கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும்போதே அவள் உடலில் ஒருவித கூச்சம் பரவியது. போதாக் குறைக்கு நாய் ஒன்று அவளைக் கண்டதும் 'ளொள்' 'ளொள்' என்று பாட ஆரம்பித்தது. நல்லவேளை! கட்டிப் போட்டிருந்தனர். நாய் குரைப்பதைக் கேட்டு எழுந்து வாசற்புறம் வந்தாள் காமாட்சி.

திண்ணையில் நின்ற அம்புஜத்தைக் கண்டதும் முதலில் அவளுக்கு அடையாளமே புரியவில்லை. பார்த்து ஒன்று இரண்டா! எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டன. அதற்கிடையில் எத்தனையோ மாறுதல்கள்.

''நீங்கள்... நீங்கள்...'' வார்த்தை ஒன்றும் கூறவராமல் விழித்தாள் காமாட்சி.

''என்ன காமு! அப்படிப் பார்க்கிறாய்? என்னைத் தெரியவில்லையா! நான்தான் அம்புஜம்......!''

''ஓ! அம்புஜம் மாமியா? வாருங்கள்! வாருங்கள்! என்ன இது! அடையாளமே தெரியாமல் மாறி விட்டீர்களே! எப்பொழுது இந்தக் கஷ்டம்?...'' என்று பாசமும் பரிவும் தோன்றக் கேட்டாள்.

அம்புஜத்தின் உடல் ஒருமுறை கூசிக் குறுகியது. தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''அது ஆச்சு, பத்து வருஷங்கள் ஆகப் போகின்றன, என் கணவர் போய்'' என்றாள்.

இதைக் கேட்டதும் காமாட்சி வருந்தினாள்.

காமாட்சி அம்புஜம்மாளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே போனாள். காப்பி, உபசாரம் எல்லாம் பலமாக இருந்தன. கடைசியில் வந்த விஷயத்தைப் பற்றியும் பேச்சுக்கள் நடந்தன.

அம்புஜத்துக்கு ஒரே சந்தோஷம்.

''நீ இதற்குச் சம்மதிப்பாய் என்று நான் நினைக்கவே இல்லை...'' என்றாள் அம்புஜம்.


'' ஏன் அப்படி நினைத்தீர்கள் ?''

'' என்ன இருந்தாலும் உன்னோடு சம்பந்தம் செய்துகொள்ள எனக்கு என்ன யோக்யதை இருக்கிறது? சொல்...காமு? ஊர்க் குருவி, எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் அது கருடனாகி விட முடியுமா?''

''இந்த எண்ணம் உங்களுக்கு இன்னுமா போகவில்லை?......இது இருந்ததினால்தானே அன்று பத்மநாபன் அப்படி ஆச்சு, போச்சு என்று கிடந்த நிலையிலும் என்னை ஒரு வார்த்தை கேட்காமல் 'கம்' என்று சும்மா இருந்து விட்டீர்கள்? இந்த மனப்பான்மை உங்களை விட்டுப் போயிருக்கும் என்றல்லவா நினைத்தேன்......'' என்றாள் காமாட்சி.

'' எப்படியம்மா கேட்பது? அதுவும் அந்தக் காலத்தில் நான் இருந்த இருப்பில் உன்னோடு பேச எனக்கு வாயேது? நீயோ அந்தக் காலத்தில் என்னோடு அதிகம் வார்த்தையாடியது கூட இல்லை.''

'' போதுமே, மாமி! அந்தஸ்தாவது, இன்னொன்றாவது? எதற்கும் சமய சந்தர்ப்பம் இல்லையா?...பார்க்கப் போனால் எங்களைவிட நீங்கள் எவ்வளவோ உயர்ந்தவர்கள். வாழ்க்கையில் கஷ்டத்தோடு பல அனுபவங்களையும் பெற்றவர்கள். உழைத்து முன்னுக்கு வந்தவர்கள்...உங்களுக்கு என்ன மாமி குறைவு? ஏதோ அவர்தான் போய்விட்டார்...பட்ட கஷ்டங்களும் பட்டாயிற்று. இனியும் என்ன?



பெண்களையும் நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்தாயிற்று. என் மருமகன் பத்மநாபனும் ஆசிரியராகி விட்டான்!...''

''அதிருக்கட்டும் காமு, இன்று என் தாழ்வு மனப்பான்மையைப் பற்றி இவ்வளவு தூரம் பேசுகிறாயே, நீ மட்டும் அந்தக் காலத்தில் என்னோடு கலகலப்பாகப் பேசியதே இல்லையே! அதை நான்......''

காமு இடைமறித்தாள்.

'' அதற்குக் காரணம் இருக்கிறது, மாமி! உங்கள் தன்மானம்தான் அதற்குக் காரணம். பார்க்கப்போனால் நான் கர்வப்பட வில்லை. நீங்கள்தான் கர்வத்துடன் இருந்தீர்கள். 'இவர்கள் பணக்காரர்கள். இவர்கள் தயவை நாம் நாடக்கூடாது' என்ற எண்ணம் உங்கள் மனத்தில் வேரூன்றி இருந்தது. அது உங்களுடைய ஒவ்வொரு செய்கையிலும் வெளியாகியது. அதை நான் கெடுக்கவிரும்பவில்லை. குழந்தைகள் சாப்பிடாமல் பள்ளிக்கூடம் போகும்போதெல்லாம் எனக்கு வேதனை பிடுங்கித் தின்னும். 'கூப்பிட்டு வைத்துச் சாதம் போடலாமா?' என்று எவ்வளவோ தரம் நினைத்திருக்கிறேன். வலுவில் நான் ஏதாவது செய்தால் அதை நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாமலிருக்க வேண்டுமே என்று எனக்கு பயம். உண்மையில் நான் உங்கள் தன்மானத்துக்குப் பயந்து கொண்டுதான் வாயை மூடியிருந்தேன். அன்று பத்மநாபன் இருந்த நிலையும், நீங்கள் உள்ளூறப்பட்ட கஷ்டமும் என்னால் பொறுக்க முடியவில்லை. அந்த நிலையிலும் நீங்கள் என்னை ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. நான் பணக்காரி, கர்வம் மிகுந்தவள் என்ற நினைப்பினால்தானே என்னை ஒதுக்கி வைத்தீர்கள்? கடைசியில் அதையும் நான் மீறிவிட்டேன். எது நடந்தாலும் நடக்கட்டும் என்று துணிந்து டாக்டரை வரவழைத்து விட்டேன்......''

அம்புஜம் தழுதழுத்தபடி கூறினாள்.

''நீ சொல்வது உண்மைதான், காமு! என் தாழ்வு மனப்பான்மைதான் என்னைத் தவறாக எண்ண வைத்து விட்டது. அது தன்மானமல்ல, காமு! 'நாம் ஏழை' என்ற உணர்வின் அடிப்படையில் எழுந்த ஒரு அசட்டுக் கௌரவம். உனக்கு அந்த ரூபாய்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று தலைகீழாக நின்று பார்த்தேன்....''

''வேண்டாம், மாமி! நேராகவே நிமிர்ந்து நில்லுங்கள். பத்மநாபனை என் மருமகனாக அன்றே நான் நிர்ணயம் செய்து கொண்டதற்கு அன்புக் கட்டணம் அது. இனி மற்ற வரிசைகள் எல்லாம் கல்யாணத்தின் பொழுது முறையாக வரும்'' என்றுகூறிக் கலகலவென நகைத்தாள் காமு.

அம்புஜம் நினைத்தாள் :

'தேங்காய் ஓடு எவ்வளவு கடினம்? அதை உடைப்பது வரையிலும் உள்ளிருக்கும் வெண்மையும் சுவையும் தெரிவதில்லை.—அதே போலத்தான் இதுவும்—உண்மை தெரிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது—இப்பொழுது அவளுக்குப் புரிந்து விட்டது. காமுவின் உள்ளத்தின் இனிப்பு.

அவள் மனக் கண் முன்பு வசந்தாவும் பத்மநாபனும் மாலையும் கழுத்துமாக நின்று முறுவலித்தனர்.

மாதர்குலதிலகங்கள்

திருமதி சீதாலக்ஷ்மி அம்மாள்



சேலம் திருச்செங்கோடு தாலூகாவில் கொழிக்கால்நத்தம் என்னும் கிராமத்தில் இரண்டு அனாதைப் பெண்களைக் கொண்டு கமலா சேவா நிலயம் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு ஓலைக் குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலயத்தில் இன்று முப்பத்தேழு திக்கற்ற பெண்கள் இருக்கிறார்கள். கணவனை இழந்தவர்கள், அங்கஹீனமானவர்கள், ஏழைமையில் உழலுபவர்கள், அனாதைகள் இவர்களுக்குக் கமலா சேவா நிலயத்தில் சாப்பாடு போட்டு, உடைகள் கொடுத்து வருவதுடன், கல்வியும் கற்றுக் கொடுக்கிறார்கள். கல்வியில் தேறிய பெண்களுக்கு உபாத்தியாயர் வேலை, மருத்துவ வேலை, கிராம சேவா பயிற்சி இவைகளில் ஏதாவது ஒன்றில் பயிற்சி கொடுத்து அவர்கள் எதிர்காலத்தை நம்பிக்கை உள்ளதாக மாற்றி வருகிறார்கள். சாதி மத வேறுபாடு இன்றி மனித குலம் எல்லாமே ஒன்றுதான் என்ற உயர்ந்த லட்சியத்தைக் கடைப்பிடித்து வரும் இந்தக் கமலா சேவா நிலயத்தின் தலைவிதான் திருமதி சீதாலக்ஷ்மி அவர்கள்.

* * *

நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்னால் கோயமுத்தூருக்கு அருகில் உள்ள நெகமம் புதூர் என்னும் கிராமத்தில் உத்தமமான நெசவாளர் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்தவுடன் அதன் முகத்தைப் பார்த்துத் தாய் சௌண்டம்மாள் பூரித்துப் போனார். இந்தச் சமயத்தில் குழந்தையின் தந்தை ஊரில் இல்லைய என்று அந்தத் தாயுள்ளம் ஏங்கத்தான் செய்தது. தந்தை திரு எம். என். சிக்கண்ண செட்டியார் பொருள் தேடும் பொருட்டுக் கோயமுத்தூருக்குப் போய் விட்டார். ஒரு துறவி அங்கு வந்து அந்த ஏழை நெசவாளக் குடும்பத்துக்கு உதவி புரிந்தார். குழந்தைக்கு 'ராமக்காள்' என்று திருநாமம் சூட்டி வாழ்த்தினார்.

குழந்தை ராமக்காள்தான் பள்ளிக்கூடத்தில் சீதாலக்ஷ்மியானார்.

சீதாலக்ஷ்மி பிறந்தபோது மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தது குடும்பம். சீதாலக்ஷ்மி வளரவளர அவள் குடும்பத்தின் செல்வ நிலையும் வளர ஆரம்பித்தது. திரு எம். என். சிக்கண்ண செட்டியார் இப்பொழுது சாதாரண ஏழை நெசவாளி இல்லை. மிகப் பெரிய நெசவாலை முதலாளியாகி விட்டார். தம்முடைய தொழிலில் பெற்ற லாபத்தில் ஒரு பெரும் பகுதியைத் தர்ம காரியத்துக்காக ஒதுக்கி வைத்தார்.

சீதாலக்ஷ்மி பதினைந்து வயது நிரம்பிய மங்கையானாள். செல்வம் கொழிக்கும் அவள் தந்தை தம்முடைய மகளைத் திரு எஸ். வி. ராமசாமி பார்-அட்-லா அவர்களுக்கு மணம் முடித்து வைத்தார்.


இல்வாழ்க்கையில் ஈடுபட்ட திருமதி சீதாலக்ஷ்மி அவர்களுக்கு நல்ல ஓய்வு இருந்தது. குடும்பத்தைக் கவனித்துக் கொள்வதற்குப் பலர் இருந்ததால் குடும்பக் கவலை அவருக்கு ஏற்படவில்லை. ஆனாலும் அவருக்குச் சும்மா இருக்க இஷ்டமில்லை. சேலம் ராமகிருஷ்ண மடத்துக்குச் சென்று அதன் மூலம் மக்களுக்குத் தொண்டாற்றுவதற்காக, தம் தந்தையார் தர்மத்துக்கு ஒதுக்கி வைத்த பணத்தைச் செலவழிக்கத் தீர்மானம் செய்து அதைக் காரியத்திலும் நிறைவேற்றினார்.

ராமகிருஷ்ண மடத்தின் தொடர்பில் அவருடைய மனம் மேலும் பக்குவமடைந்தது. மக்களுக்கு ஆற்றும் தொண்டுதான், தெய்வ வழிபாடு என்ற உண்மையைக் கண்டார்.

இந்திய மாதர் சங்கத்தின் உப தலைவியாகவும், காரியதரிசியாகவும் இருந்து மாதர் சங்கத்தின் வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் தொண்டாற்றி யிருக்கிறார். இப்பொழுது மாதர் க்ஷேமநலத் திட்டத்தின் தலைவியாக இருக்கிறார். அதைச் சேர்ந்ததுதான் கமலா சேவா நிலயம். சென்ற ஆண்டு ஸ்ரீ சாரதா வித்யாலயம் என்ற ஒரு ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் உயர் நிலைப் பள்ளியுடன் இந்த ஸ்தாபனத்தைச் சுவாமி சித்பவானந்தா அவர்கள் ஆரம்பித்தார். இந்த ஸ்தாபனத்தின் காரியதரிசியாகவும் இருந்து வருகிறார். "பெண் குலத்தின் வெற்றி" என்று மகாகவி பாரதியார் பாடினாரே, அவருடைய வாக்குக்குப் பிரத்தியட்சப் பிரமாணமாக இன்று திருமதி சீதாலக்ஷ்மி அவர்கள் விளங்கி வருகிறார்கள்.



அக்டோபர் பதினோராம் தேதி தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரி மாணவர் பேரவையில் ராஜாஜி இந்திப் பிரச்னை பற்றிப் பேசினார். இந்தப் பேரவைக்குத் திரு மக்பெயில் தலைமை தாங்கி ராஜாஜி அவர்களை வரவேற்றார். மாணவர் மன்றக் காரியதரிசி திரு ஞானேந்திரன் நன்றி கூறினார். "இந்தியாவில் ஐந்தில் இரண்டு பங்கு மக்களின் மொழி இந்திதான். அதற்காக மற்ற மொழிக்காரர்கள்மீது இந்தியைத் திணிப்பது அவர்களுக்கு அநீதி இழைப்பதாகும். இவ்வாறு நான் கூறுவதால் இந்தியைப் படிக்கக்கூடாது என்று அர்த்தமில்லை. வர்த்தகக் காரியங்களுக்காக இந்தியை அவசியம் கற்க வேண்டும். கணக்கு, சரித்திரம் போல இந்தியும் கட்டாய பாடமாக இருக்க வேண்டும். ஆனால் இந்தியை ராஜாங்க மொழியாக்கக் கூடாது. எல்லா ராஜ்யங்களிலும் அந்தந்த ராஜ்யத்து மொழி தான் போதனா மொழியாக இருக்க வேண்டும். ஆங்கிலமே ராஜாங்க மொழியாக இருக்க வேண்டும்" என்ற கருத்துக்களை அந்தக் கூட்டத்தில் ராஜாஜி விளக்கிக் கூறினார்.



பதினாறாந்தேதி புதன்கிழமை மாலை சென்னை ராஜாஜி மண்டபத்தில் நம்கவர்னராக இருந்த திரு ஏ. ஜே. ஜான் மறைவுக்கு ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. சென்னை ஷெரீப் திருமதி னைப் வாலா அவர்கள் இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார். கூட்டத்துக்கு, இடைக்கால கவர்னர் திரு பி. வி. ராஜமன்னார் தலைமை வகித்தார். "நோய்களைக் குணப்படுத்துவதில் சென்னை டாக்டர்களுக்குத் தோல்வி ஏற்படுவதில்லை. இருந்தும் ஸ்ரீ ஜான் காலமாகி விட்டார். உண்மை நிறைந்தவர் ஜான்" என்று ராஜாஜி கூறினார். இன்னும் பலர் ஸ்ரீ ஜானைப்பற்றிப் பேசினார்கள்.





கட்டபொம்மன் திருநாள்

★

பாரத நாட்டின் விடுதலைக்கு முதல் முழக்கம் செய்த கட்டபொம்மன் திருநாள் சென்ற பதினறுந்தேதி நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது. தமிழரசுக் கழகத்தின் சார்பில் சென்னை கோகலே மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மேடை மீது தமிழ்க்கொடி பறக்க, மன்றம் நிறைந்து ததும்பும்படி தமிழர் பெருங் கூட்டம் கூடியிருக்கத் தமிழரசுக் கழகத் தலைவர் திரு ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள் கட்டபொம்மனின் வீரத்தையும், அவனுடைய தியாக உணர்ச்சியையும், நீதி தவறாத செங்கோலையும் வெகுவாகப் பாராட்டி முரசு கொட்டினர். அவரைத் தொடர்ந்து இன்னும் பல தலைவர்களும் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவைப் போற்றி அந்த மாவீரனுக்கு நன்றியும் வணக்கமும் செலுத்திப் போற்றினார்கள். வாழ்க கட்டபொம்மன் திருநாமம்! வளர்க, வீரம்!


ஸ்ரீ கலாநிகேதன் ஆதரவில் சென்ற பதினறுந் தேதி புதன்கிழமையன்று சென்னை அண்ணாமலைமன்றத்தில் கட்டபொம்மன் நாடகம் நடைபெற்றது. சிவாஜி நாடக மன்றத்தார் நடத்திய "வீரபாண்டிய கட்டபொம்மன்" நாடகத்துக்கு ராஜாஜி தலைமை தாங்கினார். இந்த நாடகத்துக்கு ஏற்பாடு செய்த கலாநிகேதன் சார்பில் கட்டபொம்மனாக நடித்த திரு சிவாஜி கணேசனுக்கு ராஜாஜி பொன்னாடை போர்த்தி வாழ்த்து கூறினார். கட்டபொம்மன் வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக்கிய திரு. ம. பொ. சிவஞானம், திரு தி. நா. சுப்பிரமணியம் ஆகியவர்கள் முயற்சியை வெகுவாகப் பாராட்டினார். ராஜாஜி அவர்கள் பேசுவதையும் அவருக்குப் பின்னால் கட்டபொம்மன் கணேசன், நாடக ஆசிரியர் திரு சக்தி கிருஷ்ணசாமி, கலாநிகேதன் காரியதரிசி திரு எஸ். குருமூர்த்தி மூவரும் நிற்பதையும் படத்தில் காணலாம்.




வாழ்க மணமக்கள்



ராஜ்யஸ்ரீ பிக்கல்ஸ் ஜெனரல் மானேஜர் திரு எஸ். சுந்தரம் அவர்களின் புதல்வி திருமதி சிவகாமியைத் திரு ஸ்ரீதர புத்திரன் செப்டம்பர் 13ந் தேதி மணம் புரிந்து கொண்டார்.




'பம்பாய் க்ரானிக்கல்' பத்திரிகையைச் சேர்ந்த திரு பி. ஆர். எஸ். மணி அவர்களின் சகோதரி திருமதி ருக்மிணிக்கும் திரு கே. என். ராமநாதனுக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.




கேரள ராஜ்ய அட்வகேட் ஜெனரல் திரு கே. வி. சூரியநாராயணய்யர் அவர்களின் புதல்வி திருமதி சேதுவுக்கும் திரு பி. ஆர். பரமேசுவரனுக்கும் செப்டம்பர் 11ந் தேதி விவாகம் நடந்தது.




சங்கீத வித்வான் முடிகொண்டான் என். கிருஷ்ணமூர்த்தியின் சகோதரர் திரு என். கல்யாணசுந்தரத்துக்கும் திருமதி அனந்த லக்ஷ்மிக்கும் காரைக்குடியில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.



சாயாவனம் பிரபல மிராசுதார் திரு கோவிந்தசாமி பிள்ளை அவர்களின் குமாரி திருமதி கோஷாம்பாளுக்கும் திரு என். கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.


பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்,
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும் ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர்.ஜே.போர்ஹான் டி.டி.எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப்படுகிறது. ரத்தக்கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி விடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப்படலாம்.
தந்தவைத்தியனால்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்கு சக்தி
H-10



அருமைப் பம்பரம்

வ. இராசையா

சின்னச் சின்னப் பம்பரம் ;
சிவப்பு நிறத்துப் பம்பரம் ;
அன்னை தந்த பம்பரம் ;
அருமை யான பம்பரம்.

அண்ணன் பெற்ற பம்பரம்,
ஆடத் தெரியாப் பம்பரம்.
தங்கை பெற்ற பம்பரம்
தகிங்கிணதோம் பம்பரம்.

சீறி யெழுந்து பேசிப்பின்
செயல் சுருங்கும் மனிதர் போல்,
வீறு கொண்டு ஆடிப்பின்
வீழும் பம்ப ரங்களாம்.

எந்தன் குஞ்சுப் பம்பரம்
எதற்கும் அஞ்சாப் பம்பரம்!
முந்தி ஓடி அவைகளை
முட்டி வீழ்த்தும் பம்பரம் !

ஊசி போன்ற மூக்கினுல்
உழுது வரும் பம்பரம் !
மூசி மூசி நிலத் தொடு
மோதிப் பொரும் பம்பரம்

கயிறு சுற்றி வீசினுல்
கறங்கு போலச் சுழலுமே ;
வயிர முடைய மனிதன் போல்
வாட்டம் இன்றி உழைக்குமே.

அந்தம் இன்றி நீண்டவேளை
ஆடும் எந்தன் பம்பரம்.
இந்தப் பூமி சுற்றுதாமே,
இதற்கு எந்த மூலையோ !

பம்ப ரங்கள் ஆட்டலாம் ;
பந்த யங்கள் வைக்கலாம்.
உங்க ளுக்கு விருப்பமேல்,
ஓலை எழுதிப் போடுங்கள்.



சித்திரத் தொடர் கதை
சோதிடப் புலி
1 அதென்ன ஐயா அப்படி வீம்பு? பெண்ணுக்குத் தகப்பன் நான் சம்மதிக்கிறேன். நீங்கள் என்னவோ மேலே மேலே பேசிக் கொண்டு போகிறீர்களே!
இந்தாங்க உங்களோத்தானே..
2 உங்கள் சம்பந்தமே வேண்டாம். நாங்கள் ஊருக்குப் போகிறோம்.
இந்தப் பயமுறுத்தல் எல்லாம் இந்த உலகநாதனிடம் செல்லாது. போனால் போங்களேன்!
3 குதிரை வந்து விட்டது. மேலே ஆக வேண்டியதைக் கவனியுங்கள்!
கிடைத்து விட்டதா!
கிடைத்து விட்டதா!
கிடைத்து விட்டதா!
4 எங்கே இருந்ததாம்?
செல்வம் சொன்னபடியே பாழ்மண்டபத் தினடியில் தான் கட்டிப் போடப் பட்டிருந்ததாம்.
அப்படியானால் சோதிடத்தில் பலே புலிதான் அவன்! எங்கே அவன்?
5 செல்வம்! எங்கள் மானத்தைக் காப்பாற்றினாயே!
உன்னைக் கோவிலில் வைத்துத்தான் கும்பிட வேண்டும்!
முதலில் குழந்தையின் கல்யாணத்தை முடியுங்
6


இந்தா, செல்வம்! இதை வைத்துக் கொள்.
தனம்! இந்தா, புடவை! இதோ இந்தப் பாவாடை பாக்கியத்துக்கு!
இதெல்லாம் என்னத்துக்குங்க
அம்மா இருக்கட்டும் பரவாயில்லை, வாங்கிக் கொள்.
பாக்கியம்! இந்தா, தின்பண்டங்கள்!
தனம்! எடுத்துக்கோ, இன்னும் இரண்டு லட்டு! வேண்டாமென்றாலும் பாக்கியத்தை விடாதே! போதும் போதும் என்கிற வரைக்கும் கொடு.
அது சரி! நீங்க சோதிடம் எங்கே கத்துக் கொண்டீங்க?
அது வா! பெரிய ரகசியம்! சொல்ல முடியாது
செல்வம் இருக்கிறானா?
சிவப்புத் தொப்பி நிற்கிறதே வாசலில்!
ஆ..ஆ...அப்போ நம்ம குட்டு வெளிப்பட்டு விட்டதா?
தொடரும்



மாயப் பந்து

ராஜி

30. விசித்திரத் தட்டு

திங்களைப் பார்த்து அன்போடு வணங்கும் கலாவைப் பார்த்ததும் சித்திரக் குள்ளர்களுக்கு மனம் நெகிழ்ந்து விட்டது.

"கலா! எங்கே உன் அண்ணனைக் காணவில்லை?" என்று சித்திரக் குள்ளர்கள் கேட்டார்கள்.

மால்கோஷ் தன்னைவிட்டு எப்படிப் பிரிந்தான் என்பதை விவரமாகச் சொன்னாள் கலா. மேலும் வேடர்கள் தன்னைத் துன்பப்படுத்தியதை விவரித்துச் சொன்னாள்.

"இவர்கள் உன் மந்திர ஜமக்காளம், முத்து மாலை இரண்டையும் எடுத்துக் கொண்டு விட்டார்களா?" என்று கோபமாகச் சித்திரக் குள்ளர்கள் கேட்டார்கள்.

வேடர்கள், "ஐயா! எங்களை ஒன்றும் செய்ய வேண்டாம், நாங்கள் தெரியாமல் எடுத்துக் கொண்ட சாமான்களை இப்பொழுதே உங்கள் எதிரில் வைக்கிறோம்" என்று கூறி வெள்ளி மணி உள்பட அனைத்தையும் சித்திரக் குள்ளர்கள் எதிரில் வைத்தார்கள்.

"கலா! உன் சாமான்களை நீ எடுத்துக் கொள். நாங்கள் கொடுத்து உதவிய வெள்ளி மணியை நாங்கள் திருப்பி எடுத்துக் கொள்ளுகிறோம். அந்த மணியை வேறு ஒருவருக்குக் கொடுத்து உதவவேண்டும். ஆண்டவன் இருபையால் உனக்கு இது மாதிரியான கஷ்டமான நிலை ஏற்படாமல் இருக்கட்டும். மால்கோஷ் மிகவும் நல்ல பையன். புத்திசாலி. எதிர்பாராதவிதமாக அவன் உன்னை விட்டுப் பிரிந்ததுதான் எங்களுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது. வெள்ளி மணி அடித்த சத்தம் உங்களுக்குச் சேர்ந்தாற்போல் சில நிமிஷ நேரம் கேட்டது. நாங்கள் முதலில் நீயும் உன் அண்ணனும் சேர்ந்தாற்போல் ஏதோ கஷ்டத்துக்கு உட்பட்டிருப்பீர்கள் என்றுதான் நினைத்தோம். ஆனால் இங்கு வந்தபிறகுதான் விஷயங்களை அறிந்து கொண்டோம்" என்றார்கள்.

உடனே கலா, "நீங்கள் எப்படி இந்த இடத்தைக் கண்டுபிடித்து வெகு சீக்கிரமாக வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"அதோ பார்! எவ்வளவு பெரிய தட்டு! உன் ஜமக்காளத்தைவிடப் பெரியது. இந்தத் தட்டு எங்கள் முன்னோர்களால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தத் தட்டை நாங்கள் அடிக்கடி உபயோகப்படுத்தக் கூடாது. யாருக்காவது உதவி புரிவதா யிருந்தால் இதை உபயோகப் படுத்த வேண்டும். இந்தப் பறக்கும் தட்டு வெகு வேகமாகப் போகும். இந்த வெள்ளி மணிக்கும் இதற்கும் ஒரு சம்பந்தம் உண்டு. ஆதலால் வெள்ளி மணியின் ஒலி எங்கு கேட்கிறதோ, அதனுடைய மந்திர சக்தியினால் பறக்கும் தட்டு நேராக மணி எந்த இடத்தில் அடிக்கப் பட்டதோ அங்கு போய்ச் சேர்ந்து விடும். எங்களுக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. உங்களை நாங்கள் சந்தித்தபோது இந்தப் பறக்கும் தட்டின் விஷயத்தைப் பற்றிச் சொல்லவே இல்லை. ஏன் என்றால்

நாங்களே அதை ஒரு இடத்தில் இரகசியமாக வைத்திருந்தோம். மந்திரக்கிழவி எங்களைத் துன்பப் படுத்தியதெல்லாம் இந்தப் பறக்கும் தட்டை எப்படியாவது எங்களிடமிருந்து அபகரித்துப் போவதற்குத்தான். ஒன்றும் பலிக்கவில்லை. நீயும் உன் அண்ணாவும் அவளைச் சந்தித்ததிலிருந்து அவளிடத்தில் உள்ள கொடிய குணம் அகன்று விட்டது. மந்திரக் கிழவிக்கு உன் மீதும் உன் அண்ணன் மீதும் அளவு கடந்த பிரியம். என்னை நீங்கள் சந்தித்தபோது அவளுடைய குணத்தைப் பற்றி நான் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். நீங்கள் வெற்றியுடன் வீடு திரும்ப வேண்டும் என்று அவள் கவலை கொண்டிருந்தாள். அடிக்கடி நீங்கள் வீடு திரும்பும் வரையில் உங்களை மறைவாகச் சந்தித்து உதவி புரியப் போவதாகவே எங்களிடம் சொன்னாள். நீயும் மால்கோஷும் அவளுடைய சிடன் கார்குருவினால் பிரிக்கப் பட்டீர்கள் என்று தெரிந்து கொண்டிருந்தாள். மிகவும் வருத்தப்பட்டு, உங்களுக்கு ஏதாவது உதவி புரியவே ஆசைப்பட்டாள்.

"ஐயா! மால்கோஷ் இல்லாமல் நான் எப்படித் திரும்பிப் போவது? என் தகப்பனார், வீட்டுக்குத் திரும்பி வந்தால் ஒருவருக்கு ஒருவர் பிரியாமல் சேர்ந்தே வர வேண்டும் என்று எனக்கும் மால்கோஷுக்கும் கட்டளை யிட்டிருக்கிறார். ஆதலால் நான் இப்பொழுதே மால்கோஷ் இருக்கும் இடத்தைத் தேடி அவனைக் கண்டுபிடித்து என்னுடன் ஊருக்குத் திரும்பி அழைத்துப் போவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்கிறேன்" என்றாள் கலா.

"உன் தகப்பனார் நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து வீடு திரும்ப வேண்டும் என்று நிபந்தனை செய்திருந்தால் அப்படித்தான் நீ நடக்க வேண்டும். உன் தகப்பனாரின் குணத்தைப் பற்றி நாங்கள் நன்றாக அறிந்தவர்கள். அவர் மிகவும் நேர்மை உள்ளவர். ஆனால் பிடிவாத குணம் படைத்தவர். தாம் கூறிய வாக்கிலிருந்து தவற மாட்டார். இல்லாவிட்டால் நீங்கள் தனியாகப் பிரிந்து ஒருவரை யொருவர் கண்டு பிடிக்கப் பிரயத்தனம் செய்யாமல் வீட்டுக்குத் திரும்பி விடுவீர்க ளல்லவா?



அதேமாதிரியாக உன்னைத் தேடிக் கொண்டு மால்கோஷ் எங்கேயாவது அலைந்து திரிந்து கொண்டிருக்கிறானே, என்னவோ? யாருக்குத் தெரியும்?" என்று சித்திரக்குள்ளர்கள் சொன்னார்கள். மேலும் தொடர்ந்து அவர்கள், "அம்மா! உனக்கு நல்ல தைரியம் இருப்பதைப்பார்த்து நாங்கள் சந்தோஷம் அடைகிறோம். நீயே உன் முயற்சியினால் உன் அண்ணனைத் தேடிக் கண்டு பிடிப்பதுதான் பொருத்தம். உன்னுடைய முயற்சியில் நீ கட்டா



நீயும் உன் அண்ணாவும் தகப்பனார் மால்மாளை விட்டு வந்து பல நாட்களாகின்றன. ஆதலால் நீ உடனே உன் தகப்பனாரிடம் போய்ச் சேர். உன் அண்ணாவும் மிகவும் புத்திசாலி. அவனும் எப்படியாவது கார்குருவிடமிருந்து தப்பி, நீ ஊர் போய்ச் சேர்வதற்குள் வந்து சேர்ந்து விடுவான். நாம் கார்குருவிடம் இருக்கும் மால்கோஷைக் கண்டு பிடிப்பது என்பது நடக்காத காரியம். கார்குரு மிகவும் பொல்லாதவன். அதுவு மல்லாமல் அவன் தன்னுடைய விரோதிகளைத் தலைமறைவாக வைத்துக் கொள்வதற்காகப் பல வீடுகள் வைத்திருக்கிறான். அவன் எந்த வீட்டில் மால்கோஷை வைத்திருக்கிறான் என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆதலால் நீ உடனே உன் வீட்டுக்குத் திரும்பிப் போ" என்றார்கள் சித்திரக்குள்ளர்கள்.



லும் வெற்றி பெறுவாய் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. நாங்கள் சென்று வருகிறோம். நீயும் உடனே இந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு விடு. காடு தாண்டும் வரையில் உன்னுடன் நாங்கள் பின் தொடர்ந்து வருகிறோம். பிறகு நாங்கள் எங்கள் இருப்பிடத்துக்குச் செல்லுகிறோம்'' என்று கூறினார்கள்.

பறக்கும் ஜமக்காளத்தில் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டாள் கலா. கொஞ்ச தூரம் வரை அவளைப் பறக்கும் தட்டில் பின்தொடர்ந்தனர் சித்திரக் குள்ளர்கள்.


மாலகோஷ் தன்னைப் பார்த்துக் குரைத்த நாயின் மீது விட்டெறிந்த பந்து, நிறையத் தண்ணீர் ஓடும் ஆற்றின் பக்கம் விழுந்ததே தவிர, ஆற்றுத் தண்ணீரில் விழாமல் ஆற்றின் ஓரமாக அப்பொழுது தான் அக்கரைக்குச் செல்லுவதற்கு இருந்த ஒரு பரிசலை நோக்கிச் சென்றது. மறுகணம் பரிசலில் இருந்த ஒரு பழக்காரியின் கூடையில் விழுந்தது. அந்தக் கூடையில் விளாம்பழங்கள் இருந்தன. சற்றேறக் குறைய விளாம்பழத்தின் நிறத்தையே பந்தும் கொண்டிருந்ததால் ஒருவரும் பந்தை எளிதில் தெரிந்துகொள்ளவில்லை.

மாயப்பந்து வெகு ஜோராகப் பரிசலில் பிரயாணம் செய்து அக்கரை சேர்ந்தது. பரிசல் அக்கரை சேர்ந்தவுடன் பரிசலில் இருந்தவர்கள் அவரவர்கள் இடத்தை நோக்கிச் சென்றார்கள். விளாம்பழக் கூடைக்குச் சொந்தக்காரியான அந்தக் கிழவியும் தனது கூடையில் விலைமதிப்பில்லாத ஒரு மாயப்பந்து இருப்பதைக் கவனிக்கவில்லை. வழக்கம்போலக் கூடையைத் தலைமேல் வைத்துக் கொண்டு தெருத் தெருவாக விளாம்பழங்களை விற்றுக் கொண்டு ஒரு வீட்டுத் திண்ணையிலே கூடையை இறக்கிவிட்டுக் கூடைக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள். ஒரு ஸ்திரீ இரண்டு விளாம்பழங்களை அவளிடம் வாங்கினாள். மறு கணம் அவள், ''என்னம்மா! விளாம் பழம் என்று ஒரு பந்தைக் கொடுக்கிறாயே? இந்தா, பந்தை எடுத்துக் கொண்டு விளாம் பழத்தைக் கொடு'' என்று வேறு விளாம் பழத்தை வாங்கிக் கொண்டாள்.

கூடைக்காரி அந்தப் பந்தைக் கையில் எடுத்துக் கொண்டாள். ''என் கூடையிலே ஏது பந்து? விளாம்பழங்களைக் கொண்டு வரும் பொழுது சரியாகத்தானே பார்த்து வாங்கிக் கொண்டு வந்தேன்? பரிசலில் எந்தக் குழந்தையின் பந்தோ தவறி என் கூடைக்குள் வந்திருக்க வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டே தெரு வழியே போய்க் கொண்டிருந்தாள். அப்பொழுது அழுது கொண்டிருந்த ஒரு குழந்தையை ஒரு வயோதிகர் இடுப்பில் வைத்துக் கொண்டு சமாதானம் செய்து கொண்டிருந்தார். அந்த வயோதிகர் எந்த விதத்தில் சமாதானம் செய்து பார்த்தும் குழந்தை கால்களை உதைத்துக் கொண்டு வீறிட்டுக் கத்திக் கொண்டிருந்தது. குழந்தை கத்துவதைப் பார்த்த விளாம்பழக் கூடைக்காரி, ''ஐயா! இந்தப் பந்து என் கூடையிலே தவறி வந்து விட்டது. இதைக் குழந்தைக்குக் கொடுத்துச் சமாதானம் செய்யுங்கள்'' என்று பந்தை அந்த வயோதிகரிடம் கொடுத்து விட்டுச் சென்றாள்.

''அட இதைப் பாருடா. உனக்கு ஜோரான ஒரு பந்து!'' என்று கூறி மூன்று நான்கு முறை பந்தைக் கீழே போட்டுப் பிடித்தார். ஆனால் அந்தப் பிடிவாதம் பிடித்த குழந்தை என்ன விளையாட்டுக் காட்டியும் அழுவதை நிறுத்துவதாகத் தெரியவில்லை. அவருக்குக் கோபம் வந்தது. பந்தைக் கீழேபோட்டுப்பிடித்துக்கொண்டே, ''இப்போ நீ அழுகையை நிறுத்தாவிட்டால் பூச்சாண்டியைக் கூப்பிடுவேன்! பூச்சாண்டி! நீ ஓடி வந்து குழந்தையைப் பிடித்துக் கொண்டு போ!'' என்று சொன்னார்.

என்ன ஆச்சரியம்! அவர் சொல்லி முடிப்பதற்குள் விகார உருவம் படைத்த ஒருவன், ''நான்தான் பூச்சாண்டி!'' என்று சொல்லிக்கொண்டே தோன்றினான். (தொடரும்)


கலிங்கா
டியூப்ஸ்
தண்ணீர், மற்றும் 'காஸ்' விநியோகத்துக்கும் சகல விதமான தொழிற்சாலை, வீட்டுத் தேவைகளுக்கும் உயர்தர ஸ்டீல் குழாய்கள்.
KALINGA TUBES LTD.
33, CHITTARANJAN AVENUE,
CALCUTTA-12.
Works: CHOUDWAR, CUTTACK
INDIA'S FIRST CONTINUOUS STEEL TUBE FACTORY



சோப்பைப் பற்றிய உண்மைகள் ௨

இந்தியாவில் சோப்புத் தொழில் நம் தேசத்திற்கான தொழில் வளர்ச்சியின் அடிப்படையின் மீது ஆரம்பித்தது. தாவர எண்ணெய்களிலிருந்து டாய்லெட் சோப்புகளை தயாரிப்பதில் வழிகாட்டியான கோத்ரெஜ் நம் தேசத்தின் தந்தையான மஹாத்மா காந்தியின் ஆசியைப் பெற்றுள்ளது.

பொதுஜன நன்மைக்காக *கோத்ரெஜ்* ஆல் வெளியிடப்பட்டிருக்கிறது.

மாலவல்லியின் தியாகம்

அத்தியாயம் 17

எதிர்பாராத சந்திப்பு

காஞ்சிபுரத்து வீதியொன்றில் இரவு வேளையில் கலங்கமாலரையரால் கடுமையாகத் தாக்குண்ட பூதுகனுக்கு நினைவு தப்பி விட்டது. கலங்கமாலரையர் உடனே அவனை அப்புறப் படுத்த நினைத்து, அவன் தலைப் பக்கமாகச் சென்று இரு கைகளாலும் அவனைத் தூக்க முற்பட்டார்.

இந்தச் சமயத்தில் "நில், நகராதே!" என்ற இடி குரல் கேட்டதும், எதற்கும் கலங்காத கலங்கமாலரையரின் நெஞ்சம் கூடக் கலங்கி விட்டது என்பது அவர் சிறிது நடுங்கித் திரும்பிப் பார்த்ததிலிருந்து தெரிந்தது.

அப்பொழுது அங்கே கம்பீரமான ஒரு புரவியிலிருந்து ஒருவன் இறங்கினான். அவனுடன் இன்னும் சில குதிரை வீரர்கள் வந்திருந்தனர். முதலில் வந்தவன் அவர்களுக்குச் சைகை காட்டியதும் அந்த வீரர்கள் மறுகணம் குதிரையிலிருந்து இறங்கிக் கீழேகிடந்த பூதுகனைத் தூக்கிக் குதிரையில் வைத்துக் கொண்டு வேகமாகச் சென்று விட்டனர்.

கலங்கமாலரையர் கலக்கம் தெளிந்து அந்த மனிதனை நிமிர்ந்து பார்த்தார். "யார்? என்ன? சிம்மவர்மரா?" என்று குழப்பத்துடன் கேட்டார்.

"ஏன்? நீர் என்னை இந்தச் சமயத்தில் இங்கே எதிர்பார்க்கவில்லை; இல்லையா?" என்று கேட்டான் சிம்மவர்மன்.

"இல்லை, இல்லை. வெகு நாளைய ராஜத்துரோகி இன்று என் கையில் சிக்கினான். அவனைக் கொண்டு போய்த் தனியிடத்தில் வைத்துத் தக்கபடி தண்டிக்க எண்ணியிருந்தேன்....தாங்கள்... வந்து......"

"....குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டேன். இல்லையா? கலங்கமாலரையரே! கலங்காதேயும். உமது காரியத்தைக் கவனித்துக் கொண்டு போம். பூதுகன் என் பாதுகாப்பில் இருக்கும் விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம்" என்று கூறிவிட்டு, சிம்மவர்மன் குதிரையைச் செலுத்திக் கொண்டு சென்றான். கலங்கமாலரையர் மௌனமாக அங்கிருந்து மறைந்தார்.

பூதுகனைத் தூக்கிச் சென்ற வீரர்கள் வெகுதூரம் சென்று, தேனார்மொழியாளின் மாளிகை வாசலில் வந்து குதிரைகளை நிறுத்தினர். சிம்மவர்மன் தன் குதிரையினின்றும் இறங்கி, மாளிகையின் உள்ளே சென்று, கதவை இலேசாகத் தட்டினான். உடனே கதவும் திறக்கப்பட்டது. வாசலில் இருந்த வீரர்களுக்குச் சைகை காட்டி அவனை உள்ளே எடுத்துவரச் சொன்னான்.

மயக்கமுற்றிருந்த பூதுகனை அந்த வீரர்கள் மெதுவாகக்குதிரையிலிருந்து இறக்கி உள்ளே கொண்டு போனார்கள். கூடத்தைக் கடந்து இரண்டு மூன்று கட்டுக்



கலைத் தாண்டி, பின்புறம் வழியாக மேன் மாடத்துக்குக் கொண்டு சென்றார்கள்.

அப்பொழுது அங்கே நின்று கொண்டிருந்த பெண்மணி கலவரமடைந்து, "ஐயோ...! பூதுகரா? அவருக்கு என்ன நேர்ந்தது!" என்று கேட்டுக் குலுங்கக் குலுங்க விம்மினாள்.

"தேனார்மொழி! பூதுகனுக்கு ஒன்றும் இல்லை. மண்டையில் பலத்த அடிபட்டிருக்கிறது. அதற்குத் தகுந்த சிகிச்சை செய்து இங்கு கொண்டு வந்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் அவன் கண் விழித்துக் கொள்ளுவான். அவனைச் சர்வ ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்பு. பூதுகன் உன் மாளிகையில் இருப்பது ஒருவருக்கும் தெரியக் கூடாது.' பொழுது விடிய இன்னும் ஒரு ஜாமம் இருக்கிறது. நான் உடனே போகவேண்டும். இன்று இரவு நான் இங்கு வருகிறேன்...!" என்று கூறிவிட்டுச் சிம்மவர்மன் ஓடிச் சென்று குதிரையில் ஏறி அதை வேகமாகச் செலுத்தினான். பூதுகனை மேன்மாடத்தில் ஒரு கட்டிலில் கிடத்திவிட்டு, வீரர்கள் வெளியே சென்றனர்.

தேனார்மொழியாள் உடனே வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு மேன்மாடத்துக்குச் சென்றாள்.

பூதுகன் மெய்மறந்து கட்டிலில் படுத்துக் கிடந்தான். விசாலமான அவன் மார்பும், உருண்டு திரண்ட புஜங்களும், கம்பீரமான வனப்புடன் திகழ்ந்த அவனது வதனமும் தேனார்மொழியாள் உள்ளத்தில், எப்பொழுதோ கிளர்ந்தெழுந்து கொழுந்து விட்டெரிந்த ஆசைக் கனலை மூண்டெழச் செய்தன.

சிறிது நேரம் வைத்தவிழி வாங்காமல் பூதுகனின் சௌந்தர்ய வதனத்தை கூர்ந்து நோக்கினாள் தேனார்மொழியாள். மறுகணம் பைத்தியம் பிடித்தவள்மாதிரி ஓடிச் சென்று சித்திர வேலைப்பாடுகளுடன் பொன்னாலான தூபக் காலை எடுத்து வந்து அதைச் சற்று விசிறி, நறுமணம் கலந்த பொடியை அதில் இட்டாள்; உடனே அதிலிருந்து எழுந்த நறும் புகை அந்த மாடம் முழுதும் பரவி நன் மணத்தைப் பரப்பியது.

சற்று நேரத்துக்கெல்லாம் தூரத்தில் கோழி கூவியது. பொழுது புலருவதற்கான நேரம் நெருங்கிவிட்டது என்பதை அறிந்த தேனார்மொழியாள் பூதுகனை அமைதியாக இருக்க விட்டுவிட்டு, மேன் மாடத்திலிருந்து கீழே சென்றாள்.

கல்கலவென்று கூவிய புள்ளினங்களின் குரல்கள் அருணனின் வரவுக்குக் கட்டியங் கூறின. வைகறைப் போதுக்கே உரிய குளிர்ந்த மந்தமாருதம் மெல்லென வீசிக்கொண்டிருந்தது.

உறக்கம் தெளிந்தவன்போல் பூதுகன் கண் விழித்தான். தான் எங்கிருக்கிறோம் என்பதே அவனுக்கு விளங்கவில்லை; குத்து விளக்கெரியக் கோட்டுக் கால் கட்டிலின்மேல், மெத்தென்ற பஞ்ச சயனத்தின்மீது தான் படுத்திருப்பதின் மர்மம் புலனாகவில்லை அவனுக்கு. அவன்



படுத்திருந்த அறையின் அலங்காரத்தைக் கொஞ்சம் கவனித்தான் பூதுகன். அழகிய சாளரங்களை மறைத்திருந்த நிலா வர்ணப் பட்டுத் திரைகள் மெல்ல ஆடி அசைந்தன. அகிற் புகையின் மணம் அறை முழுவதும் நிறைந்து அவனைக் கிறங்க வைத்தது.

மறுகணம் சௌந்தர்ய பிம்பமாகத் தேனார்மொழியாள் அவன் முன் தோன்றினாள்.

வியப்பினால் விரிந்த பூதுகனின் நயனங்கள் அவளிடமே லயித்து நின்றன.


"தேனார்மொழி! நான் எங்கே இருக்கிறேன்? நீ இங்கே எப்படி வந்தாய்?" என்று கேட்டு எழுந்திருக்க முயன்ற பூதுகன் தலையில் மின்னலைப் போல் அதிர்ச்சி ஏற்படவே, அவன் மறுபடியும் பஞ்சணை மெத்தையில் சாய்ந்தான்.

"....சுவாமி! தாங்கள் அலட்டிக் கொள்ளக் கூடாது. இப்பொழுது தாங்கள் தேனார்மொழியின் இல்லத்தில் இருக்கிறீர்கள்...." என்று தயக்கமும் பணிவும் கலந்த குரலில் கூறி விட்டு, தேனார்மொழியாள் அவன் கட்டிலுக்கு அருகில் வந்து நின்றாள்.

பூதுகன் படுத்தபடியே கண்களைமூடிக் கொண்டு சற்று நேரம் சிந்தித்தான். தேனார்மொழியாளின் அழகிய இல்லத்திலிருந்து, தான் புறப்பட்டுப் போனது. புத்த பிக்ஷுணி காலநேமி கையைக் கண்டது.. பிறகு அங்கிருந்து வெளியேறியதும் கலங்கமாலரையரால் கடுமையாகத் தலையில் தாக்குண்டது முதலிய நிகழ்ச்சிகளெல்லாம் அவன் மனக்கண் முன் பளிச்சிட்டன.

கண்களைத் திறந்து பூதுகன் தேனார்மொழியாளைப் பார்த்தான். அவள் அப்பொழுது தெய்வ அணங்கின் திவ்ய ரூபத்துடன் தோன்றினாள். நீராடித் துவட்டிய கூந்தலை வாரி முடிந்திருந்தாள். அவளது அடர்ந்த கேசம் அலை அலையாய்ப் புரண்டு காற்றில் இலேசாகக் கலைந்து அவளுக்குத் தனி எழிலை அளித்தது. சந்திரன் போன்ற அவள் முக காந்தியை, அவளது இளம்பிறையை நிகர்த்த நெற்றியில் இலகிய சிந்தூரப் பொட்டு பளீரென்று எடுத்துக் காட்டியது. அவளது பொன்னான மேனியை அணைந்து கொண்டிருந்த நீல வண்ணப் பட்டுச் சேலை, காலைப் பொழுதில் அவளைக் கந்தர்வலோகப் பெண்ணாகக் காட்டியது. அவளுடைய அழகிய தளிர்க் கரங்கள் அவனைநோக்கிக் கூப்பிய வண்ணம் இருந்தன. முன்பு பூதுகன் அவள் முகத்தில்கண்ட வெறியோ, மயக்கமோ இப்பொழுது காணப்படவில்லை. அதற்கு மாறாகக் களங்கமற்ற பக்தி உணர்ச்சி வெளிப்பட்டது.

பூதுகன், மிகுந்த சிரமத்துடன் எழுந்து தலையணையில் சாய்ந்த வண்ணம் அமர்ந்து, "தேனார்மொழி! நான் உனக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கு உயிர் கொடுத்த உனக்கு என்றென்றும் என் நன்றி உரியது!" என்று உள்ள நெகிழ்ச்சியுடன் கூறி, "என்னைக் காப்பாற்றி இங்கு கொண்டுவந்து சேர்க்க உன்னால் எப்படி முடிந்தது?"





ஈடில்லா
எழிலுக்கு
Dralle
TALC
Powder
Finest
Musk
Soap
Dralle
C.S. சரோஜா
டிராலி
டால்க் பவுடர்
&
மஸ்க் சோப்
AYRA-404

என்று மிகுந்த ஆவலோடு அவளைப் பார்த்துக் கேட்டான்.

தேனார்மொழி மிகவும் பணிவுடன், "நீங்கள் கொஞ்சம் பழம் சாப்பிட்டு விட்டு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி அருகில் முக்காலியில் இருந்த பழத் தட்டை அவனுக்குச் சமீபமாக நகர்த்தினாள்.

பூதுகன் பழத்தை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே, "தேனார்மொழி! நான் கேட்டதற்கு மறுமொழி ஒன்றும் நீ சொல்லவில்லையே! என்னை நீ எப்படிக் காப்பாற்றினாய்?" என்று கேட்டான்.

"தங்களைக் காப்பாற்றியது..நான் அல்ல; சிம்மவர்மர். இன்று விடிய ஒரு ஜாமப் பொழுது இருக்கும்போது உங்களை இங்கு கொண்டு வந்து சேர்த்தார். அப்பொழுது நீங்கள் நினைவு தப்பிய நிலையில் இருந்தீர்கள். நீங்கள் இங்கு இருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம் என்று சொன்னார். இன்று இரவு இங்கு வந்து உங்களைச் சந்திப்பதாகவும் சொன்னார்...." என்று தேனார்மொழியாள் மிகவும் தணிந்த குரலில் சொன்னாள்.

பூதுகனுக்கு நடந்தவை யாவும் இப்பொழுது விளங்கிவிட்டன. கலங்கமாலரையர் தன்னைப் பலமாகத் தாக்கிய போது சிம்மவர்மன் அங்கு வந்து அவரிடமிருந்து தன்னை மீட்டு இங்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறான் என்று ஊகித்து அறிந்து கொண்டான்.

பூதுகன் ஆழ்ந்த யோசனையில் இருப்பதைப் பார்த்த தேனார் மொழியாள், "சுவாமி! அடியாளைப் பற்றித் தங்களுக்கு எவ்வித ஐயமும் வேண்டாம். நேற்று இரவு நான் தங்களிடம் அறிவிலியாக நடந்து கொண்டுவிட்டேன். மன்னிக்க வேண்டும். தங்கள் உள்ளங்கவர்ந்த வைகைமாலையின் இன்ப வாழ்வுக்குக் குறுக்கே நான் ஒருநாளும் நிற்க மாட்டேன். உத்தமராகிய உங்கள் உள்ளத் துணிவு, மிகவும் பாராட்டத் தக்கது. உங்கள் வாழ்வின் லட்சியத்துக்கு என் உடல், பொருள், ஆவி யாவற்றையும் தியாகம் செய்ய நான் சித்தமாயிருக்கிறேன்...." என்று உணர்ச்சிபொங்கும் குரலில் சொன்னாள். அப்பொழுது குவளைமலர்போன்ற அவள் நயனங்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் பொலபொலவென்று உதிர்ந்தன.

"தேனார்மொழி! நான் அப்பொழுது நடந்தவற்றை யெல்லாம் உடனே மறந்து விட்டேன். நீ மிகவும் விவேகி. உன் மனமாற்றத்தை நான் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். தேனார்மொழி! நான் இப்பொழுது உன்னுடைய அடைக்கலப் பொருள். என் இருப்பிடம் யாருக்கும் தெரிந்துவிடாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு. சிம்மவர்மனின் நட்பு இந்தச் சமயத்தில் கிட்டுவது மிகவும் இன்றியமையாதது....அவன் நட்பைக் கொண்டு பல காரியங்களைச் சாதித்துக் கொண்டுவிட வேண்டும். முள்ளைக் கொண்டுதான் முள்ளை எடுக்க வேண்டும். இவனும் நமக்குப் பகைவன் தான். என்றாலும் இவனால் நமக்குப் பெரிய காரியங்கள் ஆகவேண்டியிருக்கின்றன. இதற்கெல்லாம் கலங்கமாலரையர் எனக்குப் பேருதவி செய்திருக்கிறார்! அவருக்கு என் நன்றி உணர்ச்சியைச் சரியான ஒரு சந்தர்ப்பத்தில் காட்ட வேண்டும்....என்றென்றும் அவர் மறக்க முடியாத வண்ணம் அந்த உதவி நிலைத்திருக்க வேண்டும்! மேலும் அவரை வெளியே விட்டு வைப்பது நாட்டுக்கு ஆபத்து; நமக்கும் ஆபத்து. அந்தப் பாதகனால் நம் முயற்சிகள் எல்லாம் பாழாய்ப் போய்விடும்போலிருக்கின்றன. எப்படியாவது அவனைப் பிடித்துப் பாதுகாப்பில் வைக்க வேண்டும்!" என்று குறும்பு நகை தவழும் முகத்துடன் பூதுகன் கூறி விட்டுத் தலையைக் கையினால் பிடித்து விட்டுக்கொண்டான்.

"....சுவாமி! தாங்கள் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு பேசிக் கொள்ளலாம்...." என்று கூறிவிட்டுத் தேனார்மொழி அறையின் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே போனாள்.

பிறைசூடிய பெருமானது தாண்டவக் கோலத் திருவுருவில் மனத்தை லயிக்கவிட்டு, தேனார்மொழியாள் கண்களை இறுக மூடிக் கொண்டு தியானத்தில் இருந்தாள்.

அப்பொழுது பரிவாதினி வீணையின் ஒலி அவள் செவிகளில் கேட்டது. அத்துடன் பூதுகனின் கண்டத்திலிருந்து எழுந்த கம்பீர நாதமும் கேட்டது.

"பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ணம் இல்லி வடிவு வேறயவன்
கண்ணினுண் மணி கச்சியே கம்பனே"

என்ற தித்திக்கும் தீந்தமிழ்த் தேவாரப் பாடல் தேனார்மொழியாள் செவிகளில் தேனாகப் புகுந்து ஒலித்தது. உடனே அவள் மேன்மாடத்துக்கு விரைந்து பூதுகன் இருந்த அறைக்குள் புகுந்தாள்.

அப்பொழுது பூதுகன்,

"கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென்
கொங்கு தண்கும ரித்துறை ஆடிலென்
ஓங்குமா கடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே"

என்ற அப்பர் பெருமானின் அற்புதத் தேவாரப் பாடலை பாவத்தோடு பாடிக்-

கொண்டிருந்தான். பாட்டு முடிந்ததும் பரிவாதினி வீணையை வைத்து விட்டு, பூதுகன் தேனுர்மொழியாளை நிமிர்ந்து பார்த்தான்.

அவள் கண்களில் நீர் மல்கப் பாடலைச் செவி மடுத்த வண்ணம் தன்னை மறந்து நின்று கொண்டிருந்தாள்.

"தேனுர்மொழி! உன் வீட்டுக்கு வந்ததும் அப்பர் பெருமான் தேவாரம் ஒன்றைப் பரிவாதினியில் இணைத்துப் பாடவேண்டும்என்ற ஆவல் எழுந்தது. எனக்குக் கடவுளிடம் நம்பிக்கை யில்லாவிட்டாலும், பிறருக்கு மகிழ்ச்சி உண்டாக்குவதற்காக எத்தகைய பக்திப் பனுவல்களையும் நான் பாடச் சித்தமாயிருப்பது வழக்கம்!" என்றான் பூதுகன்.



"எந்த நோக்கத்தோடு பாடினாலும் இறைவன் அதை அன்போடு ஏற்றுக் கொள்கிறான் என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அற்புதமாகப் பாடுகிறீர்கள். உங்களுடைய திவ்ய கானம் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுக்கே அர்ப்பணமாக்கப்பட வேண்டியது......" என்றாள் தேனுர்மொழியாள் பரவசத்துடன்.

"ஹஹ்ஹ ஹஹ்ஹ ஹா" என்று பலமாகச் சிரித்துவிட்டுப் பூதுகன், "தேனுர்மொழி! நான் உனக்காகத்தான் அந்தப் பாடலைப் பாடினேன். அதைச் சிவபெருமானுக்கு அர்ப்பணமாக்க விரும்புகிறாய்!" என்றான்.

"சுவாமி! அது தெய்வாம்சம் பொருந்திய கானம். அதனால்தான் அப்படிச் சொன்னேன்" என்றாள் தேனுர்மொழியாள்.

இந்தச் சமயத்தில் வாசற்புறத்தில் யாரோ கதவைத் தடதடவென்று இடிக்கும் சத்தம் கேட்டது.

தேனுர்மொழியாள் உடனே கீழே இறங்கிச் சென்றாள்.

வாசற் கதவைத் திறந்ததும், சிம்மவர்மன் உள்ளே நுழைந்தான்.

"தேனுர்மொழி! பூதுகரை நான் இப்பொழுது பார்க்கலாமா?" என்று கேட்டுக்கொண்டே சிம்மவர்மன் மேன்மாடத்தை நோக்கி நடந்தான்.

வாசற் கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்த தேனுர்மொழியாள், சிரித்துக் கொண்டே, "ஆகா! தாராளமாய்ப் பார்க்கலாம். இதற்கு என்னுடைய உத்தரவு எதற்கு?" என்று குறும்பாகக் கேட்டாள்.

"தேனுர்மொழி! நீ யார் தெரியுமா? பல்லவ ராஜ்யத்தின் அரண்மனை இசைக் கணிகை. உன்னிடம் உத்தரவு பெறாமல் உன் விருந்தாளியை நான் சந்தித்துப் பேசுவது நியாயமா?" என்று கேட்டுக் கொண்டே மேன்மாடத்துக்குச் செல்லும் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றான் சிம்மவர்மன்.


சிம்மவர்மனைக் கண்ட பூதுகன், "வாருங்கள்!" என்று கை கூப்பி வரவேற்றான்.

சிம்மவர்மனும் பதிலுக்கு வணங்கி விட்டு, அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்து "நண்பரே! இப்பொழுது தங்கள் உடல் நலம் பூரணமாகச் சௌக்கியமடைந்திருக்கும் என்று நம்புகிறேன்" என்றான்.

"ஆகா! இப்பொழுது எனக்கு ஒன்றும் இல்லை. தங்களுடைய அன்பான கவனிப்பு இருக்கும்போது என் உடம்பு தேறுவதற்குக் கேட்பானேன்? எனக்கு இப்பொழுது இருக்கும் கவலையெல்லாம் மேற்கொண்டு நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றித்தான். முக்கியமாகக் கலங்கமாலரையரைப் பற்றித்தான் நான் அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அந்த வேஷதாரி சுதந்திரமாக வெளியே திரிந்து கொண்டிருப்பது நம் இருவருடைய முயற்சிகளுக்குப் பெரிய இடைஞ்சல் என்பதைத் தீர்மானமாகக் கொள்ள வேண்டும். அதுவும் அவனுக்கு என்னிடம் நீண்ட காலமாகத் தீராப் பகை. அவனைத் தீர்த்துக் கட்டுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஒருமுறை அவன் உயிர் என் கையில் ஊசலாடியது. அவனை அலைகடலில் தூக்கி எறிந்தேன். பிறகு கருணை காட்டி விட்டு விட்டேன். சோழ அரசு நிறுவ நான் முயலுவது அவனுக்குச் சற்றும் பிடிக்காதவிஷயம்!" என்றான் பூதுகன்.

"நண்பரே! வெகு நாட்களாகத் தங்களுடைய நட்பை அடைய எனக்கு விருப்பம். உங்கள் முயற்சிகளுக்கு உதவியாயிருப்பது இனி என் கடமை.



அக்டோபர் 22-ந் தேதி முதல்
சென்னை : ஸ்ரீ கிருஷ்ணா - காமதேனு - உமா
மற்றும்
தென்னாடெங்கும்
எம்.ஏ.வி பிக்சர்ஸ்
முதலாளி
கதை, வசனம்
வேங்கடராமானுஜம்
டைரக்ஷன்
V. ஸ்ரீனிவாசன்
ஸ்டுடியோ: ரத்னா, சேலம்.



ஸெவன் ஓ'க்ளாக் பிளேடினல் அநேக தடவை க்ஷவரம் செய்து கொள்வதன் மூலம் பணத்தைச் சேமியுங்கள்

மட்டரக பிளேடுகள் வாங்குவதால் பணம் சேமிக்கப்படுகிறது என்று நீங்கள் எண்ணுவது தவறு. குறைந்த விலைக்கு வாங்கப் படும் பிளேடு ஒரு க்ஷவரத்துக்குப் பிறகு மறுபடியும் உபயோகிக்க முடியாத நிலைமையை அடைவதால் பிரயோஜனமற்றதாக ஆகி விடுகிறது.

ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகள் மிகவும் கூர்மையானவை என்பதை சொல்லவும் வேண்டுமா. ஒவ்வொரு பிளேடும் அநேக தடவை க்ஷவரம் செய்துகொள்ளமட்டுமா உதவுகிறது. மழு மழுப்பான க்ஷவரத்தையும் அளிக்கிறது. ஆதலால்தான் ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகள் வாங்குவதன்மூலம் பணத்தை சேமிக்கிறீர்கள்.



7 o'clock BLADES

இன்றே ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளை வாங்குங்கள்

என்னுடைய முயற்சிகளுக்கு உங்களுடைய உதவி என்றும் எனக்குத் தேவை. நம் இருவருடைய முயற்சிகளுக்கும் குறுக்கே நிற்பவர் யாராயிருந்தாலும் அவர்கள் நம் இருவருக்கும் பொதுப் பகைவர்கள். ஆகவே, உங்கள் பகைவனாகிய கலிங்கமாலரையன் எனக்கும் பகைவன்தான். அவன் இப்பொழுது என்னுடைய காரியங்களை ரகசியமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறான். எனக்கும் அவனிடம் வெகு நாட்களாகக் காரணம் தெரியாத ஒரு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அவன்மீது எப்போதும் எனக்கு ஒரு கண்; அன்று அவன் உங்களை மறைமுகமாகத் தாக்கியபோது கூட அதனால்தான் நான் உங்களுக்கு உதவ முடிந்தது. அன்று இரவு நான் உங்களைத் தூக்கிக்கொண்டு வந்ததிலிருந்து கலிங்கமாலரையனுக்கு என்மீது கடும்பகை உண்டாகி விட்டது. ஆனால் வெளிப் படையாகக் காட்டிக் கொள்வதில்லை!''

''சிம்மவர்மரே! கலிங்கமாலரையனுக்கு இந்தப் பல்லவ ராஜ்யத்தில் எப்படிச் செல்வாக்கு ஏற்பட்டது?''

''கலிங்கமாலரையன் சாம, தான, பேத, தண்டம் முதலிய சதுர்வித உபாயங்களிலும் கைதேர்ந்தவன். கோள்கள் புனைந்து சொல்லுவதில் மிகவும் நிபுணன். பல்லவ சேனாபதி உதயசந்திரனை அவன் மெல்லத் தன் கையில் போட்டுக் கொண்டான். தன்னுடைய வஞ்சகத் தூண்டில் முள்ளுக்கு இரையாக என்னை உபயோகப் படுத்திக் கொண்டான். என்னைப் பற்றிப் பலவிதமாகச் சேனாபதி உதயசந்திரனிடம் கோள்கள் சொல்லி அவனுக்கு என்மீது வெறுப்பு ஏற்படும்படி செய்திருக்கிறான் என்று என்னுடைய ஒற்றர்கள் மூலம் தெரிய வந்தது. இனி மேல் அவனைச் சும்மா விட்டுவைக்கக் கூடாது. இது சம்பந்தமாக யோசனை கேட்கத்தான் உங்களை நாடி வந்தேன்!''

''...அது சரிதான்! கலிங்கமாலரையனை நம் காரியங்களுக்குத் திறமையாகப் பயன்படுத்திக்கொண்டு பிறகு கடைசியாகத் தீர்த்துக்கட்ட முயல்வதுதான் விவேகம். மேலும், பல்லவராஜ்யத்தின் மேலும் உங்களுக்கு இருக்கும் விசேஷ அபிமானம் எனக்குத் தெரிந்ததுதான். உங்கள் முயற்சி வெற்றி பெறுவதற்கு இன்னும் பலமுள்ள பலருடைய உதவியும் ஒத்துழைப்பும் தேவைப்படும். கொடும்பாளூர் சிற்றரசானாலும் பலத்தில் மேம்பட்டு விளங்குகிறது. அவ்வூர் மன்னன் பூரிவிக்கிரம கேசரி பிரமாதமாகக் கட்டியிருக்கும் மர்மங்கள் நிறைந்துள்ள கோட்டையை நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும். கலிங்கமாலரையனையும் மெதுவாக அங்கே கொண்டு போய்ச் சேர்த்துவிட்டால் பிறகு அவனுடைய கொட்டத்தை அடக்குவது மிகவும் எளிதாகிவிடும். நீங்கள் சோழ ராஜ்யம் நிறுவுவதில் அக்கறையும் ஆர்வமும் காட்டினால்தான், கொடும்பாளூர்ப் புலிகளான ஆதித்தன், பராந்தகன் இருவரிடமும் நட்புகொள்ள முடியும். ஏனென்றால் அவர்கள் இருவரும் சோழ அரசு நிலைநாட்டுவதில் தீவிரமாயிருக்கிறார்கள்...'' என்று கூறினான் பூதுகன்.

''பல்லவ சிம்மாசனத்தைக் கைப்பற்றுவதுதான் என் லட்சியம். அதற்கு இடையில் சோழ அரசு உருவாவதில் எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. நான் கொடும்பாளூரில் இதை ஆதரித்துப் பேசுகிறேன். இருக்கட்டும்... அவர்கள் நட்பு எனக்குக் கிட்டுவது சாத்தியமா?'' என்று கேட்டான் சிம்மவர்மன்.

''ஏன் சாத்தியமாகாது? கொடும்பாளூரார்க்குப் பல்லவ ஆட்சியில் வெறுப்பு விருப்பு தனிப்பட்டமுறையில் சிறிதும் இல்லை. மேலும், பல்லவ ராஜ்யத்தின் மீது உங்களுக்கு இருக்கும் நாட்டம் அவர்களுடைய முயற்சிகளுக்கு உதவியாக அமைய முடியுமானால் அவர்களுடைய நட்பை நீங்கள் பெறுவதில் சிரமம் இருக்காதல்லவா? கொடும்பாளூர் தனிப்பட்ட சோழ ராஜ்யம் நிறுவுவதில் சிரத்தை காட்டுகிறது என்பது தானே உங்கள் யோசனை? என்னுடைய நட்பை நீங்கள் பெற்று விட்டதனால் அதைப் பற்றி நீங்கள் சிறிதும் யோசிக்க வேண்டாம்...'' என்றான் பூதுகன்.


பூதுகனுடைய இந்த வார்த்தை சிம்மவர்மனை மேலும் யோசனையில் ஆழ்த்தி விட்டது. ''ஆமாம். அது நல்ல யோசனை தான். ஆனால்...'' என்று இழுத்தான்.

''ஆனால் என்ன? சிம்மவர்மரே! அது விஷயத்தில் என்னுடைய பூரண ஒத்துழைப்பு இருக்குமா என்றுதானே யோசிக்கிறீர்கள்? உங்களுக்குச் சிறிதும் ஐயம் வேண்டாம். இந்தப் பூதுகன் என்றுமே தன் நண்பர்களைக் கைவிட்டதில்லை. அவன் நண்பர்கள் அவனிடம் எந்த நோக்கத்துடன் பழகுகிறார்களோ, அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்து வைப்பதில் அவன் உறுதுணையாயிருப்பான்!'' என்று கூறிப் பூதுகன் சிரித்தான். அந்தப் புன்னகை பொருள் பொதிந்து விளங்கியது.

''சரி, நான் பிறகு வந்து உங்களைச் சந்திக்கிறேன். ஒரு விஷயம் முக்கியம். நீங்கள் இங்கே தங்கியிருப்பது யாருக்கும் தெரியக் கூடாது. சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சிம்மவர்மன் அங்கிருந்து புறப்பட்டான்.

சிம்மவர்மன் சென்றதும் தேனார் மொழியாள் அங்கே வந்தாள். (தொடரும்)

செப்டம்பர் மாதப் தேர்த்



குடை ராட்டினம் சுழன்று கொண்டிருந்தது. தூரத்திலிருந்து அதைப் பார்க்க, பலவித வண்ணமுள்ள குடையொன்று அழகாகச் சுற்றிக் கொண்டிருந்ததைப் போல் இருந்தது. மெதுவாகவும் வேகமாகவும் கடைசியில் மெதுவாகவும் சுற்றி, ராட்டினம் ஒரு நிலையில் வந்து நின்றபோது பட்டாபி அதன் அருகே போய் நின்றான்.

பொம்மைக் குதிரைகளிலிருந்து தாவி இறங்கினார்கள் சிறுவர்கள். அவர்கள் நெஞ்சத் துணிவுள்ளவர்கள்!

ஆனால் 'பெரிய' குழந்தைகள் ராட்டினத்தின் நடுவில் அலுங்காமல் நலுங்காமல் இருக்கக் கூடிய ஊஞ்சல்களிலிருந்து அசட்டுச் சிரிப்புடன்கூட வெளிவந்து மெதுவாக நழுவினர்.

பட்டாபி பெருமூச்செறிந்து கொண்டு அந்த இடத்திலிருந்து திரும்பி வேறு திக்கில் மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

ஊரில் திருவிழா. அன்றைக்குக் காலையில் தேர்த் திருவிழா நடந்து முடிந்திருந்தது. இப்போது மாலையில், அதுவும் அந்தி மங்கலில், ஒலியும் ஒளியும் ஏக அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தன, கடைத் தெருவிலும் அதையொட்டியிருந்த மைதானத்திலும்!

குடை ராட்டினத்தைப் பார்க்க அவனுடைய குழந்தை பாகீரதி, மூன்றே வயதான பாகீ—ஆசைப்பட்டாள். "குழந்தையைத் தூக்கிக் கொண்டு போங்கள். ஜுரம் இப்போது விட்டிருக்கிறது. குழந்தைக்கு வேடிக்கை காட்டிக் கொண்டு, அப்படியே கடைத்தெருவில் இருக்கும் டாக்டரிடமும் பாகீரதியைக் காட்டி விடுங்கள்" என்றாள் கமலா, பட்டாபி புறப்படும்போதே.


பட்டாபி அப்போது கொஞ்சம் தயங்கினான். பாகீரதியையும் தூக்கிக் கொண்டு போவோமா என்று ஒருகணம் யோசித்தான். ஆனாலும் தனியாகவே காலாறச் சுற்றி விட்டு வருவது என்று தீர்மானித்து விட்டான்.

அன்று காலையிலிருந்தே கமலாவிடம் பட்டாபிக்குக் கோபம். மனைவியிடம் இருந்த கோபத்தைக் குழந்தையிடம் காண்பிப்பது அர்த்தமில்லைதான். குடும்பத்தில் பாசம்

போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

திருவிழா

க. பஞ்சாபகேசன்



என்பது ஒருவரை யொருவர் எப்படிப் பின்னிப் பிணைக்கிறதோ, அதேமாதிரிதான் கோபம் என்பது அந்தப் பிணைப்பை எப்படியாவது தளர்த்திவிட முயற்சி செய்கிறது. பெரியவர்கள் 'கோபம் பாபம்' என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்?

அன்று காலை நடந்த சம்பவம் பட்டாபியின் மனக் கண்முன் வந்து அரித்தது.

ஊரில் திருவிழாவென்றால் அந்த ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டவர் உள்ளத்திலும் திருவிழா நிலவுவது சகஜமே. அதிலும் அன்றைக்குத் தேர்த் திருவிழா. அகண்ட சச்சிதானந்த சொரூபனை ஆண்டவனையும், சர்வ சக்தியான அம்பிகையையும் பெரிய தேரில் வைத்து, அழகிய குஞ்சலங்களும் அலங்காரங்களும் சமர்ப்பித்து, பெரிய இரும்பு வடங்களைப் பிணைத்து இழுத்து வரும்போது, அந்த வடங்களுக்குக் கை கொடுக்கப் பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் பெருங் கூட்டம் வரும். அந்தச் சமயமென்று பட்டாபியின் வீட்டில் அபிப்பிராய பேதம் நிலவ வேண்டுமா?

குழந்தை பாகீரதி படுக்கையில் கிடந்தான். சாதாரணமாகவே அதிகமாகப் பேசி, அதிகமாகக் கேள்வி கேட்கும் குழந்தை அவன். இப்போது ஜுரத்தில் அவன் மூளை இன்னும் பிரகாசமாகவே வேலை செய்தது. பக்கத்தில் பட்டாபி உட்கார்ந்திருந்தான்.

அவர்கள் வீதி இலை வீதி. பெரிய வீதியில் மேளச் சத்தம் கேட்டது. துந்துபிகளின் நாதம் மெய்யைச் சிலிர்க்க வைத்தது. சங்குகளின் ஒலியும், தேர் இழுப்பவர்களின் உற்சாகக் குரல்களும் கேட்டன. பட்டாபி கேட்டான். பாகீரதி கேட்டான். சமையல் அறையில் காரியமாக இருந்த சுசீலாவுக்கும் கேட்டது. அவள் அப்படியே கைக் காரியத்தைப் போட்டு விட்டுக் கூடத்துக்கு வந்தாள். வரும் போதே ஜன்னல் வழியே வீதியைக் கவனித்துக் கொண்டேதான் வந்தாள். பக்

கந்து விட்டு, எதிர் வீட்டுப் பெண்கள் அலை வரும் புறப்பட்டுச் சாமி சாரியாகப் பெரிய வீதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது கலாவின் கண்ணில் பட்டது.

இதற்குள் குழந்தை பாரேதி பட்டாபியைக் கேட்டுக் கொண்டிருந்தாள் :

"ஏம்பா தேர் வந்திண்டிருக்கா ?"

"ஆமாம், கண்ணு! பெரிய வீதியிலே தேர் வந்து கொண்டிருக்கு."

"நாம் போய் அந்தத் தேரைப் பார்க்க வேண்டாமா, அப்பா ?"

"உனக்கு ஜுரமடிக்கிறதே, கண்ணு. அடுத்த வருஷம் சீக்கிரமா வந்துடும். அப்போது நீ இன்னும் நன்றாக வளர்ந்துடுவே. நீ ஒருத்தி வடத்தைப் பிடித்து இழுத்தால் போதும், தேர் தானாக நகர்ந்து விடும்!"

பட்டாபி இப்படிச் சொன்னதற்குக் குழந்தை கடகடவென்று சிரித்தாள்.

பின்னால் கலாவின் குரல் கேட்டது.

"சாதம் கொதிக்கிறது. கொஞ்சம் பார்த்துக் கொள்கிறீர்களா? தேரைப் பார்த்து



விட்டு வந்து விடுகிறேன்." பட்டாபி அவள் பக்கம் திரும்பினான்.

"உனக்கு அது முக்கியமா இப்போ?"— அர்த்தமற்ற அனாவசியமான கேள்வி.

"இதென்ன தர்க்கம் இப்போது? ஸ்வாமியைத் தரிசித்து விட்டு தொடிப்பொழுதில் வந்து விடுகிறேன் !"—இது கலா.

"குழந்தையை விட ஸ்வாமி முக்கியமில்லை !" என்றான் பட்டாபி.

"அவளைத்தான் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே. நல்ல நாளும் பெருநாளுமாய்த் தேங்காய், பழம்தான் நைவேத்தியம் செய்ய முடியவில்லை. தரிசனம்கூட..."

"குழந்தை பார்க்காத தேர் நமக்கு எதற்கு ?" என்றான் பட்டாபி.

"உங்களுக்கு எப்பொழுதுமே குறுக்கு வழிதான் தெரியும். இந்தக் குதர்க்கம் எனக்குப் புரியவில்லை !" என்றாள் கலா. தேர் அந்தக் கீழ வீதியின் வாசலில் நின்று கொண்டிருந்ததால், இப்போது போனால்தான் போனது என்ற படபடப்பில் கலாவின் குரல் அவசரக் கோலத்தின் சித்திரமாக இருந்தது.

"குதர்க்கமும் இல்லை, ஒன்றுமில்லை. பேசாமல் உள்ளே போய் உன் காரியத்தைப் பார். குழந்தைக்கு உடம்பு சரியாய்ப் போனபிறகு, இரண்டு நாட்கள் கழித்துக் கோயிலுக்குப் போய் ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் அர்ச்சனை பண்ணிக் கொண்டு வந்தால் போயிற்று" என்றான் அவன்.

வெளிவீதி மூலையில், பெரிய வீதியின் வாசலில் துந்துபி முழக்கம் பெரிதாகக் கேட்டது. அடுத்து 'அரோகரா' என்று வடம் பிடித்தவர்களின் குரல்கள்; தேர் நகர்ந்து விட்டது. இங்கு கலா இதயத்துள் ஆழ்ந்த ஆக்ரோஷமான கோபத்துடன் சமையல் அறைக்குள் போனாள். குடும்பத் தேரின் வடத்தைக் கணவனும் மனைவியுமாக அந்த நிமிஷத்தில்... கொஞ்சம் புரட்டிப் போட்டார்கள்.

வேறு நாட்களாக இருந்திருந்தால், ஊர் நன்றாக இருட்டியிருக்கும் அப்போது. ஆனால் அன்றைக்குப் பிரதம திருவிழா நாள்; கடைத் தெரு, ஒளிகளின் நடுவே மாயா உலகமாக இருந்தது. பட்டாபி நினைவுகளிடையே நடந்து கொண்டிருந்தான்.

'குழந்தை இல்லாமல் நமக்கென்ன தேர்த் திருவிழா' என்று சொன்னவன் இப்போது இப்படித் தனியே கிளம்பியதேன்?

அன்றைக்குக் காலை பதினொரு மணிக்குத் தேரும் அதன் விழா ஒலிகளும் மறைந்திருந்து. பட்டாபியின் இல்லத்தில் அவற்றைப் பார்க்காத பொருமல்கள் மட்டும் மறையவில்லை.

சுமார் பகல் பன்னிரண்டு மணிக்குப் பட்டாபி சாப்பிட உட்கார்ந்தான். சிப்பல் தட்டு நிறையத் தும்பைப் பூவைப் போன்ற அன்னத்தைக் கலா ஏந்தி வந்தாலும் ஊரெல்லாம் திருவிழாவின் நிறைவில் கலந்து இருந்தாலும், அவனது உள்ளத்தில் சூன்யம் நிறைந்திருப்பதைப் போலிருந்தது.

"பாரேதிக்கு என்ன கொடுத்தது?"-குழம்புச் சாதத்தைப் பிசைந்து கொண்டே கேட்டான் பட்டாபி. 'என்ன கொடுத்தாய்?' என்று கேட்காமல் 'கொடுத்தது' என்று கேட்டதிலிருந்து அவனது கோபம் இன்னும் தணியாதது தெரிந்தது.

இந்தக் குதர்க்கம்தான் கலாவின் மனத்திலும் முதலில் பட்டது. பட்டாபி கேட்டதற்குப் பதிலாக வந்த அவளது குரல் கம்மியிருந்தது; அந்த அடக்கம் பின்னால் வரவிருந்த புயலுக்கு அறிகுறியாக இருந்தது.

"கஞ்சி சாப்பிட்டாள்." — பொதுப்படையான பதில்தான்.

"கரைத்து ரஸம் சாதம் கொடுத்திருக்கலாம்" என்றான் அவன்.

"ஜுரமடிக்கிற உடம்புக்குச் சாதம் கொடுக்கலாமா?"

"பெரிய டாக்டரைப் போல்தான் பேசுகிறது"—இந்த வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்தான் பட்டாபி.

இதனால் விளைந்த வேதனையைச் சற்றுப் பொறுத்திருக்கலாம் கலா. அது அவளால் முடியவில்லை; ஆங்காரம் என்ற தேர் அவள் உள்ளத்தில் எந்தப் பலமான வடம்கொண்டு

இழுத்தாலும் தகராதபடி தங்கூரம் பாய்ச்சி யிருந்தது அப்போது. 'பட்'டென்று பதில் சொன்னாள் அவள்.

"டாக்டர் என்று யாராவது குழந்தையைப் பார்த்துத்தானே ஆக வேண்டும்?"

பட்டாபி தலை நிமிர்ந்தான். பால்மயமான அவனது மேனி சிவந்துகொண்டு வந்திருந்தது.

"சாதாரண சின்ன ஜுரத்துக் கெல்லாம் டாக்டரிடம் ஓட முடியுமா?"

"உங்களை யாராவது ஓடச் சொன்னார்களா? குழந்தையிடம் உங்களுக்கு இருக்கும் கரிசனம்தான் தெரியாதா?"

"கமலா!"

"ஆத்திரப்பட வேண்டாம். ஏழுமலையானுக்கு இசைந்து முடிந்து வைத்திருக்கிறேன் நான். அவளுக்கு ஒன்றும் ஆகிவிடாது......"

—இதைச் சொல்லி முடிக்கு முன்பே கமலாவின் விழிகளில் நீர் நிரைமிட்டு விட்டது. காலையிலிருந்து பாரதி தயிர் சாப்பிடவில்லை. அவளுக்கு ஊற்றப்பட்ட மோர் கெட்டியாக இருந்தது. அதைக் குனிந்து கமலா பரிமாறிய போது அவளது கண்ணீரைக் கண்டான் பட்டாபி. கைகளை உதறிவிட்டுக் கொண்டான்.

"இப்போது குழந்தைக்கு என்ன ஆகிவிட்டது. நீ இப்படி மருளுவதற்கு? பாரதியை விட்டு விட்டுத் தேர் பார்க்கப் போகிறேன் என்றாயே, உன் கரிசனம் எத்தனை தூரத்துக்கு இருந்தது?...எனக்குச் சோறும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்!" என்று அவன் மோர் சாதத்தை அப்படியே வைத்து விட்டு இலையை விட்டு எழுந்து விட்டான்.

பட்டாபி அரைச் சாப்பாடு சாப்பிட்டான். கமலாவோ முழுப் பட்டினி இருக்கத் தீர்மானித்து விட்டாள். பட்டாபி கைகழுவிக் கொண்டு கூடத்துக்குப் போன கையோடேயே, சமையல் பாத்திரங்கள் எல்லாவற்றையும் மூடிவைத்து விட்டு, அறையை இழுத்துத் தாளிட்டு விட்டுக் கூடத்துக்கு வந்து விட்டாள் அவளும்.

கூடத்தில் பாரதி தன் கட்டிலுக் கருகில் அமர்ந்த தந்தையிடம் "சாப்பிட்டாயா, அப்பா!" என்று கேட்டாள்.

"சாப்பிட்டேன் கண்ணு...!"

"என்ன சமையல், அப்பா!"

பாரதிக்குத் தினமும்இது ஒருகேள்வி! தினமும் அவள் அம்மாவைப் பெரிய அதிகாரத் தோரணையுடன் கேட்டாள். இன்றைக்கு அப்பாவைக் கேட்டாள்.

"புடலங்காய்க் கறி, முருங்கைக் காய்க் குழம்பு பண்ணியிருக்கிறதுடா, கண்ணு!"

"என்ன அப்பா இது.. எனக்கு உடம்பு சரியாயில்லாத போது முருங்கைக் காய் பண்ணியிருக்கிறாளே இந்த அம்மா!"

"உனக்கு உடம்பு சரியாய்ப் போன உடனேயே பண்ணச் சொல்கிறேன், பாரதி!"

அதே சமயம் கமலா குழந்தை அருகில் வந்து அவள் கன்னத்தைத் தொட்டுப் பார்த்தாள். ஜுரம் நன்றாகக் குறைந்திருந்தது.

பாரதி கேட்டாள்:

"ஏனம்மா, சாப்பிடவில்லை?"

"சாப்பிடலை, கண்ணு! பசி இல்லை; அப்புறமா சாப்பிடுவேன். நீ கண்ணை மூடிக் கொண்டு கொஞ்சம் தூங்கு!"—ஆச்சரியம், கமலா சொன்னவுடன் பாரதி அன்றைக்குக் கேட்டு விட்டாள்; கண்ணை மூடிக்கொண்டு தூங்க ஆரம்பித்தாள்.

மத்தியானம் மணி இரண்டிருக்கும். அது காப்பி வேளை. பட்டாபி அறையில் ஏதோ புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான். மேஜை மேல் கமலாவின் இரண்டு ஜோடி தங்க வளையல்கள் கிடந்தன. பாரதி தூங்கிய கையோடேயே கமலா பட்டாபியின் அறைக்கு வந்து, ஒன்றன் பின் ஒன்றாய் அந்த நான்கு தங்க வளையல்களையும் தன் கையிலிருந்து கழற்றி வைத்திருந்தாள்.

பட்டாபிக்கு ஒன்றும் புரியவில்லை.

"இது என்ன?" என்று கேட்டான்.

"ஆறு மாதங்களுக்கு முன்னால் என் சங்கிலியைப் பாங்கியில் கொண்டு போய் வைத்தீர்களே, அதை மீட்டுத் தருகிறவரை இதுவும் எனக்கு வேண்டாம்."

"நீ என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய், கமலா? ஒன்று கிடக்க ஒன்று செய்



கிறாயே! காலையிலிருந்து புத்தி ஏதாவது உனக்கு மழுங்கிப் போய் விட்டதா!"

"எனக்கு வேண்டாம், அவ்வளவுதான்!"

"இப்போது திடீரென்று அதை மீட்க என்னிடம் பணம் இல்லையே?"

"உங்களுக்குத்தான் புரட்டிப் புரட்டி திரவு வது பழக்கமாயிற்றே! ஏதாவது செய்து என் சங்கிலியை மீட்டுத் தாருங்கள். உங்களைச் சும்மா விட்டால், சும்மாவே இருந்துவிடுவீர்கள். அப்புறம் என் கழுத்திலும் ஒன்றும் இருக்காது; என் பாரதியின் கழுத்துக்கும் ஒன்றும் வராது!"

"கமலா!"

"கோபம் வருகிறதைப் பார்! இது ஒன்று தான் மிச்சம்!" என்று கூறிவிட்டு அறையை விட்டு வேகமாகப் போய் விட்டாள் கமலா. நாலு தங்க வளையல்களும் மேஜைமேல் மினு மினுத்துக் கொண்டிருந்தன.

புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே யிருந்தான் பட்டாபி. மணி இரண்டு அடித்து விட்டது. காப்பி வேளை. வளையம் வளையமாக நான்கு தங்க வளையங்களும் மேஜை மேலிருந்து கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தன. குடும்பத் தேரின் சக்கரங்கள் அங்கே நாலு வளையங்களாகக் கழன்று விழுந்திருந்தாற் போன்ற பிரமை பட்டாபிக்கு ஏற்பட்டது.

பின்னால் சலசலப்பு, கமலா கையில் காப்பியுடன் வந்து அவற்றை மேஜையின்மேல் வைத்தாள். அங்கிருந்து போக யத்தனித்தாள். பட்டாபியின் குரல் அவளை மறித்தது:

''நீ சாப்பிட்டாயா?''

''..........''

''என்னோடு பேச வேண்டியதில்லைதான்: இப்படிச் சாப்பிடாமல் பட்டினி கிடந்தால் உடம்புக்கு நல்லதில்லை. சாப்பாட்டுக்கும் சண்டைக்கும் என்ன சம்பந்தம்?''

''தேர் பார்ப்பதற்கும் குழந்தை உடம்புக்கும் எத்தனை சம்பந்தமோ அத்தனை சம்பந்தம்'' என்று 'பட்'டென்று சொன்னாள் கமலா.

''இவ்வளவு பிடிவாதம் கூடாது.''

''உங்கள் பொறுப்பை ஞாபக மூட்டுகிறேன்'' என்றாள்.

''பொறுப்பு. என்னைவிட என் பொறுப்புக்கு மதிப்பு உண்டா? அந்தப் பொறுப்பிலிருந்து வரக்கூடிய சங்கிலிக்குத்தான் என்னை விட அதிக மதிப்புண்டா?''

''நல்ல குடும்பம் நடத்துவதென்றால் இவையெல்லாம்தான் லட்சியம்.''

''வாயை மூடு! எனக்குத் தெரியும்.''

கமலா அங்கிருந்து போய்விட்டாள். அப்புறம் நேரம் ஓடியது. சாயங்காலம் அணைந்து வந்தது. பட்டாபி வெளியே போகப் புறப்பட்டான். பாரதியின் ஜுரம் அப்போது நன்கு விட்டுப்போய்க் குழந்தை உடம்பெல்லாம் வேர்த்திருந்தது. 'நான் போய்வரட்டுமா?' என்று பாரதியை அவன் கேட்டதற்கு, குழந்தையும், 'சரி, அப்பா! போய் விட்டுச் சீக்கிரம் வந்துவிடு. வருகிறபோது எனக்கு ஏதாவது பொம்மை வாங்கிண்டு வருகிறாயா?' என்று உத்தரவு தந்தாள். குழந்தையின் மிருதுவான உள்ளங்கையை முத்தமிட்டு விட்டுப் பட்டாபி புறப்பட்டான், திருவிழாவும் ஒளி, ஒலியுமாக இருந்த கடைத் தெருவுக்கு.

பாரதியைத் தூக்கிக்கொண்டு போகும்படியும், வேடிக்கை காட்டிக் கொண்டே கடைத் தெருவிலிருக்க டாக்டரிடம் காட்டிவிட்டு வரும்படியும் கமலா அவன் வாசல்படியில் காலை வைத்தபோது சொன்னாள். காலாற மட்டுமல்ல, மனமாறவும் நடக்க விரும்பினானல்லவா அவன்? நடந்து விட்டான்.

இப்போது பட்டாபி கடைத் தெருவின் நட்ட நடுவுக்கு வந்து விட்டான். நேரே டாக்டர் வீடு. வீட்டில் டாக்டர் இல்லை என்பதற்கு அறிகுறியாகக் கதவு பூட்டப்பட்டிருந்தது. குழந்தையை அழைத்து வந்திருந்தாலும் டாக்டரிடம் காட்டியிருக்க முடியாது. அதில் ஒரு திருப்தி.

பட்டாபியின் பார்வை அடுத்தபடியாக, நேர் எதிரே, சற்றுத் தொலைவில், கடைவீதி முகப்பில் கோயில் மதில் சுவரை யொட்டி நிறுத்தி யிருந்த தேரின்மேல் சென்றது.

வண்ணக் குஞ்சலங்கள் அசையத் தேர் அங்கே நின்று கொண்டிருந்தது. சற்று அலங்காரங்கள் எதுவும் இன்னமும் கலைக்கப்படவில்லை. உள்ளேயிருந்த உற்சவமூர்த்தியைத்தான் கோயிலுக்குள் அவரது யதாஸ்தானத்துக்கு அழைத்துப் போயிருந்தார்கள்.

இனி அந்தத் தேர் அடுத்த வருஷம்தான் அசையும். பட்டாபியின் உள்ளத்தில் ஏதோ பெரும் பாரம் ஒன்று அசைந்து கொடுத்தாற் போலிருந்தது. இலகுவாக ஓர் எண்ணத்தோடு பெருமூச்சு விட்டான் அவன். 'இருந்தாலும் கமலாவைத் தேர் பார்க்க அனுமதித்திருக்கலாம்.'

மறுபடியும் டாக்டர் வீட்டு வாசலைப் பார்த்தான். திறந்திருந்த அந்த வெளி வாசல் திண்ணையில் ஒரு பொம்மைக்கடை:

பாரதியின் குரல் பட்டாபியின் அகத்தில் 'பொம்மை வாங்கிவா' என்று அறைகூவியது:

அருகில் போனான். கிளியும் குருவியும் குன்றும் மனிதனும் மிருகமுமாக எத்தனையோ மண் பொம்மைகள், மரப் பொம்மைகள்! பார்வை அனைத்தையும் அளாவிக்கொண்டே வந்த சமயத்தில் ஓரத்தில் ஒரே வரிசையில் வைத்திருந்த மரத் தேர்களில் சென்று நின்றது பட்டாபியின் அந்தப் பார்வை!

ஒரு மரத்தேரை விலைபேசி வாங்கிக் கொண்டான் பட்டாபி. குழந்தை பாரதி இலகுவாக அதைப் பிடித்து இழுக்க அதோடு ஒரு சன்னக் கயிறையும் வாங்கிப் பிணைத்துக் கொண்டான். வேகமாக வீட்டை நோக்கி நடந்தான். அவன் கையிலிருந்த அந்த மரத்தேர் அவன் உள்ளத்தின் பாரத்தை வெகுவாகக் குறைக்க மந்திர சக்தியைப் பெற்றிருந்தது.


பொம்மை எந்த வடிவத்தில் இருந்தால் என்ன, ஒரு குழந்தைக்குப் பொம்மை, பொம்மைதானே! தேரைக் கண்டதும் பாரதி சந்தோஷத்தால் குதித்தாள். பிறகு அவளுக்குப் படுக்கை கசந்தது. கூடத்து வழுவழுப்பான சிமிட்டித் தரையில், சுற்றிச் சுற்றித் தேரை இழுக்க ஆரம்பித்து விட்டாள்.

சமையல் அறையிலிருந்து வந்த கமலாவுக்கு மரத்தேரைப் பார்த்ததும், முகத்திலிருந்த கடுமை உடனே மாறியது. தேரைப் பார்த்துமட்டு மல்ல, பட்டாபியைப் பார்த்தும் புன்னகை புரிந்தாள்.

''அம்மா! நீயும் கயிற்றைப் பிடிச்சுக் கொள்'' என்று அழைத்தாள் பாரதி. கமலா சிரிப்போடேயே குழந்தையின் கையை அணைத்துக் கொண்டே கயிற்றைப் பிடித்துக் கொண்டாள்.

''அப்பா, நீயும்!'' என்றாள் பாரதி அடுத்தபடி. பட்டாபி சற்றும் தயங்காமல் கமலாவின் கரத்தை யொட்டினாற் போல் கயிற்றைப் பிடித்துக் கொண்டான்.

மூவரும் சேர்ந்தாற்போல் தேரை இழுக்க ஆரம்பித்தார்கள், சிரிப்புக்கும் கும்மாளத்துக்குமிடையே. டாக்டர் வீட்டு வாசலில் கிடைத்த அந்தப் பொம்மைத் தேரால் மேற்கொண்டு அவர்கள் குடும்பத் தேர் சுமுகமாக முன்னேறிச் சென்றது.


நல்ல தேநீர் தயாரிக்க புதிய நீரை
உபயோகியுங்கள்
உபயோகிக்கும் நீர் புதியதாக இல்லாவிட்டால்—தேநீர் அதன் எல்லா நல்ல குணங்களையும் இழந்துவிடும்.
ஐந்து முக்கிய விதிகளை பின்பற்றுங்கள்
நட்பின் சின்னம்





நம்மில் பலருக்கு ரொம்ப நாட்களாக ஒரு குறை உண்டு. 'இந்திப் படங்களிலிருந்து கதை, பாட்டு இப்படி ஒன்று விடாமல் நம் பட முதலாளிகள் காப்பி அடிக்கிறார்களே, பதிலுக்கு இந்திப் படாதிபதிகள் நம் படத் தயாரிப்பாளர்களை ஏதேனும் ஒரு விதத்திலாவது பின்பற்றக் கூடாதா?' என்பதுதான் அந்தக் குறை. டைரக்டர் வி. சாந்தாராம் அந்தக் குறையை நிவர்த்தி செய்து வைத்திருக்கிறார். நேயர்கள் மலைக்க வேண்டாம். தாங்கள் தயாரிக்கும் படங்களுக்கு வெகு நீளமான பெயர்களை வைப்பதில் தமிழ்ப் படாதிபதிகளுக்கு அனாதி மோகம். நம்மவரின் அப்பழக்கத்தைப் பின்பற்றிச் சாந்தாராம் தமது படங்களுக்கு நீண்ட பெயர்களைச் சூட்டி வருவதையே குறிப்பிடுகிறேன்.

'அடி, உதை இவை உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான்' என்ற பழமொழிதான் சரி என்ற அபிப்பிராயம் கொண்டவர்கள் ஒரு சாரார். 'அம்பு சாதிக்க முடியாததை அன்பு சாதிக்கும்' என்ற புது மொழியில் நம்பிக்கை கொண்டவர்கள் பலர். அப்படிப்பட்ட நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட லட்சியவாதியின் வாழ்க்கைச் சித்திரம்தான் சாந்தாராமின் தோ அங்கே பாரா ஹாத் (கண்கள் இரண்டும் கைகள் பன்னிரண்டும்) என்ற இத் திரை ஓவியம்.

"சிறைவாசமும், 'லத்தி' அடிகளும் குற்றவாளிகளைத் திருத்திவிட மாட்டா. அதற்கு மாறாக, குற்றவாளிகளை நன்கு புரிந்து கொண்டு, அவர்களிடம் கருணை காட்டி, அன்பு செலுத்தி, அவர்களை நல்ல வழியில் கொண்டு சென்றால் அவர்களையும் மனிதர்களாக்க முடியும்" என்ற அழியாத நம்பிக்கை கொண்டவர் ஜெயிலர் ஆதிநாத். அவரது இந்த நம்பிக்கை பலரை நகைக்க வைக்கிறது; மேலதிகாரியின் கேலிக்கும் கண்டனத்துக்கும்கூட அவர் ஆளாகிறார். ஆனாலும் அவர் கொள்கையைச் சோதித்துப் பார்க்க அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

கொலையும், கொள்ளையும் ரத்தத்தில் ஊறிப் போன, சிறைத் தண்டனை அனுபவித்து வரும், ஆறு ரௌடிகள் அவர் காவலில் ஒப்படைக்கப் படுகின்றனர். ஜெயிலர் அவர்களைச் சீர்திருத்தும் முயற்சியில் இறங்குகிறார். அழிக்கும் வேலை செய்து வந்த அவர்கள் கைகளை ஆக்க வேலையில் திருப்புகிறார். திருந்தி வரும் அவர்களிடம் நடுநடுவே பழைய குணம் தலைதூக்க, அவர்கள் வேங்கையாக மாறுகிறார்கள். அப்பொழுது தெய்வமாம் ஜெயிலர் தமது கருணைக் கண் வீச்சினால் அவர்களைப் பசுவாக்கி விடுகிறார். இறுதியில் தம் லட்சியத்திலே வெற்றி கண்ட வீரனாக-ஒரு மனித மிருகத்தின் ஏவலால் தூண்டிவிடப்பட்ட ஒரு கொடிய காளையுடன் போராடி-தம் கண்களை மூடிவிடுகிறார். கருணை நிறைந்த கண்கள் இரண்டு, ரத்தக்கறை படிந்த கைகள் பன்னிரண்டை, அதாவது ஆறு கொலைக் குற்றவாளிகளைத் திருத்தி விடுகிற முக்கிய நிகழ்ச்சியையே படத்துக்குப் பொருத்தமான தலைப்பாக தோ அங்கே பாரா ஹாத் என்று அமைத்திருக்கிறார் சாந்தாராம்.

குற்றவாளிகள் சீர்திருத்தம் பற்றிப் பலவித விவாதங்கள் எழும்பியுள்ள இச் சமயத்தில், அந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்டுவது போல் அமைந்திருக்கிறது இப்படம். படத்தில் காதல் கிடையாது; நடனம் என்று ஒன்று தனியாகக் கிடையாது. அது மட்டுமா? ஒரு புரட்சி என்றுகூடச் சொல்லலாம். படத்தில் இரண்டே இரண்டு பெண்கள்தான் வருகிறார்கள். அதிலும் ஒருத்திதான் வேலைப் பெண். மற்றொருத்தி கைதிகளில் ஒருவரின் மகள்தான். அதனால் படம் அலுப்புத் தட்டிவிடவில்லை. ஹாஸ்யம் என்பதற்காகத் தனியே ஒரு கதாபாத்திரம் கிடையாது. படத்தில் ஹாஸ்யம் இல்லாமலும் போகவில்லை.

படத்தின் பெயர்தான் நீளமே தவிர, படத்தின் நீளம் ஒன்றும் அதிகமில்லை. 14,665 அடிகள்தான். படத்தின் விறுவிறுப்பான ஓட்டம் காரணமாக இந்த நீளமும் தெரிவதே இல்லை. கோவிந்தாக்காரன் மாதிரி, பொம்மைக்காரி கீழே படுத்து உருளும் போது மட்டும், "இவளுக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? அல்லது ஆவேசம் வந்து விட்டதா?" என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த ஒரு இடத்தைத் தவிர, மற்றப்படி தங்கு தடையின்றிச் சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக விறுவிறுப்பாக ஓடுகின்றன.

நடிகர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்களா? இல்லை. உண்மையான குற்றவாளிகளும் ஜெயிலரும் கதாபாத்திரங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனரா? என்று நினைக்க வேண்டியிருக்கிறது. சிறுவர்களான கோவிந்த் - கோபால் முதல் ஜெயிலர் வரை ஒவ்வொரு கதா பாத்திரமும் உயிருடன், உணர்ச்சித் துடிப்புடன், உயர்ந்த பாவத்துடன் மிக இயற்கையாக இருக்கின்றனர்.

இடி இடிப்பதுபோல் அடித்தொண்டையிலிருந்து கத்தி, எதுகை மோனைகளோடு வசன மழை பொழிவதுதான் நடிப்பு என்று நினைப்பவர்கள் சாந்தாராமின் நடிப்பைப் பார்த்து, 'உண்மை நடிப்பு என்றால், என்ன?' என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஜெயிலராக நடிக்கும் அவர், படத்தில் ஒரு இடத்திலாவது ஒரு வார்த்தைகூட இரைந்து பேசவில்லை என்பது மட்டுமல்ல; அவர் வாய் திறந்து அதிகம் பேசவே இல்லை! ஆனால் அவருடைய கண்கள் பேசின. கை விரல்கள் பேசின. அவருடைய ஒவ்வொரு அங்க அசைவும் பேசின. தம் முகபாவத்தின் மூலம், செய்கை மூலம் நடிப்புக் கலையின் சிகரத்தை எட்டிப் பிடித்து விடுகிறார்.

போலீஸ் அதிகாரி வந்து பார்க்கும் போது ஆறு கைதிகளோடு சேர்ந்து 'சாந்தாராம்' என்று அவர் தம்மை சொல்லிக் கொள்ளும் அந்தக் கட்டம், "குகனொடு ஐவரானோம்" என்று ராமாயணத்தில் ராமன் குறிப்பிட்ட கட்டத்தை நமக்கு நினைவூட்டுகிறது. ஒரு சமயம், ஐந்து ரௌடிகள் ஓடி விடுகின்றனர். அவர்களைத் தேடி, அவர்கள் பெயரைக் கூவியபடி அவர் ஓடும் கட்டம் மெய்சிலிர்க்க வைக்கிறது. அடிபட்டு மயக்கமுற்றுக் கிடக்கும் ரௌடிகள், தன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, அஹிம்சை முறையைக் கையாண்டார்கள் என்பதை அறிந்ததும், 'சபாஷ்' என்று கூறி அவர்களை ஜெயிலர் அணைத்துக் கொள்ளும் சமயம், 'சபாஷ், சாந்தாராம்!' என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ரௌடிகள் ஆறு பேரில் யார் நன்றாக நடித்தார் என்று பிரித்துக் கூறுவது சிரமம்; அவர்கள் ஜெயிலரிடம், "பாபுஜி! பாபுஜி!" என்று குழையும்போது நம் மனமும் நெகிழ்ந்து விடுகிறது.

தங்கள் தவற்றை உணர்ந்து அவர்கள் 'பாபுஜி'யிடம் மன்னிப்புக் கோரும் உணர்ச்சி மிக்க கட்டத்தை யாரும் மறக்கவே முடியாது. ஓடிப்போனவர்கள் திரும்பி வந்து, 'பாபுஜி'யிடம் ஒரு கழியைக் கொடுத்து "நன்றாக அடியுங்கள் பாபுஜி" என்று கூறித் தலை குனியும் சந்தர்ப்பத்திலும், படத்தின் இறுதியில் 'பாபுஜி'யை இழந்த அவர்கள் வானை நோக்கி மனம் கனிந்து சபதம் எடுத்துக் கொள்ளும் கட்டத்திலும் அவர்களின் நடிப்பு உச்ச நிலையை எட்டிப் பிடித்து விடுகின்றன.

'டபடபா' வண்டியும், தலையில் பொம்மைக் கூடையும், கையில் கொட்டாங்கச்சி பிடிலுமாகக் காட்சி அளிக்கும் குறும்புக்காரப் பொம்மைக்காரி சந்தியாவின் நடிப்பு பிரமாதம். 'பாபுஜி'யைத் தாக்க வந்த ரௌடிகளிடம், "நீங்கள் மனிதர்களா! போடுங்கள் ஆயுதங்களைக் கீழே" என்று அவர்களைக் கண்டிக்கும்போதும், 'பாபுஜி' என்று அலறிச் சுவரில் முட்டிக் கொள்ளும் சந்தர்ப்பத்திலும் அவரது அபார நடிப்புத் திறமை வெளிப்படுகிறது. 'தகதகா தாம்தாம்' என்று அவர் பாடி ஆடும்போது, கூடவே குழந்தைகளும்,



ரௌடிகளும் ஆடுவதில் என்ன அதிசயம்! கொட்டகையில் படம் பார்ப்பவர்கள் கூட அல்லவா ஆடாமல் ஆடுகிறார்கள்.

படத்தின் ஆரம்பத்தில், ரத்தம் தோய்ந்த பதினொரு கைகளில் நடிகர்கள்-கலை நிபுணர்கள் பட்டியலைக் காட்டி, பன்னிரண்டாவது கையில் படத்தை ஆரம்பிக்கும்போதே டைரக்டரின் திறமை ஆரம்பமாகிவிடுகிறது. அது முதல் படத்தின் முடிவில் மேகத்திடையே இரு கண்கள் தோன்றுவது வரை, படத்தின் ஒவ்வொரு அடியிலும் சாந்தாராமின் கலைத் திறமை பளிச்சிட்டு மின்னுகிறது. டைரக்ஷனின் திறமைக்கு ஒரு சில உதாரணங்கள்: 1. சிறைவாசத்தினால் மட்டும் குற்றவாளிகளைத் திருத்திவிட முடியாது என்பதைச் சொல்லச் சிறையின் பெரிய பூட்டை ஆட்டிவிட்டுப் போவது. 2. இரவுப் பொழுது கழிவதை விளக்க, சிறைக் கம்பிகளிடையே விழும் நிலா வெளிச்சம் படிப்படியாகக் குறைந்து மறைவது. 3. ரௌடிகள் ஓரளவு திருந்திவிட்டனர் என்பதை விளக்க அவர்கள் கைகள் பதித்த காகிதத்தை இரண்டாகக் கிழித்தல்; பிறகு, அவர்கள் பூரணமாகத் திருந்திவிட்டனர் என்பதற்கு அறிகுறியாக அந்தக் காகிதத்தை நெருப்பிலிடுதல்.

படம் முழுக்க முழுக்கச் சிறப்பாக இருப்பதால் மேலே ஒன்றும் கூறாமல் இருப்பதே நல்லது. சுருக்கமாகச் சொன்னால் கண்கள் படைத்த அனைவருமே பார்க்க வேண்டிய ஒரு உணர்ச்சிச் சித்திரம் இந்தப் படம். முக்கியமாக, போலீஸ் இலாகாவினர் அவசியம் பார்க்கத் தகுந்த படம். கைதிகளும் மனிதர்கள்தான்; அவர்களும் மனம் மாறிச் சிறந்த குணம் படைத்த உத்தமர்களாக மாறிவிடுவார்கள் என்பதற்கு இந்தப் படம் ஒரு சிறந்த அத்தாட்சி. — ஜாம்பவான்

படித்துப் பாருங்கள்

வெள்ளிவிழா மலர் 1957 (மாணவர் மன்றம்)

இருபத்தைந்து ஆண்டுகளாக சென்னை மாணவர் மன்றம் திறமையோடு பணியாற்றி வருகிறது. கல்லூரி மாணவர்களும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், ஏனைய பள்ளி மாணவர்களும், தமிழ் மொழியிலும், கட்டுரை கவிதை, பேச்சு, ஓவியம், இசை முதலிய அனைத்திலும் சிறந்தவராக முன் நின்று விளங்கப் பல தேர்வுகளும், போட்டிகளும் ஆண்டுதோறும் நடத்திப் பொற் பதக்கங்களும், வெள்ளிப் பதக்கங்களும், சிறந்த நூல்களுமாகப் பல பரிசுகள் வழங்குகின்றனர். தக்கவாறு சான்று இதழ்களும் வழங்குகின்றனர்.

இந்த மாணவர் மன்றத்தைத் துவங்கி, சிறப்பாக நடத்தி முன்னணிக்குக் கொண்டு வந்த பெருமை முழுவதும் பேராசிரியர் மயிலை சிவ. முத்துக் குமாரசாமி முதலியார் அவர்களையே சாரும். இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு எய்திய இந்த மன்றத்தின் சார்பில் இம்மலர் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பேராசிரியர்களான டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் மா. ராசமாணிக்கனார், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை முதலிய அறிஞர் பெருந்தகையாளர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஏராளமாகக் கொண்டு மலர் இலக்கிய மணம் வீசுகிறது. மலர் கிடைக்குமிடம்: மாணவர் மன்றம், 17, இரத்தின முதலித் தெரு, சென்னை—1.

ஸ்ரீ சங்கர பகவத் பாத விஜயம்
ஸ்ரீ நிர்மலானந்த சரித்திரம்
ஸ்ரீ தேவி சிவ மானஸ பூஜா

அத்வைத சித்தாந்தத்தை நிலைநாட்டிய ஆதி சங்கரரின் சரித்திரத்தை வெகு சுருக்கமாகவும், எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய நிலைமையிலும், பண்டித பி. என். நாராயண சாஸ்திரிகள் எழுதி யுள்ளார்கள். அதோடு ஆதிசங்கரர் இயற்றிய நூல்கள் சம்பந்தமான குறிப்பும், அவற்றின் பெருமையும் நன்கு சித்திரிக்கப் பட்டிருக்கின்றன.

ஆதிசங்கரர் இயற்றிய தேவி மானஸ பூஜை, சிவ மானஸ பூஜை முதலிய சுலோகங்களைத் தமிழ் அர்த்தத்துடன் நல்ல முறையில் வெளியிட்டுள்ளார்கள். நிர்மலானந்த சுவாமிகளின் வாழ்க்கையையும் ஒரு தனிச் சிறு நூலாக இயற்றியுள்ளார்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அனுக்கிரகத்தோடு வெளிவந்துள்ள இந்த நூல்களை ஆஸ்திக மக்கள் அனைவரும் படித்துப் பயன் பெறக் கூடும்.

பிரசுரம்: ஸ்ரீ கருணானந்த மண்டலி, நெ. 1, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை-17. விலை முறையே அணா 8, 4, 2.

கோகுலச் செல்வன்

சிறுவர், சிறுமியர்களுக்குக் கிருஷ்ணபரமாத்மாவைப் பற்றிய வரலாற்றை வெளியிடுவதன் மூலம், இந்நூலாசிரியர் நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர் அவர்கள் பகவத்கீதையின் கருத்துக்களை எளிய முறையில் வெளியிடும் சிறந்த காரியத்தையும் செய்திருக்கிறார்.

கண்ணன் அவதாரத்தில் துவங்கி, பாரத யுத்தம், கீதோபதேசம் முதலியவற்றை யெல்லாம் எடுத்துக் கூறி, பரமாத்மா பூதவுடலை உதறியது வரையில் கூறி நூலைப் பூர்த்தி செய்திருக்கிறார். நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர் அவர்கள் ஞான மார்க்கத்திலும் இலக்கியத் துறையிலும் ஆங்கிலத்தில் பல நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இப் புத்தகமும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதுதான். ஸ்ரீ த. நா. சேனாபதி அழகாகத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். சிறுவர் சிறுமியர்களுக்கும் பெரிதும் பயன்படும் நூல் இது.

பிரசுரம்; அல்லயன்ஸ் கம்பெனி, தபால் பெட்டி நெ. 617: சென்னை-4; விலை: ரூ. 3-80;

குழந்தையின் ஆரோக்கியம்

உங்கள் கையில் இருக்கிறது!

தாயே, சுவைமிக்க 'ஓவல்டின்'னை தவறாமல் சாப்பிட்டு, உங்கள் குழந்தை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளர உதவுங்கள். பிரசவ காலம் தொடங்கி, குழந்தை தாய்ப் பால் குடித்துவரும் வரை ஒவ்வொரு தாய்மாரின் ஆகார வகையிலும் 'ஓவல்டின்' சேர்க்கப்பட வேண்டும். முக்கியமாக, இதன் சுலபமாக ஜீர்ணிக்கும் தன்மை, இதற்கு தனி மதிப்பளிக்கிறது.

'ஓவல்டின்' னிலுள்ள பரிசுத்தமான உணவுப் பொருள்கள் மற்றும் இன்றியமையாத வைடமின்கள், குழந்தைகளின் இயற்கைப் போஷாக்கான தாய்ப் பாலை ஏராளமாக விருத்தி செய்கிறது. தாய்ப்பாலில் வளரும் குழந்தைகளே சிறந்து விளங்குகின்றன!

உங்கள் ஸ்டோரில்
'ஓவல்டின்' கேளுங்கள்.



ரேடியோ சிலோன் ஓவல்டின் அமெச்சூர் நேரம் கேளுங்கள்: (மீடியம் 41.72 மீட்டர்கள்) சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 மணி வரை. (ஆங்கிலம்—9520 கிலோ சைகிள்ஸ், 31 மீட்டர்கள்) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 மணி வரை.

ஓவல்டின்

ஆரோக்கியமயமானது
பிரதியொரு டின்னும்



விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

IV. 494

கோழிச்





"ஏ ரஹீம்! அங்கனே என்ன செஞ்சுக்கிட் டிருக்கியோம்! சின்னப் புள்ளைபோல எப்பப் பார்த்தாலும் கோளி வெளையாட்டுத்தானு? சந்தைக்குப் போய்வரச் சொன்னேனே, நேரமாகல்லியா?" என்று அலுத்துக் கொண்டார் கலைமான் ராவுத்தர்.

வீட்டின் பின்புறத் தோட்டத்தில் ரஹீமும் காஸிமும் நின்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் காதில் ராவுத்தரின் குரல் விழுந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இருவர் கைகளிலும் ஒவ்வொரு சேவல் கோழி இருந்தது. காஸிமின் கோழியான 'ருஸ்தும்' வளமான பூமியில் வளர்ந்த வாழைக்கன்று போல் கொழு கொழு வென்று இருந்தது. அழகான கொண்டை, கம்பீரமான பார்வை, மிடுக்கான நடை. தனது பிடரியை உயர்த்திச் சிலிர்த்துச் சிறகுகளைச் சற்று விரித்துக் 'கொக்கரக்கோ' என்று அது கொக்கரித்ததும் ரஹீமின் தோஞ்சல் கோழியான 'பாஷா' அந்த அறைகூவலை ஏற்கப் பயந்தது போல உடலை ஒடுக்கிக் கொண்டது; பின்னுக்கு நகர்ந்து 'குர்' என்ற அபயக் குரலுடன் தன் எஜமானனின் உடலோடு ஒட்டிக் கொண்டது.

காஸிம் கலகல வென்று நகைத்தான்; ரஹீமின் இள மீசை ரோஷத்தினால் துடித்தது. அவனது முகம் அவமானத்தால் சிவந்தது.

"காஸிம்! என் 'பாஷா'வைப் பயந்தாங் கொள்ளின்னு பார்க்கிறயா? சண்

டைக்குப் பொறப்பட்டதுன்னு உன் கோளி இருக்கிற இடம் தெரியாது. கொத்திக் கிளிச்சு எறிஞ்சுடும்! ஆமா! வேணுமுன்னு 'ஜதை' விட்டுப் பாக்கலாமா?''

பின்புறத்து இடைகழியில் வளையல்கள் உரசும் ஒலி கேட்டது. கதவிடுக்கிலிருந்து மெல்லிய இன்குரல் எழுந்தது.

''உங்களெ 'வாப்பா' கூப்புடுறாங்க!''

ரஹீம் இரண்டே தாவில் வாசலை நோக்கி ஓடினான். காசிமின் இதயம் படபடத்தது. இடைகழியை நோக்கினான். ஒருகணம் நிசப்தம் நிலவியது. கதவின் விளிம்பைப் பற்றிக் கொண்டிருந்த அழகுக் கரம் அவன் மனத்தில் அலையை எழுப்பியது.

''கதீஜா!...''


மேகத் திரையிலிருந்து மெல்ல மெல்ல எட்டிப் பார்க்கும் முழு மதியைப்போலக் கதீஜாவின் எழில் வதனம் கதவுக்கு வெளியே மெதுவாகவெளிப்பட்டது. அன்றலர்ந்த செந்தாமரையைப் போன்று, நாணத்தினால் சற்றுச் சிவந்த முக மண்டலத்தில் போதையூட்டும் அகன்ற மீன் விழிகள். அவற்றிலே நிலை கொள்ளாது அலையும் வண்டுக் கருமணிகள். செவ்விதழ்களின் கோணத்தில் துள்ளும் அன்புப் புன்னகை.

காசிம் பிரமித்து நின்றான். கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கதீஜாவைச் சரியாக நிமிர்ந்து பார்க்கக்கூட அவனுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அவளோடு புழுதியில் ஒன்றாகப் புரண்டு விளையாடியதெல்லாம் சின்னஞ்சிறு பிராயத்தில்தான்; இப்போது அந்த நிலையைத் தாண்டி அவள் எத்தனை தூரம் முன்னேறி விட்டாள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். முன்போல் தாராளமாகப் பழகக் கூடாது என்று பெரியோர்கள் விதித்த தடையின் அர்த்தம் அவனுக்குப் புரிந்து விட்டது. அவன் கண்கள் இப்பொழுது காண்பது அவளது விளையாட்டுத் தோழியல்ல.

காசிம் ஏதோ பேச வாயெடுத்தான். அதற்குள் அடுக்களையிலிருந்து ரஹீமின் தாயார் குரல் கொடுத்தாள்.

''கதீஜா!''

சண்டை



அவசரமாகக் கிளம்பிய கதீஜா போவதற்கு முன் ஒன்று கூறினாள்.

''காசிம்! ரஹீம் அண்ணன் கூட நீ கோளிச் சண்டை விட்டு விடாதே. கடைசியிலே 'தோஸ்து'களுக்குள்ளே விரோதம் தான் மிஞ்சும்.''

காசிம் பெருமூச்செறிந்தான். ரஹீம், சுலைமான் ராவுத்தரின் ஒரே மகன். கதீஜா அவனுக்கு முறைப் பெண். தாய் தந்தையற்ற அவளைக் குழந்தைப் பருவ முதலே ராவுத்தர் அன்போடு வளர்த்து வந்தார். காசிம் அவரது நெருங்கிய நண்பரின் மகன். வாழ்க்கை முழுவதும் வறுமையில் வாடிய காசிமின் தந்தை அவனது சிறு பிராயத்திலேயே மரித்தார்.

தாயும் மகளும் அடுத்த வீதியில் வசித்து வந்தனர். ராவுத்தர் அந்தக் குடும்பத்தைத் தம் குடும்பம்போல் பாவித்து அவ்வப்போது வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார்.

காசிமையும் ரஹீமையும் புதிதாகப் பார்க்கும் எவரும் அவர்களைச் சகோதரர்கள் என்று தான் எண்ணுவர். அத்தனை நட்பு. பள்ளிக்குப் போவது, படிப்பது, எல்லாம் சேர்ந்துதான்:

அந்தக் காலத்தில் சிறுமி கதீஜாவும் அவர்களது விளையாட்டில் கலந்து கொள்வாள்:

இரண்டு வருடங்களாக அவள் அன்னியர் கண்களுக்கே எதிர்ப்படாத அரும் பொருளாகி விட்டாள்.

அவன் நெடுமூச்சு விட்டான்: வீதியிலிருந்து ரஹீமின் உரத்த குரல் கேட்டதும் உணர்வடைந்தான்.

"காசிம்! நான் சந்தைக்குப் போகிறேன்: வரும்பொழுது ஓங்க வீட்டுப் பக்கம் வருகிறேன். எங்கேயும் போயிடாதே!" என்று கூறிவிட்டு விரைவாக நடந்தான் அவன்.

கோழியைத் தனது மார்போடு அணைத்த வண்ணம் வீட்டுக்குப் புறப்பட்டான் காசிம்: கூடத்தைத் தாண்டிச் செல்லுகையில், தற்செயலாக ராவுத்தர் தமது 'பீபீ'யிடம் பேசிக் கொண்டிருந்த சொற்கள் அவனது செவிகளில் தெளிவாக விழுந்தன.

"அந்தப் பொண்ணும் நல்லா வளந்துடுச்சு: பேசாமல் 'நிக்கா'வை முடிச்சுப்போட வேண்டியதுதான்..."

"நிக்காஹ்!"

காசிமின் இதயம் ஒரு விநாடி துடிப்பதை மறந்தது. அவன் நின்று கவனித்தான்; யாருக்கு நிக்காஹ்!....கதீஜாவுக்கா?...

வழியெங்கும் ஒரே சிந்தனை. பற்பல எண்ணங்கள்; அவனது மனம் குழம்பியது:

கதீஜாவை ராவுத்தர் பள்ளிக்கு அனுப்பவில்லை. ஆனால் ரஹீமும் காசிமும் பள்ளிக்குப் போகும்போது அவர்கள் தலைமறையும் வரை அவள் வாசற்படியருகே நின்று பார்த்துக் கொண்டே இருப்பாள். மாலையில் அவர்கள் வீடும் திரும்பும் வேளையில் அவர்களது வரவை எதிர்நோக்கி வெளியே காத்திருப்பாள்.

அவளுக்குப் படிக்க வேண்டுமென்று மிகவும் ஆசை. ரஹீமின் புத்தகங்களைத் தொட்டால் திட்டுவானோ என்று பயம். காசிமிடம் கூறினாள். அன்றுமுதல் காசிம் அவளுக்கு ஆசானாக மாறினான். மாலை வேளைகளில் அவளுக்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்கினான்.

இப்படிச் சம்பந்தா சம்பந்தமற்ற எத்தனை எத்தனையோ விஷயங்கள்! அவன் அன்று சாப்பிடவில்லை. ருஸ்துமுக்குத் தீனி வைத்துக் கொண்டிருந்தான். இந்தக் கோழியினால் வேறு அடிக்கடி ரஹீமுக்கும் அவனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு வந்தது. ஏனைய விஷயங்களிலெல்லாம் அன்போடு நடந்து கொள்ளும் ரஹீம், கோழியைப் பற்றிய பேச்சு வந்து விட்டால் மாத்திரம் விட்டுக் கொடுக்கவே மாட்டான். தன் நோஞ்சல் 'பாஷா'வைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்வான். 'ருஸ்து'மின் வலிவும் வனப்பும் அவனது உள்ளத்தில் பொறாமையை எழுப்பின.

ரஹீம் இரைக்க இரைக்க ஓடி வந்தான்.

"காசிம்! எல்லார்கிட்டேயும் அதைச் சொல்லிப்பிட்டேன்!..."

''என்னத்தை?''

''உன் ருஸ்துமுக்கும் நம்ம பாஷாவுக்கும் வர்ற 'ஜும்மா'வன்றைக்குப் பள்ளிவாசலுக்குப் பக்கத்திலே சண்டை நடக்கப் போவுதுன்னு!...'' என்று இழுத்தான்.

''ரஹீம்!''

ரஹீம் நகைத்த வண்ணம் காசிமைத் தட்டிக் கொடுத்தான். அன்று காலையில் கதீஜா கூறிய வார்த்தைகள் காசிமின் நினைவுக்கு வந்தன.

''நமக்குள்ளே சண்டை கூடாது, ரஹீம்!''

''நீ சுத்தப் பைத்தியக்காரன் காசிம்! நாமா சண்டை போடப் போறோம்? சும்மா நம்ம கோழிங்கதானே! சண்டைவிடக் கூடாதுன்னு பின்னே எதுக்காக இத்தனை நாளாகத் தீனி போட்டுக் கொழுக்கவச்சுப் படிப்பிச்சயாம்!''

காசிம் ஒப்பவில்லை. எத்தனை கூறியும் கண்டிப்பாக மறுத்து விட்டான். அவன் மறுக்க மறுக்க, ரஹீமின் ஆவல் அதிகரித்துக் கொண்டே வந்தது.

''பணயம் ஒசத்தியாக இருந்தால்? அப்ப கூடவா நீ 'ராஜி' ஆகமாட்டே?''

''அப்படி ஒசந்தது என்னவாம்?''

சற்றும் எதிர்பாராதவிதமாக, ''கதீஜா!'' என்றான் ரஹீம்.

காசிம் வாயடைத்துப் போனான். ரஹீம் முகத்தில் விஷமப் புன்னகையோடு அவனைக் கூர்ந்து நோக்கினான்.

''நீ....நீ...என்ன...?''

''ஆமாம், காசிம். யாருடைய கோழி ஜெயிக்குதோ அவங்களுக்குக் கதீஜா!''

''இதெல்லாம் ரொம்பத் தப்பு ரஹீம்! ஒங்க 'வாப்பா' காதிலே உளுந்துச்சின்னு...''

''யாருக்கும் தெரிய வேணும்! அவளை எனக்கு 'நிக்கா' முடிச்சுடணும்னு பேச்சு நடக்குது; ஜெயிக்கப் போவதும் என் பாஷாதானே?'' என்றான்.

காசிம் அவனை வெறுப்போடு நோக்கினான்.

''யார் சொன்னது? என்னுடைய ருஸ்தும் ஜெயிச்சுதுன்னு?''

''அப்போ 'வாப்பா'வைச் சரிப்படுத்துறது என் பொறுப்பு.''

''இதெல்லாம் கதீஜாவுக்குப் பிடிக்காது.''

''எல்லாம் அதுங்கிட்டே சொல்லியாச்சு! நீ மொதல்லே உன் கோழியைத் தைரியப் படுத்து!'' என்று கூறிய வண்ணம் சிரித்துக் கொண்டே புறப்பட்டான் ரஹீம்.

* * *

வெள்ளிக்கிழமை காலை. பள்ளிவாசலுக்கு அருகிலிருந்த ஆலமரத்தடியில் சிறுவர்களும், பெரியோர்களுமாக ஒரு கூட்டம் குழுமியிருந்தது. நடுவே 'ருஸ்து'மும் 'பாஷா'வும் ஒன்றையொன்று தாக்குவதற்குத் தயாராகத் துடித்துக் கொண்டிருந்தன. மத்தியஸ்தர்கள் மாத்திரம் அவைகளைப் பிடித்துக் கொண்டிராவிட்டால் எப்போதோ ஒன்றன்மேல் ஒன்று பாய்ந்து விட்டிருக்கும். ஒவ்வொன்றின் காலிலும் வழக்கப்படி ஒரு சிறு கூர்மையான கத்தி மாட்டிவிடப்பட்டிருந்தது.

தன் சேவல்தான் ஜெயிக்கும் என்பதில் காசிமுக்கு அணுவளவும் ஐயமில்லை. எனினும் 'பணயம்' என்னவென்பதை எவருக்குமே தெரிவிக்க வேண்டாமென்று கண்டிப்பாகச்

சால்லியிருந்தான் அவன். கேட்பவர்களுக்குப் 'பத்து ரூபாய் பந்தயம்' என்று சொல்லுவதென்று முடிவு செய்யப்பட்டது.

ரஹீமின் முகத்தில் ஒரு அலாதிக் குறும்பு துள்ளியது. "உம்! ஆரம்பிக்கலாம்!" என்று கூவினான் அவன்.

ருஸ்தும் "கொக்கரக்கோ!" என்று உரத்த குரலில் எக்காளம் செய்தது. பாஷாவும் 'குர்...கொக்கொக்' என்று பதில் கொடுத்தது. மத்தியஸ்தர்கள் பிடியைத் தளர்த்தினார்கள். பாய்ந்து விட்டது ருஸ்தும். எகிறித் தாக்கியது பாஷா. கூட்டத்தில் ஒரே ஆரவாரம். ஆர்ப்பாட்டத்துக்கும் கரகோஷத்துக்கும் சிறுவர்களின் சீழ்க்கை யொலிக்கும் அட்டகாசத்துக்குமிடையே சேவல்கள் இரண்டும் கொக்கரித்துச் சிறகடித்து உயர எழும்பி எழும்பிக் கொலைக் கண்களோடு பாய்ந்து ஒன்றையொன்று கொத்திக் கொத்தி ஆக்ரோஷத்தோடு தாக்கின. கால்களில் இணைத்திருந்த கத்திகள் எதிரிகளின் உடலைக் கீறின. சிறகுகள் பிய்ந்து 'கோதா' வெங்கும் சிதறுண்டன.

"ருஸ்தும்! ருஸ்தும்! நெக்கு! நெருக்கு! கொத்து! கொத்து! விடாதே!" என்ற குரல்கள் நாற்புறமும் எழுந்தன.

பாஷா இரண்டாம் முறையாகக் கீழே விழுந்து சமாளித்து வட்டத்தின் ஓரமாக நின்றது. பாதிச் சிறகுகள் உதிர்ந்து, மீதமுள்ளவை தாறுமாறாகக் கலைந்து விளம்பி உடலெங்கும் காயங்களோடு மூச்சு இரைக்க நின்ற அதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இத்தனைக்கும் ருஸ்துமின் இடது காலில் ஒரே ஒரு கீறல் மாத்திரம் தான். இன்னும் பத்து நிமிடங்களில் யுத்தம் முடிந்து விடும்: பாஷா இறப்பது நிச்சயம் என்று தோன்றியது.

"பாஷாவுக்கு நல்ல அடிபட்டு விட்டது, ரஹீம்! சண்டையை நிறுத்திடுவோம்!" என்றான் காசிம்.

"முடியாது! காசிம், முடியாது! நீ தோற்று விட்டதாக ஒப்புக்கொண்டால்தான் நிறுத்தலாம்" என்று பதிலளித்தான் ரஹீம்.

கோழிகள் மீண்டும் மோதத் தொடங்கின. ருஸ்துமின் தாக்குதலைத் தாங்கமாட்டாமல் 'பாஷா' பரிதாபமாகக் கதறியது. ஆனால் மறுகணம்! இது என்ன?...ருஸ்தும் காலை உதறிக் கொண்டே வட்டத்தின் விளிம்பை நோக்கித் திரும்பியது. மீண்டும் ஒரு முறை காலை உதறிவிட்டு மண்டி போட்டு உட்கார்ந்தது.

"ருஸ்தும்!" என்று கூவினான் காசிம். ஆனால் ருஸ்தும், தன் எசமானனின் குரலைக் கேட்டதாகவே தெரியவில்லை. இரண்டு முறை தன் கண்களை மூடி மூடித் திறந்தது. தலை துவண்டது. பெருமூச்சு வாங்கியதில் அதன் பருத்த உடல் உப்பி உப்பி அடங்கத் தொடங்கியது. தனது எதிரியின் ஒய்ந்த நிலையைப் பாஷா உணர்ந்து கொண்டது போலும்; அதன் கண்களில் கனல் பறந்தது. வஞ்சம் தீர்க்கச் சரியான தருணம் என்று தீர்மானித்தது போல் உடலை ஒரு சிலிர்ப்பு சிலிர்த்துக் 'கொக்கொ கோக்' என்ற யுத்த முழக்கத்துடன் எகிறிச் சாடியது. ஆனால், ருஸ்தும் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை.

கூட்டத்தில் கலகலப்பு ஏற்பட்டது. காசிம் வியந்தான். பராக்கிரமசாலியான தன் அருமை ருஸ்தும் சின்னாபின்னமாகக் கொத்திக் கிழிக்கப்படுவதைக் கண்டு அவன் இதயத்தில் உதிரம் கசிந்தது.

"ரஹீம்! ரஹீம்! வேண்டாம்! நிறுத்து! சண்டையிட்டது போதும்!" என்று கத்தினான்.

"அப்போ!"

"அப்போ என்ன? என் சேவலே தோத்துப்போச்சன்னு வைச்சுக்கோ!" என்று ஆத்திரமாகக் கூறிக்கொண்டே தன் ருஸ்துமை வாரியெடுக்கத் தாவினான்.

ரஹீம் ஜெயகோஷம் புரிந்தான்: காசிம் கூட்டத்தை விட்டு வெளியேறினான்.

அப்போது போனவன்தான். அதற்குப் பிறகு அவனை அந்தக் கிராமத்தில் எவருமே பார்க்கவில்லை.

* * *

கதீஜாவின் முகத்தைப் பார்க்கும் எவரும் இப்போது எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் எழிலின் நிலைக்களமாக விளங்கிய அவளது பொன்மேனி இன்று வெகுவாக வாடி விட்டது. அலையும் அழகு விழிகளிலே இன்று அசதியும் ஏக்கமும் இடம் பெற்றன. இளமையின் துடிப்பு எங்கோ ஓடி மறைந்தது.

ஒருநாள் நண்பகல். ராவுத்தர் தொழுகைக்காகச் சென்றிருந்தார். ரஹீமின் தாய் எதிர் வீட்டுக்குப் போயிருந்தாள். கூடத்தில் குர்ஆன் ஷெரீபை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்த கதீஜா காலோசை கேட்டு நிமிர்ந்தாள். ரஹீம் வந்ததைக் கண்டு எழுந்து ஒதுங்கினாள்.

"கதீஜா!"

அவள் பேசவில்லை: அவளது கண்களில் நீர் முட்டியது.

"என்னை மன்னிச்சுடு, கதீஜா! இத்தனை மாசமாக என் மனசு படுகிற பாட்டை நான் யார்கிட்ட சொல்லுவேன்! நான் செய்த பாவத்துக்கு...."

"நீங்க என்ன பண்ணுவீங்க...." என்று அவனைச் சமாதானப்படுத்தும் முறையில் ஏதோ கூற முயன்றாள் அவள்.

"இல்லே கதீஜா, நான் மட்டும் என் கோழியின் காலில் கட்டிய கத்தியில் விஷத்தைத் தடவலேன்னா...."

"ஆ...!"

"ஆமாம் கதீஜா....நீ எனக்குத் தங்கச்சி போல! காசிமுக்குத் தீங்கு நினைச்சு நான் அப்படிச் செய்யல்லே. சும்மா ஜம்பம் பேசுற அவன் சவாலைத் தோற்கடிக்க மட்டும் தட்டணுமென்று குறும்புக்காகச் செய்தது. இப்படி விபரீதமாயிடுச்சு. எவ்வளவாானாலும் சரி, என்றைக்காவது ஒருநாள் அவனைக் கண்டுபிடிச்சு உங்க ரெண்டு பேரையும் ஒன்றுசேர்த்தால் தான் என் மனசுக்கு நிம்மதி ஏற்படும்!"

அவள் கல்லாகச் சமைந்தாள்.

வருடம் ஒன்றுபோயிற்று. மகளின் பிரிவால் மனமுடைந்த காசிமின் தாயார் வீட்டைக் காலி செய்துவிட்டு அயலூரிலிருந்த தன் அண்ணன் வீட்டுக்குப் போய்விட்டாள். ரஹீ

பின் குறும்புத்தனமும் விளையாட்டுப் புத்தியும் அறவே மறைந்தன. தரகு வியாபாரத்தில் ஈடுபட்டு அடிக்கடி வெளியூர்களுக்குச் செல்லும் போதெல்லாம் அவன் காசிமையும் தேடிக் கொண்டுதானிருந்தான்.

மகன் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டதைக் கண்டு பெருமிதமடைந்த ராவுத்தர் 'நிக்கா'வைப் பற்றிப் பேச்செடுத்தார். ஆனால் ரஹீம் கண்டிப்பாக மறுத்து விட்டான்.

''கதீஜாவை யாருன்னு நினைச்சீங்க வாப்பா! அவள் என் தங்கச்சி!'' என்றான்.

ஆறு ஆண்டுகள் சென்றன.

கிராமத்தில் இருந்தவர்களில் சிலர் 'ஹஜ்'ஜுக்குக் கிளம்பினர். ராவுத்தருக்கும் நெடு நாட்களாக உள்ளுக்குள்ளே இருந்த ஆசை துளிர்த்தது. மகனிடம் விடை கேட்டார். கதீஜாவுக்குப் பெண் துணை வேண்டுமே! அதற்காக அடுத்த கிராமத்திலிருந்த தனது விதவைத் தங்கையையும் அவளது இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்து வீட்டில் வைத்து விட்டுத் தமது 'பீபி'யோடு மக்காவுக்குப் புறப்பட்டார்.

அவள் வீட்டை நெருங்குகையில், பின்னால் ஆளரவம் கேட்டது. சிந்தனைத் தொடர் பட்டென்று அறுபட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஆலமரத்தடியில் பார்த்த காக்கிச் சட்டைக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு ஆசாமி சற்றுத் தொலைவில் மெதுவாக வந்து கொண்டிருந்தான். அவளது இதயம் படபடத்தது.

அவள் நேராகப் பின்புறத் தோட்டத்துக்குச் சென்று தொழுவத்தைக் கூட்டி மாட்டைக் கவனித்து விட்டு அடுக்களைக் காரியங்களில் ஈடுபட்டாள். சமையல் முடிவதற்குள் உச்சிப் பொழுதாகி விட்டது.

வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். வீதித் திண்ணையில் குழந்தைகளைக் காணவில்லை. தொலைவில் பள்ளிவாசல் பக்கத்திலிருந்து அவர்கள் இருவரும் ஓடி வந்தனர், கை நிறைய மிட்டாய்களுடன். அவர்களது முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

''மோசி, மோசி!...அவங்க வந்து இதெல்லாம் குடுத்தாங்க!...'' என்று கொச்சை மொழியில் பேசிக் குதித்தன அக்குழந்தைகள்.

''யாரு?'' என்று கேட்டாள் திகைப்புடன்.

''நீ தண்ணி கொண்டுவரப்ப...உம் பின்னாலே வந்துச்சே...அந்த மாமன்!''

''ஓ!''

ரஹ்மானின் கன்னத்தில், பளீரென்று அறைந்தாள் கதீஜா. அந்தக் குழந்தையின் கையிலிருந்த ஒரு கடிதம் நழுவியது.

நடுங்கும் கரங்களால் அதை எடுத்துப் பார்த்தாள். ஒழுங்காக மடித்து மேற்புறத்தில் ரஹீமின் மேல் விலாசமிடப்பட்டிருந்தது.

''இது ஏது?''

''அவுங்கதான் . . . குடுத்தாங்க!'' என்று பயந்த வண்ணம் குழறியது அந்தக் குழந்தை.

அந்தக் கையெழுத்து!......அதை அவள் அதற்குமுன் பார்த்திருக்கிறாள்!...கூடத்துக்கு வந்து அதை அவசரமாகப் பிரித்தாள்.

''என் அன்புள்ள சகோதரன் ரஹீமுக்குக் காசிம் எழுதியது...''

அவளது உள்ளம் பதறியது.

''ரஹ்மான்! கபார்!...இப்போ இந்தக் கடுதாசு கொடுத்தாங்களே அவங்க எங்கே?''

''ஆலமரத்தடியிலேதான் இருந்தாங்க...''

''ஓடிப்போய் அவரைக் கூட்டி வாங்க!'' என்று கெஞ்சினாள் அவள். குழந்தைகள் திரும்பி ஓடின. அலைமோதும் நெஞ்சுடன் கடிதத்தில் கண்ணோட்டம் விட்டாள்.

''.....இத்தனை நாட்களாகக் கடிதம் எழுதாமலிருந்து விட்டதற்கு முதலில் என்னை மன்னித்து விடு. வெற்றியைப் போலவே தோல்வியையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் திடநெஞ்சம் இல்லாதவன் நான். பைத்தியக்காரத்தனமாக ஊரை விட்டுப் போன பிறகு எங்கெங்கோ சுற்றினேன். எத்தனையோ விதமான வேலைகளில் அமர்ந்தேன். எதிலும் மனம் லயிக்கவில்லை. உங்கள் நினைவு - உங்கள் அன்பு - சதா என்னை அலைக்கழித்துக் கொண்டேயிருந்தது. வடக்கே சென்று ஒரு வருஷத்துக்குமேல் இருந்தேன்: எங்கும் நிம்மதி இல்லை. கடைசியாகப் பட்டாளத்தில் சேர்ந்து விட்டேன். எகிப்தில் ஏதோ யுத்தமாம். எங்களை அங்கே அனுப்பப் போகிறார்கள். போனால் மீண்டும் உயிரோடு திரும்புவேனோ என்னவோ! உன்னையும் கதீஜாவையும் கடைசியாகப் பார்த்துவிட்டுப் போக வேண்டுமென்று ஆவல் உண்டாயிற்று: எங்கள் பட்டாளத்தினர் சிலரோடு தெற்கு முகாமுக்கு ஒரு வேலையாக அனுப்பப் பட்டேன். அப்படியே கதீஜாவும் நீயும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவதைக் கண்ணால் கண்டு ஆனந்திக்க எண்ணி நம் ஊருக்கு வந்தேன். நீ வெளியூருக்குப் போயிருப்பதாகவும் திரும்பிவரச் சில தினங்கள் ஆகுமென்றும் உன் அருமைக் குழந்தைகள் சொன்னார்கள். கதீஜாவையாவது கண்டு பேச வேண்டுமென்று ஆவல் இருந்தாலும், நீ இல்லாதவேளையில் என் காக்கி உடையோடு வீட்டில் நுழைந்து பிறரது வீண் பேச்சுக்கு இடமளிக்க என் மனம் ஒப்பவில்லை. அல்லா உங்களைக் காக்கட்டும். உன் குழந்தைகளுக்கு என் அன்பு. இப்படிக்கு—காசிம்''

ஆலமரத்தடிக்குச் சென்ற குழந்தைகள் திரும்பி ஓடி வந்தார்கள்.

''மோசி, மோசி!...ரெண்டு பெரிய கார் வந்துச்சு!...அவங்கல்லாம்...அதிலே ஜோரா ஏறிக்கிட்டுப் போயிட்டாங்க!.....நாங்க கூப்பிட்டது அவங்க காதிலே விழல்லே!''

'' ஐயோ காசிம்! ...''

அவளது உள்ளம் கரைந்தது. இதயம் கசங்குண்டு பிழிபட்டு உள்ளுக்குள் உதிரம் கசிவது போலிருந்தது!

'காசிம்! காசிம்! உனக்காகக் காத்திருந்தேன்! என்னைத் தேடிக் கொண்டு வீடு தேடி நீ வந்தாய்!...பாவி நான் உன்னை 'வா' என்று கூடச் சொல்லவில்லை! ஐயோ!' என்று கதறினாள் அவள். குழந்தைகள் இருவரும் ஒன்றும் புரியாது விழித்துக் கொண்டு நின்றனர்!





பூவைப் போல ...
உங்கள் மேனியை மலரச்
செய்வது ரெக்ஸோனா
ரெக்ஸோனா சோப்பில் இருப்பது கேடில் — சருமத்திற்கு ஊட்டமளித்து உங்கள் இயற்கையழகை வெளிக்கொணரத் துணை புரியும் எண்ணெய்கள் கலந்த விசேஷத் தைலமே கேடில்!
Rexona
BLENDED WITH CADYL
கேடில் கலந்த டாய்லெட் சோப் இது ஒன்றே
ரெக்ஸோனா ப்ரொப்ரைடரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது
RP. 150-58 TM

தவசிப்பிள்ளை நமசிவாயம் சத்திரத்தின் தூண் ஒன்றில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தார். அவருடைய உடம்பு மட்டும்தான் அங்கு சாய்ந்து கொண்டிருந்தது. மனம் கடந்து போன இருபது வருஷ வாழ்க்கையை அலசிஆராய்ந்து எங்கெங்கோ போய்த் திரும்பிக் கொண்டிருந்தது. இருபது ஆண்டுகளாகச் சதாசிவம் பிள்ளை அவர்கள் வீட்டு அடுப்பங்கரையையே தமது வாழ்க்கையின் புகலிடமாக எண்ணியிருந்தவர் நமசிவாயம்.

ஒரு சமயம் சதாசிவம் பிள்ளை திருநெல்வேலியில் ஒரு கலியாண வீட்டுக்குப் போயிருந்தபோது, அங்கு பந்தி பரிமாறிக் கொண்டிருந்த தவசிப்பிள்ளைகளைக் கூர்ந்து கவனித்தார். அப்பொழுது உதவித் தவசிப் பிள்ளைகளில் ஒருவனாகக் கலியாண வீட்டில் பம்பரமாகச் சுழன்று பரிமாறிய நமசிவாயத்துக்கு வயது இருபது. சுறுசுறுப்புள்ள இளைஞன். அதுமட்டுமல்ல, அந்தக் கலியாண வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த ஏழு தவசிப்பிள்ளைகளில் நமசிவாயம் ஒருவன்தான் வேஷ்டி துண்டு வெள்ளையாக அணிந்திருந்தான். ஆசாரமாகவும் நடந்து கொண்டான். கடைசியாக உள்ள அம்சம் பிள்ளையவர்களுக்கு மிகவும் பிடித்தமான அம்சம்.

பிள்ளையவர்கள் அப்பொழுது ரெவினியூ இன்ஸ்பெக்டராக இருந்தார். மாதத்தில் பெரும்பாலான நாட்கள் அயலூர்களில் தங்கியிருக்க வேண்டும். அங்கெல்லாம் இவருடைய ஆசாரத்துக்கேற்றபடி சாப்பாட்டு வசதிகள் கிடைக்காது. ஆதலால், 'கேம்ப்' போகும் இடங்களில் பால், பழம், அவல் ஆகிய சிற்றுண்டிகளை பெரும்பாலும் உணவாகக் கொண்டு திருப்தியடைவார் பிள்ளை. சமையல் தெரிந்து ஆசாரமாக நடக்கும் தவசிப் பிள்ளை ஒருவன் கிடைத்தபோது அமர்த்திக் கொள்ள வேண்டும் என்று ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஆன அன்றையிலிருந்தே யோசனை பண்ணிக் கொண்டிருந்தார் அவர்.

அவருடைய மனத்துக்கேற்றபடி ஒரு தவசிப் பிள்ளை அகப்படாமலே மூன்று வருஷ காலம் ஓடி விட்டது. அந்த நிலையில்தான் அவர் நமசிவாயத்தைச் சந்திக்க நேரிட்டது. அவனுடைய பூர்வோத்திரங்களை அங்கிருந்த ஏட்டுத் தவசிப் பிள்ளையிடம் விவரமாகக் கேட்டபிறகு அவனைத் தம் வீட்டில் தவசிப்பிள்ளையாக வேலைக்கு அமர்த்திக் கொண்டார் சதாசிவம் பிள்ளை.

நமசிவாயத்துக்குச் சொந்த ஊர் பொன்னுக்குடி என்ற சிறு கிராமம். தகப்பனார் இறந்த பிறகு, சிறிய தகப்பனாரின் கட்டளைப்படி தோட்டத்தில் தண்ணீர் இறைத்துக் காய்கறி பயிரிட்டு வாழும் வாழ்க்கை பதினெட்டு வயது நமசிவாயத்துக்குப் பிடிக்கவில்லை. கிராம வாழ்க்கை அவனுக்குக் கசப்பாக இருந்தது. பட்டணக் கரையின் சுறுசுறுப்பான போக்கு அவனுடைய மனசைக் கவர்ந்து விட்டது.

திருநெல்வேலியில் குடியேறி அங்குள்ள பலசரக்குக்கடை ஒன்றில்வேலை பார்த்துக் கொண்டு ஜீவனம் நடத்தலாம் என்றயோசனையைத் தாயாரிடம் வெளியிட்டான் நமசிவாயம். தாயார் அதற்குச் சம்மதிக்கவில்லை. இதனால் தாயாருக்கும் மகனுக்கும் அடிக்கடி சண்டைகள் நடக்கும். ஒரு நாள் சண்டை முற்றி விட்டது. ''இனி நான் உன் முகத்தில் விழிக்கவே மாட்டேன்'' என்ற சபதத்துடன் வீட்டை விட்டு வெளியேறினான். வயிறு காய்ந்ததும் வழக்கம் போல் வீட்டுக்குத் திரும்பி வருவான் என்று எதிர்பார்த்த தாயார் ஏமாந்து போனாள். மகன் வீடு திரும்பவில்லை.

திருநெல்வேலிக்குச் சென்ற நமசிவாயம் சுறுசுறுப்பாக வேலை தேடினான். கோவிலில் மலிவாகக் கிடைக்கும் கட்டிச் சாதத்தில் ஒரு நாள் பொழுதைக் கழித்தான் நமசிவாயம். மறுநாள் ஒரு கல்யாண வீட்டில் ஆளோடு ஆளாகப் புகுந்து பந்தியில் உட்கார்ந்து விட்டான். நல்ல வேளையாகச் சாப்பிட்டு முடியும் வரையில் ஒருவரும் அவனை யாரென்று விசாரித்து வெளியில் துரத்தவில்லை. கலியாணச் சாப்பாட்டைத் திருப்தியாக இழுத்தவுடன் அவனுடைய மூளை உக்கிராண அறையை நோக்கிச் சென்றது. கால்கள் மூளையின் ஏவலின்படி மெதுவாக அவனை அங்கு நடத்திச் சென்றன. அங்கே ஒரு மணைப் பலகையில் அமர்ந்தபடியே கட்டளையிட்டுக் கொண்டிருந்தவர்தான் ஏட்டுத் தவசிப் பிள்ளை என்பதை ஊகித்துக் கொண்டு அவர் அருகில் சென்றான் நமசிவாயம். தானும்



தவசிப் பிள்ளை குழாத்தில் சேரவேண்டும் என்ற விருப்பத்தை மிகப் பணிவோடு வெளியிட்டான் அவரிடம். அவன்மீது அவருக்குச் சற்று இரக்கம் பிறந்தது.

பையன் திருநெல்வேலியிலுள்ள தனது இரண்டொரு உறவினர்களின் பெயரைச் சொன்னவுடன், அவன் அசல் சைவவேளாளர் இனத்தைச் சேர்ந்தவன்தான் என்பதை ஐயம் திரிபற நிச்சயித்துக் கொண்டார் ஏட்டுத் தவசிப் பிள்ளை மேகலிங்கம். அந்த வகையில் திருப்தி ஏற்பட்டவுடன் நமசிவாயத்தைத் தமது குழாத்தில் ஒரு உறுப்பினனாக ஆக்கிக் கொண்டு விட்டார்.

மேகலிங்கம், ஊரில் பிரபலமான தவசிப் பிள்ளையாதலால் விசேஷ வீடுகளுக்குச் சமையல் செய்ய அவரைத்தான் பெரும்பாலும் அழைப்பார்கள். உதவித் தவசிப்பிள்ளைகள் கூட்டத்தில் ஒருவனாகச் சேர்ந்து விட்ட இளம் தவசிப்பிள்ளை நமசிவாயத்துக்கு, மாதத்தில் பாதி நாட்களுக்கு அன்னக்கவலை தீர்ந்தது. மேற்கொண்டு கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு அவன் மீதி நாட்களைச் சமாளித்துக் கொள்வான். ஒரு ஆச்சியம்மாவின் தயவில் சமைக்க, இருக்க, படுக்க இலவசமாக அவனுக்கு ஒரு ஒட்டுத் திண்ணை கிடைத்தது. மற்ற உதவித் தவசிப் பிள்ளைகள் வெற்றிலை பாக்கு, புகையிலைகளுக்குச் செலவழித்த அளவு சில்லறையை நமசிவாயம் சோப்பு வாங்குவதில் செலவிட்டான். அழுக்குத் துணியோடு அவனைப் பார்ப்பது அபூர்வம். இடுப்பில் நான்கு முழக் கல்லிடைக் குறிச்சிக் கைத்தறி வேஷ்டியும் தோளில் மடித்துப் போட்ட சிட்டித் துண்டுமாக மாலை வேளையில் கடைவீதிப் பக்கம் இரண்டு மூன்று இடங்களில் நின்று அந்த ஆரவார வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டிருப்பான். இதுதான் அவனுக்குப் பிரியமான பொழுதுபோக்கு. எட்டு மணியடிப்பதற்குச் சற்று முன்னதாகவே அவன் லாலாச் சத்திரத்தை நோக்கிப் புறப்பட்டு விடுவான்.

விசேஷ வீடுகளுக்குப் போகாத நாட்களில் இரவு எட்டு மணிக்கு மேகலிங்கம் பிள்ளை குழாத்தைச் சேர்ந்த தவசிப்பிள்ளைகள் யாவரும் லாலாச்சத்திரத்தில் வந்து ஆஜராக வேண்டும். அடுத்து வரும் தேதிகளில் விசேஷ வீட்டுச் சமையல் வேலை உண்டா இல்லையா என்பதை ஏட்டுத் தவசிப்பிள்ளை அந்தச் சத்திரத்துக்கு வந்துதான் தெரிவிப்பார். ஒன்பது மணிக்குள் அவர் வரவில்லையென்றால் அன்று வரவே மாட்டார் என்றுதான் அர்த்தம். அவசர அழைப்புகள் வந்தால்; உதவித் தவசிப்பிள்ளைகளின் இருப்பிடம் தேடிக்கொண்டு ஏட்டுத் தவசிப் பிள்ளை ஓடுவதும் உண்டு.

சதாசிவம் பிள்ளை, தம்மிடம் காட்டிய பரிவையும் அன்பையும் எண்ணிப்பார்த்தபோது, கடந்து போன இருபதாண்டுப் பொற்காலம் அவரது நினைவுத் திரையில் நிழலாடியது. அந்த அதிர்ஷ்ட நாட்களின் இன்ப நினைவுகள் அவருடைய கண்களில் இரண்டு துளிக் கண்ணீராக உருவெடுத்து நின்றது.

மேலநத்தம் கிராமத்தில் ஆற்றங்கரை ஓரமாக உள்ள வீட்டார்கள் தினமும் காலையில் ஐந்தரை மணிக்குப் "படார்! படார்!" என்ற சத்தத்தைக் கேட்டார்களானால் அது ரெவினியூ இன்ஸ்பெக்டர் வீட்டுத் தவசிப் பிள்ளை நமசிவாயம் வேஷ்டி துவைக்கும் சத்தம் என்பதைத் தெரிந்து கொள்வார்கள். அலாரம் வைத்த கடிகாரம் போல ஐந்து மணிக்குச் 'சிவ சிவ' என்ற சொல்லுடன் படுக்கையை விட்டு எழுந்து உமிக்கரி, திருநீற்றுப் பை, சோப்புக் கட்டி, தலையில் கொஞ்சம் எண்ணெய் ஆகிய உபகரணங்களுடன் தாமிரபரணி ஆற்றை நோக்கிப் புறப்படுவான் நமசிவாயம். உடம்பை நன்றாகத் தேய்த்துக் குளித்துத் துணிமணிகளை அழுக்குப் போகத் துவைத்துக் கட்டிக் கொண்டு, வெண்ணீற்றுப் பட்டைகள் துலங்க, அவன் வீடு திரும்பும் போது மணி ஆறு அடிக்கும். ரெவினியூ இன்ஸ்பெக்டர் பிள்ளையவர்கள் காலையில் எழுந்திருப்பதற்கு ஏழு மணியாகும்.

நமசிவாயம் வேலைக்கு வருவதற்கு முன்பெல்லாம் பிள்ளையவர்களுக்குக் காலைப் பலகாரம் ஒன்பது மணிக்குத்தான் கிடைக்கும். அவருடைய வீட்டு அம்மாள் காமாட்சி கொஞ்சம் படித்த பெண்மணி. ஆகையால் உடலில் திடம் கிடையாது.

"தினமும் காலையில் ஏழு மணிக்கு நான் பலகாரம், காப்பி எல்லாமே தயார் செய்து விடுகிறேன், ஐயா! நீங்கள் வெறும் காப்பியோடு ஒன்பது மணிவரை எப்படி இருக்க முடியும்?" என்று பணிவாகவும் நாசூக்காகவும் பிள்ளையவர்களிடம் கேட்டான் நமசிவாயம்.

பிள்ளையவர்கள் இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். அன்று முதல் தினமும் பிள்ளை அவர்கள் படுக்கையை விட்டு எழுந்து வரும் போது பின் வாசலில் பல்பொடி தண்ணீர் சகிதம் ஆசாரமாக நின்று கொண்டிருப்பான்.

அடுக்களையில் அடுப்பு 'தகதக' வென்று எரிந்து கொண்டிருக்கும். காப்பியின் மணம், கல்லில் சற்றே முறுகிக் கொண்டிருக்கும்பூப்போன்ற தோசையின் வாசனையோடு



கலந்து. சதாசிவம் பிள்ளையவர்களின் பசியைத் தூண்டிவிடும். அவசரம் அவசரமாகக் குளித்து விட்டுச் சாப்பிடும் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டு விடுவார்.

தவசிப்பிள்ளை வந்து சேர்ந்த ஒரு வருஷத்தில் பிள்ளையவர்கள் தாசில்தாராக உயர்த்தப்பட்டார். எஜமானருக்குப் பதவி உயர்ந்ததும், அந்த உயர்வு தனக்கே ஏற்பட்டிருப்பதாக எண்ணினான் நமசிவாயம். இதற்குப் பிறகுதான் அங்கவஸ்திரம், "சில்க் ஷர்ட்", கடுக்கன்,செருப்பு முதலானவைகளை அணிந்து கொண்டு தன் சொந்த ஊரைப் போய்ப் பார்க்கத் துணிவு வந்தது அவனுக்கு:

நமசிவாயம் சமையல் தொழிலுக்காக மட்டும் நியமனம் செய்யப்பட்டிருந்தாலும், சதாசிவம் பிள்ளையின் குடும்பத்தில் பல தொழில்களைத் தானாகவே மேற்கொண்டு விரும்பிச் செய்து வந்தான்: சலவைத் தொழிலாளி, பிள்ளையவர்களின் உடைகளைக் குறிப்பிட்ட நாளில் கொண்டு வரவில்லையானால் தவசிப்பிள்ளை நமசிவாயம் சலவைத் தொழிலாளியாக மாறி, ஐயா அவர்கள் கச்சேரிக்குப் புறப்படும்போது, சலவை செய்த ஆடைகளைத் தயாராக எடுத்துக் கொடுப்பான்.

தனியாக இருக்கும்போது நமசிவாயம் அவரிடம் பேசுவது, ஒரு தாயார் தன் மகனிடம் பேசுவது போலக் கனிவாக இருக்கும். பிள்ளை அவர்களின் நலன்களில் அவனுக்கு அவ்வளவு அக்கறை. பிறர் முன்னால் அவருடன் பேச வேண்டியிருந்தால், அடிமை போலக் கை கட்டி, வாய் பொத்தி, எட்டி நின்றுகொண்டு தான் பேசுவான். அப்படிப் பேசுவதில் அவனுக்கு ஒரு மகிழ்ச்சி.

ஐயா 'கேம்ப்' புறப்பட்டாரென்றால், வடகம், வற்றல், அப்பளம், ஊறுகாய் சகிதம் அவருடன் கிளம்புவான் தவசிப்பிள்ளை நமசிவாயம். அங்கங்கே கிடைக்கும் பிஞ்சுக் காய்கறிகளைத் தேர்ந்தெடுத்துப் பிள்ளையவர்களின் ரசனைக்கு ஏற்றபடி சமையல் செய்வான். அவருடைய குறிப்பறிந்து காரியங்களைச் செய்வதில் நமசிவாயம் சாமர்த்தியசாலி.



பிள்ளையவர்களின் பரிபூரண அன்புக்குப் பாத்திரமான நமசிவாயத்தை அவருடைய வீட்டுஅம்மாள் ஒரு வேலைக்கார யந்திரமாகவே கருதினாள். அவன் எவ்வளவுதான் சுறுசுறுப்பாக இருந்தாலும் "எருமை மாடுமாதிரி அசமந்தமாக இருக்கிறாயே?" என்று சொல்லாமல் இருக்க முடியாது, காமாட்சியம்மாளால்: அது அவளுடைய பிறவிக் குணம்: யார் எது செய்தாலும் அதில் குறை இருப்பதாகவே அவளுக்குத் தோன்றும்.

சுமார் பதினெட்டு வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்களை மனக் கண்முன் கொண்டு வந்தபின் இன்று தமக்கும் அந்த வீட்டுக்கும் உள்ள சம்பந்தத்தை எண்ணிப் பார்த்தார், சத்திரத்துத் தூணில் சாய்ந்து கொண்டிருந்த நமசிவாயம்பிள்ளை. அவருக்குப் பகீரென்றது. அந்தக் குடும்பத்தில் தமக்கு ஏற்பட்டிருந்த அத்தனை பாசமும் நாளாவட்டத்தில் எப்படிக் கரைந்து போய் விட்டது என்று ஆச்சரியப்பட்டார்.


வீட்டின் தலைவர் இறந்தபிறகு புளியம் பழத்தின் ஓட்டைப் போலத் தமது பாசப் பிடிப்பு விலகி விட்டதை இப்பொழுது நன்றாக உணர்ந்து கொண்டார்.

நமசிவாயம்பிள்ளை இதையெல்லாம் காமாட்சியம்மாளிடம் எடுத்துச் சொல்லியும் பயனில்லை. "உமக்கு வரவர மூளை குறைஞ்சு போச்சு, தவசிப்பிள்ளை. குழம்பு வைக்கத் தெரியல்லே. உப்புப் போடாமல் ரசம் வைக்கிறீர். இனிப்பில்லாமல் பாயசம் வைக்கிறீர்: பண்டம் பலகாரம் எதுவும் செய்யத் தெரியல்லே. உம்மை வேலைக்கு வைத்திருந்து என்ன பிரயோசனம்? பதினொருநாள் சம்பளம் இதோ இருக்கு: எடுத்துக்கிட்டு வெளியே நடவும்" என்று கடுமையாகவும் கண்டிப்பாகவும் பேசி வெளியே அனுப்பிவிட்டாள்.

'வயசு அதிகமாயிட்டதனாலே உங்க நாக்கு மரத்துப் போச்சு: நான் செய்யிற சமையல் பக்குவத்திலே குறைபாடு ஒண்ணுமில்லே' என்று சொல்லிவிட எண்ணினார் நமசிவாயம் பிள்ளை. ஆனால் இருபதாண்டு காலமாகப் பணிவான வார்த்தைகளையே பேசிப் பண்பட்டுப்போன அவருடைய நாக்கு எதிர்த்துப் பேசும் சக்தியை இழந்து விட்டிருந்தது.

தமக்குச் சொந்தமான ஒரு துணிமூட்டை, விபூதிப் பை, முகம் பார்க்கும் கண்ணாடி, பிள்ளையார் படம், காமாட்சியம்மாள் வீசி வெறித்த சம்பளப் பணம் ஆகியவைகளை எடுத்துக் கொண்டு வெளியேறியவர் சத்திரத்துக்கு வந்து ஒரு மணி நேரமாயிற்று. ஆடாமல் அசையாமல் ஒரேநிலையில் உட்கார்ந்திருந்தார். இனி என்ன செய்வது என்பதை அவரால் ஆலோசனை செய்ய முடியவில்லை. வாழ்நாள் முழுவதும் சதாசிவம்பிள்ளை வீட்டுத் தவசிப்பிள்ளையாகவே இருந்துவிட உறுதியாகத் திட்டமிட்டிருந்த அவருக்கு இது ஒரு பெரும் சோதனையாக இருந்தது.

சதாசிவம்பிள்ளையவர்களின் உயர்ந்த பண்புகளையும், அவருக்கு வந்து வாய்த்த இல்லறத் துணைவியின் இழிகுணங்களையும் ஏழாவது



தடவையாக ஒப்பிட்டுப் பார்த்துவிட்டுத் தலையை நிமிர்த்த போது அவருக்கு எதிரில் ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார். அடுப்பின் முன்னால் நின்று நின்று கலங்கிச் சிவந்த கண்களைப் பார்த்தவுடன் அந்த ஆள் ஒரு தவசிப்பிள்ளை என்பதை யாரும் ஊகித்துவிட முடியும். ஆனால் தவசிப் பிள்ளை நமசிவாயம் அப்பொழுது தமது வசதியை இழந்திருந்தார். அவருக்கெதிரே நின்றவர், பண்ணையார் நெல்லையப்பபிள்ளை வீட்டுத் தவசிப்பிள்ளை முத்துசாமி. அவருக்கு நமசிவாயத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். மேலை நத்தம் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் ஓரளவு தெரிந்து வைத்திருந்தார் முத்துசாமி.

எவரையும் எளிதாகப் பேச்சுக்கு இழுத்து அவர்கள் மனத்தில் உள்ளதைக் கிரகிக்கும் சக்தியுள்ளவராதலால் நமசிவாயத்திடம் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு அவருடைய மனத்துயரம் முழுவதையும் கேட்டு அறிந்தார். நமசிவாயத்தின் நற்குணங்களும், ஆசாரமும், எஜமானர் குடும்பத்தின் மீது அவர் வைத்திருந்த பாசமும் ஊரறிந்த விஷயம். மனக் குமுறல்களுக்கிடையே அவர் வெளியிட்ட விவரங்கள் முத்துசாமியின் உள்ளத்தை உருக்கி விட்டன. அவரை விரட்டியடித்த காமாட்சியம்மாளின் மீது கோபம் கோபமாக வந்தது. ஆனால் அவரால் என்ன செய்ய முடியும்? அவரும் ஒரு சாதாரணத் தவசிப்பிள்ளைதானே!

நமசிவாயத்துக்கு ஆறுதல் சொல்லித் தம்மோடு அழைத்துக்கொண்டு போனார் பண்ணையார் வீட்டுத் தவசிப்பிள்ளை. நண்பரை வெளித்தாழ்வாரத்தில் உட்கார வைத்துவிட்டுப் பண்ணையாரின் அருகில் போய்ப் பத்து நிமிஷம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். பின்பு நமசிவாயத்திடம் வந்து, "அண்ணாச்சி! ஒரு மாச காலத்துக்கு நான் லீவிலே போகிறேன். நீங்க எனக்குப் பதிலாக இங்கே சமையல் வேலை பாருங்க. மற்றக் காரியங்களை அப்புறம் யோசித்துக் கொள்ளலாம்" என்று அவரை அழைத்துக் கொண்டு போய்ப் பண்ணையார் முன் நிறுத்தினார். பண்ணையார் "இவர்தானா? சரி. நாளை முதல் இவர் வேலை செய்யட்டும்" என்று தம்முடைய சம்மதத்தைத் தெரிவித்தார்.

பண்ணையாரிடம் ஒருமாத காலம் 'லீவு' கேட்டுக்கொண்டு சென்ற முத்துசாமி மறுநாள் காலையில் சதாசிவம் பிள்ளை வீட்டுக்குப் போய்க் காமாட்சி அம்மாளைச் சந்தித்து, "அம்மா, நம்ம வீட்டுக்குத் தவசிப்பிள்ளை தேவைப்படுமா?" என்று கேட்டார். நமசிவாயம் பிள்ளை போனபிறகுதான் காமாட்சியம்மாளுக்கு அடுப்படி வேலை எவ்வளவு கஷ்டமானது என்று புரிந்தது. குனிந்து நிமிர முடியாமல் பருத்துப் போன சரீரத்தோடு, மேல் மூச்சு வாங்க அன்று சமையல் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்த அம்மாளுக்கு முத்துசாமியின் கேள்வி தேனினுமினிய சொற்களாக வந்து விழுந்தது. "தவசிப்பிள்ளை வேணும். நீர் யாரு? இதற்கு முந்தி எங்கே வேலை பார்த்தீர்?" என்ற கேள்விகளை ஆரம்பித்தாள். அவர் பண்ணையார் வீட்டில் தவசிப் பிள்ளையாக இருந்தவர் என்று



"சில நல்ல பாத்திரங்களெல்லாம் வாங்கினேன். நம்ப சின்னசாமியிடம் காண்பித்தேன். அவன் சரியாகவே பார்க்கவில்லே."

"அவன் ஓட்டை உடைசல் பாத்திர வியாபாரி யாச்சே! அதை யெல்லாம் அவன் லட்சியம் செய்வானா?"

அறிந்தவுடன் அம்மாளுக்கு வேறு எதுவும் கேட்கத் தோன்றவில்லை. உடனே அவரை வேலைக்கு நியமித்து விட்டாள்.

பண்ணையார் வீட்டில் புதிதாகப் புகுந்த நமசிவாயம் பிள்ளை பயந்து பயந்து வேலை செய்து கொண்டிருந்தார். அதே சமயம் தவசிப்பிள்ளை முத்துசாமி காமாட்சி அம்மாளை அரட்டி மிரட்டி அதிகாரம் பண்ணிக்கொண்டு அங்கு வேலை பார்த்து வந்தார். காமாட்சி அம்மாள் ஒருவார்த்தைக்கு அடுத்த வார்த்தை பேசினால் முத்துசாமிக்குக் கோபம் வந்துவிடும். "அட, எம்மா சும்மா தொண தொணங்கறே?" என்று மிடுக்காகச் சொல்வார். முதல் தடவை அவர் இப்படிச் சொன்னபோது 'ஷாக்' அடித்தது போல இருந்தது அம்மாளுக்கு. 'வேலைக்கு இருக்கிற தவசிப்பிள்ளை நாக்கை அடக்கிப் பேசணும் மய்யா!' என்று அதட்டினாள். அவ்வளவுதான்; முத்துசாமியின் கோபம் அதிகமாகி விட்டது.

"மரியாதை கொடுத்துதானம்மா மரியாதை வாங்கவேணும்" என்று அவர் ஆரம்பித்துச் சடசடப் பொரிந்து தள்ளத் தொடங்கி விட்டார்.

"நீர் வேலைக்கு வேண்டியதில்லை. வெளியே போகலாம்" என்று கோபத்துடன் அதட்டிப் பார்த்தாள் காமாட்சியம்மாள்.

"போகிறதா? 'டெம்பரவரி'யாக அமர்த்திக் கொள்கிற விசேஷ வீட்டுத் தவசிப்பிள்ளை இல்லேம்மா நான். எப்படிப் போவேன்? அதெல்லாம் நம்மகிட்ட நடக்காது" என்று கூப்பாடு போட்டுக் கத்திவிட்டுச் சமையல் வேலையைப் பார்க்கச் சென்றார் முத்துசாமி.

அடுப்பு சரியாக எரியவில்லையென்று வீசம்படி எண்ணெயை எடுத்து அடுப்பில் கொட்டி

னார். காமாட்சியம்மாளின் எரிந்து கொண்டிருந்த உள்ளத்துக்கு எண்ணெய் வார்ப்பது போல இருந்தது அது. அளவுகடந்த ஆத்திரம் வந்தது. "அடுப்பிலே ஏன் ஐயா எண்ணெயை விடுறுகிறீர்?" என்று அவரிடம் அதிகாரமாகக் கேட்பதற்கு அம்மாளுக்குத் துணிவு ஏற்படவில்லை; 'உம் கடவுளே!' என்று முனகினாள். திரும்பவும், கடுகு டப்பாவை எடுக்கும்போதே நழுவ விட்டார் முத்துசாமி. சமையலறை முழுதும் கடுகு சிதறியது.

காமாட்சியம்மாள் வெகு சிரமத்துடன் எழுந்து, விளக்குமாற்றை எடுத்து, சமையலறை முழுதும் சிதறிக்கிடந்த கடுகைக் கூட்டி அள்ளினாள். சமையலில் எத்தனை வித கலைக்கேடுகள் செய்ய முடியுமோ, அத்தனையும் செய்து வைத்தார் முத்துசாமி.

ஒருமாத காலத்துக்குள் தம்மை வேலையை விட்டு விலக்க முடியாது என்று அவர் ஏதோ சமையல் தொழிலாளர் சட்டம் போல உறுதியாகக் கூறிவிட்டதால், அம்மாள் அந்த ஒரு மாதம்வரை வாயைத் திறப்பதில்லை என்று தீர்மானித்திருந்தாள். அடுத்த மாதம் பிறந்ததும் நல்லபடியாக அவரைப் போகச் சொல்வதற்கு நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் ஏதோ தகராறு நடந்தபோது, "நீங்களெல்லாம் தவசிப்பிள்ளை வைச்சு வேலை வாங்கறதுக்கு லாயக்கில்லாதவங்க" என்று அவர் எடுத்தெறிந்து பேசி விட்டார்.

"ஒரு வருஷம் இரண்டு வருஷமில்லே; இருபது வருஷங்களாக நமசிவாயம் பிள்ளைன்னு ஒரு தங்கமான மனுஷர் இருந்து வேலை பார்த்தார், இந்த வீட்டிலே. அவரைப் போல விசுவாசமும் பணிவும் உள்ள தவசிப்பிள்ளையை இந்த உலகத்திலேயே நான் பார்த்ததில்லே. அப்பேர்ப்பட்ட உத்தமரை வேண்டாம்னு விரட்டின பாவத்துக்குத்தான் இப்படி நல்ல சோறு கிடைக்காமல் திண்டாடுகிறேன் நான்" என்று தன் மனத்தில் இருந்த ஆத்திரத்தைக் கொட்டினாள்.

"தவசிப்பிள்ளைகளிலே, அவரை மாதிரி மழுங்கல் பேர்வழி ஒருத்தர் கூட இருக்க மாட்டாங்க இந்த உலகத்திலே. வேணுமானால் அவரையே நீங்க திரும்ப வேலைக்கு அமர்த்திக் கொள்கிறதுதானே?" என்று அலட்சியமாகப் பதிலளித்தார் முத்துசாமி.

"அவரைக் கண்டேனானால் நான் எட்டு நமஸ்காரம் பண்ணி வேலைக்கு வரும்படியாகக் கேட்டுக் கொள்வேன், பாவி மனுஷன் எங்கே போயிருக்கிறார்னு தெரியாமல்தானே நான் சங்கடப்படுகிறேன்?"

"சங்கடம் எதற்கு? பண்ணையார் வீட்டிலே தான் அவரு வேலை பார்க்கிறாப்போல இருக்குது. அப்பேர்ப்பட்ட நல்ல இடத்தை விட்டுட்டு வருவாரா அவரு? அவங்க வீட்டிலே தவசிப்பிள்ளையை எவ்வளவு கௌரவமாக நடத்துவாங்க, தெரியுமா?"

நமசிவாயம் பிள்ளை இருக்குமிடம் இவர் மூலமாகத் தெரிந்தவுடன் மகிழ்ச்சி பிறந்தது, காமாட்சியம்மாளுக்கு. "ஐயா! நீங்க இப்பொழுதே போகிறதானாலும் நான் ஒரு மாசச் சம்பளத்தைக் கையிலே கொடுத்துடறேன். வேலையை விட்டுப் போயிடறீங்களா?" என்று அனுதாபமாகக் கேட்டாள்.

"மீதி நாட்களுக்கு நான் எங்கே போய்ச் சாப்பிடுகிறது அம்மா? கிளப்புச் சாப்பாடு நமக்கு ஒத்துக்கொள்ளாது. இன்னும் பன்னிரண்டு நாட்கள் இங்கே வேலை பார்த்து விட்டுப் போயிடறேன்" என்று வெறுப்பாகவும் அலட்சியமாகவும் பேச்சை முடித்து விட்டார் முத்துசாமி.

அவர் நினைத்தபடியே அன்று மாலையில் காமாட்சியம்மாள், பக்கத்து வீட்டுப் பையனை அனுப்பிப் பண்ணையார் வீட்டிலிருந்த நமசிவாயத்தை வரவழைத்தாள். நமசிவாயம் வந்திருக்கிறார் என்று தெரிந்தவுடனேயே முத்துசாமி ஒன்றுமறியாதவர் போல வீட்டின் பின்பக்கமாகச் சென்று ஒரு மறைவிடத்தில் நின்று கொண்டு காமாட்சியம்மாளும் அவரும் பேசுவதை உற்றுக் கவனித்தார்.

பழைய தவசிப்பிள்ளையைப் பார்த்ததுமே அம்மாளுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. "இந்த வீட்டிலே என் சொந்தத் தம்பி மாதிரி இருந்த மனுஷர் நீங்க. நான் தான் புத்தியில்லாமல் போகச் சொன்னேன், கோபத்திலே. இந்த வீட்டை விட்டுப் போக உங்களுக்கு எப்படி மனம் துணிந்தது? இதற்கு முன்னே நான் பேசினதை யெல்லாம் மறந்து விட்டு, உடனே நம்ம வீட்டுக்கு வேலைக்கு வந்துடணும் நீங்க. நிழலின் அருமை வெயிலிலேதான் தெரியும் என்கிற பாடம் எனக்கு நல்லாப் புரிஞ்சது, தவசிப் பிள்ளை!" என்று அழாத குறையாகப் பேசினாள்.

நமசிவாயம்பிள்ளை அதிர்ச்சியுற்றவர் போல ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தார். தம் எஜமானரின் வீட்டு அம்மாள் தம்மிடம் உள்ளம் உருகப் பேசும் நிலையை அவரால் தாங்க முடியவில்லை. "அடுத்த மாதம் பிறந்தவுடனே இங்கே வந்து விடுகிறேன்" என்று வாக்களித்தார். அம்மாள் அதைக் கேட்டு ஆனந்தமடைந்தாள்.

மறுநாள் காலையிலேயே முத்துசாமி பண்ணையார் வீட்டு வேலையைப் பழையபடியே போய் ஒப்புக் கொண்டு விட்டார். நண்பர் நமசிவாயத்தை அழைத்து, "என்னுடைய சூழ்ச்சி பலித்து விட்டது, அண்ணாச்சி! இப்படி ஒரு அனுபவம் கொடுத்தால்தான் உங்க பெருமை அம்மாளுக்கு நல்லாவிளங்கும். இனிமேல் நீங்க பழைய இடத்துக்குப் போய் நிரந்தரமாக வேலை பார்க்கலாம். காமாட்சியம்மாள் உங்களை ரொம்ப மரியாதையாக நடத்துவாங்க" என்று சந்தோஷத்தோடு கூறினார்.

சகத் தொழிலாளியான முத்துசாமி, தமக்காக எடுத்துக்கொண்ட சிரமமும், கையாண்ட தந்திரமும் அப்பொழுதுதான் நமசிவாயத்துக்கு விளங்கின. அப்படியே அவரை மார்போடு தழுவிக் கொண்டு, "தம்பி! நீங்க செய்த இந்த சூட்சுமம் எனக்கு இதுவரைக்கும் புரியவில்லே" என்று கூறி உள்ளம் குளிரச் சிரித்து மகிழ்ந்தார்.

"அதிருக்கட்டும், அண்ணாச்சி! நான் பொல்லாதவன் இல்லேன்னு காமாட்சியம்மாளிடத்திலே சொல்லி விடாதீங்க. நம்ம சூட்டு வெளிப்பட்டுப் போயிடும்" என்ற எச்சரிக்கையுடன் நமசிவாயத்தைப் பழைய இடத்துக்கு அனுப்பி வைத்தார் பண்ணையார் வீட்டுத் தவசிப்பிள்ளை முத்துசாமி!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon